விலை சதம் 25

# சுதந்திரன்
SUTANTIRAN

புத்தகம் 20—திருவள்ளுவர் ஆண்டு 1997 பங்குனி திங்கள் 11-ம் நாள் (25—3—57) சனிக்கிழமை துல்ஹஜ் 13 | இதழ் 40

# தி.மு.க.-எதிர்ப்பு பிரசாரத்திற்கு தமிழ் காங்கிரஸ் தூண்டுதல்

## தமிழரசாரை வெளியேற்ற எதிர்க்கட்சிகளுடன் சதி

தமிழரசுக் கட்சியை தேசிய அரசாங்கத்திலிருந்து வெளியேற்ற தமிழ் காங்கிரசும் சிறீலங்கா சுதந்திரக் கட்சியும் ஒரு கூட்டுத் திட்டத்தின் கீழ் வேலை செய்து வருவதாக அறியப்படுகிறது. தமிழ் நாட்டுத் திராவிட முன்னேற்றக்கழகத்துக்கும், தமிழரசுக் கட்சிக்குமிடையே நெருங்கிய தொடர்பு இருப்பதாக சுதந்திரக்கட்சி சிங்கள மக்களிடம் சமீபகாலமாக தீவிர பிரசாரத்திலீடுபட்டிருப்பதற்குக் காரணம் தமிழ் காங்கிரஸின் தூண்டுதலேயென்று அரசியல் வட்டாரங்களில் சொல்லப்படுகிறது. அதே சமயம் தேசிய அரசாங்கத்திலுள்ள பின்வரிசை எம்.பிகளிடமும் தமிழரசுக்கட்சிமேல் அவநம்பிக்கையையும்வெறுப்பையும் உண்டுபண்ணி தமிழரசுக்கட்சியை தேசிய அரசாங்கதிலிருந்து வெளியேற்ற வேண்டிய ஒரு நிர்ப்பந்த நிலைமையை ஏற்படுத்தவும் தமிழ் காங்கிரஸ் பிரமுகர்கள் சிலர் முயற்சியெடுத்து வருவதாக அறியப்படுகிறது.

தேசிய அரசாங்கம் தோன்றிய நாளிலிருந்து சுதந்திரக் கட்சிக்கும் தமிழ்காங்கிரசுக்குமிடையே இரகசிய தொடர்பு இருந்து வருவதைச்சுதந்திரன் ஏற்கனவே பல சந்தர்ப்பங்களில் அம்பலப்படுத்தியுள்ளது. சமீபகாலமாக சுதந்திரக்கட்கட்சிக்கும் தமிழ் காங்கிரசுக்கும் மிகவும் நெருங்கிய உறவு ஏற்பட்டிருக்கிற தென்றும், சுதந்திரக்கட்சியும் தமிழ் காங்கிரசும் ஒரு அடிப்படைத்திட்டத்துடன் கூட்டாக செயலாற்றி வருவதாகவும் தெரிகிறது. இந்த அடிப்படைத் திட்டம் தமிழரசுக் கட்சியை அரசாங்கத்திலிருந்து எப்படியும்வெளியேற்றி விடுவது என்பதுதான் என்றும் சொல்லப்படுகிறது.

தமிழ் நாட்டில் தி. மு. க. தேர்தலில்வெற்றிபெற்றதற்கு தமிழரசுத் தலைவர்கள் வாழ்த்துச்செய்திஅனுப்பியதைவைத்துக் கொண்டு தமிழரசுக் கட்சிக்கும், தி. மு. க.வுக்கும் இரகசியத் தொடர்பு உண்டென்றும், வெகுவிரைவில் ஈழத்தில் தி. மு. க. வின் உதவியுடன் தமிழரசுக் கட்சி தனி ராச்சியம் நிறுவிவிடுமென்றும் சுதந்திரக் கட்சி சிங்கள மக்களிடம் சூறுவளிப் பிரசாரம் செய்து தமிழரசுக் கட்சிமீது சிங்கள மக்களின் வெறுப்பையும்துவேஷத்தையும் ஏற்படுத்தி வருவது தெரிந்ததே. சுதந்திரக் கட்சியின் இந்தத் தீவிர பிரசாரத்துக்குக்காரணம் தமிழ்காங்கிரசின் தூண்டுதலேயென்றும் இப்பிரசாரத்தின் மூலம் தேசிய அரசாங்கத்திலிருந்து தமிழரசுக் கட்சியை வெளியேற்றும்படி ஒரு பொதுஜன நெருக்குதலை அரசாங்கத்துக்கு ஏற்படுத்துவதே அடிப்படைத் திட்டம் என்றும் தெரிகிறது. இத்திட்டம் சமீபத்தில் தமிழ் காங்கிரஸ், சுதந்திரக் கட்சிப் பிரமுகர்களால், உருவாக்கப்பட்டதென்று தெரிகிறது.

அதேசமயம் தமிழ்காங்கிரஸ்,தேசிய அரசாங்கத்திலுள் தமிழரசுக் கட்சிக்கு எதிரான

(8-ம் பக்கம் பார்க்க)

## இவர்கள் அதிர்ஷ்டசாலிகள்

சுதந்திரன் நடாத்திய தமிழ் நாட்டுத் தேர்தற் போட்டியில் "தமிழக முதலமைச்சர் யார்?" என்பதை சரியாக எழுதியனுப்பியவர்களில் பின்வரும் நேயர்கள் பரிசுக்குரியவர்களாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். அவர்களுக்கு எமது வாழ்த்துக்கள்! இப்போட்டியிற் கலந்துகொண்ட ஆயிரக்கணக்கான சுதந்திரன் வாசகர்களுக்கும் எமது நன்றி!

**முதல் பரிசு**
**ரூபா 100-00**
பெறுபவர்
'இதயசூரியன்',
மே/பா ஜே. சி. விக்டர்,
ஜெயசேகரா ஸ்டோர்ஸ்,
வெரலுகாமுல்ல, இறக்குவானை.

**2-வது பரிசு**
**ரூபா 50-00**
பெறுபவர்
எஸ். செபாரட்ணம்,
20/2, பெரி வீதி, சிலாபம்.

**3-வது பரிசு**
**ரூபா 25-00**
பெறுபவர்
வை. கனகரெத்தினம்,
37/14, கல்கந்த வீதி,
அணிவத்தை, கண்டி.

## இரட்டை வேடம் மாறவில்லை

சுயாதீனப் பத்திரிகைசமாஜம், ஒரே செய்தியை அதன் தமிழ் தினசரியான 'தினபதி'யில் ஒருவிதமாகவும், சிங்கள, ஆங்கிலத் தினசரிகளில் வேறுவிதமாகவும்வெளியிட்டு வருவதை சுதந்திரன் பலமுறை அம்பலப்படுத்தியிருக்கிறது. எனினும் இன்னும் அது தன் போக்கை மாற்றிக் கொள்ளவில்லையென்பதைசென்றவாரம்மேற்படி நிறுவனத்திலிருந்து வெளிவந்த ஆங்கில, தமிழ் தினசரிகள் ஒரே செய்தியை இருவிதமாகப் பிரசுரித்ததிலிருந்து அறிய முடிகிறது.

இம்மாதம் 17ந் திகதிவெளிவந்த 'தினபதி', 'தமிழ் பகுதிமட்டுமல்ல' என்ற தலைப்பின்கீழ் முதல் பக்கத்தில், நோட்டன் பிரிட்ஜ், கிரிவானவிய, அம்பகமுவ தெற்கு கிராமசபைத் தலைவருக்கு, தமிழ் மொழிச்சட்டம் வடக்கு, கிழக்குக்கு மட்டும் உரியதல்ல வென்றும், அது இலங்கைமுழுவதற்கும் உரியதென்றும் தமிழரசுத்தந்தை கடிதம் எழுதியிருப்பதாக ஒரு செய்தியை வெளியிட்டிருந்தது.

(9ம் பக்கம் பார்க்க)

## மட்டுநகருக்கு சிங்கள ஊழியர் வேண்டுமாம்

### எம். பி. கோரிக்கை: பிரதமர் நிராகரிப்பு

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள அரசாங்க அலுவலகங்களில் தற்போது கடமை புரியும் தமிழ் ஊழியர்கள் அநேகரை உடனடியாக இடமாற்றம் செய்து அந்த இடங்கள் சிங்கள ஊழியர்களைக் கொண்டு நிரப்பப்பட்டால், சிங்களம் மட்டும் சட்டத்தைச் சரியாக அமுல் நடத்த முடியும் என்று கல்குடா பிரதிநிதி திரு. தேவநாயகம் பிரதமரிடம் கடந்த வாரம் ஒரு யோசனையைச் சமர்ப்பித்ததாகவும், பிரதமர் அதனை முற்றாக நிராகரித்துவிட்டாரென்றும் அறியப்படுகிறது.

கல்குடா பா. உ. திரு.தேவநாயகம் கடந்த பொதுத் தேர்தலில் பா. உ. ஆகத் தெரிவு செய்யப்பட்ட நாள் முதல் மாறிமாறி அரசாங்க ஊழியர்களை இடமாற்றம் செய்வதில் மிக அக்கறை காட்டி வந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

(8-ம் பக்கம் பார்க்க)

## சுதந்திரக் கட்சிக்குள் புதிய கோஷம்

இலங்கையிலுள்ள சிறுபான்மை மக்களின் பிரச்சினைகள் சம்பந்தப்பட்ட மட்டில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி அதன் தற்போதைய கொள்கையை மாற்றிக் கொள்ள வேண்டும் என்று அக்கட்சிக்குள் இருக்கும் ஒரு கோஷ்டி தீவிரமாக வலியுறுத்தி வருவதாக தெரிகிறது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தனிச்சிங்கள கட்சி என்ற நிலையிலிருந்து தன்னை மாற்றிக் கொண்டு ஒரு தேசியக் கட்சியாக வளர வேண்டுமென்றும் அதற்காக அது தனது கொள்கையில் சிறிது மாற்றம்செய்து கொள்ள வேண்டுமென்றும் சுதந்திரக்கட்சிக்குள் ஒருகோஷ்டியினர் கட்சியின் தலைமைப் பீடத்தை வற்புறுத்தி வருவதாகத் தெரிகிறது.

சிறுபான்மை மக்களின்-குறிப்பாக தமிழர்களின் ஆதர

(9ம் பக்கம் பாக்க)

## இனத்தைப் பிளவுபடுத்த உதவினாராம்

யாழ்ப்பாணப் பிரதிநிதி திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலத்துக்குபாராட்டுக்கிடைத்திருக்கிறது. ஐ. நா. சென்று வந்ததற்குத்தானே என்கிறீர்களா? அதுதான் இல்லை. இந்து, கிறிஸ்தவ இஸ்லாமியர் என்ற பேதத்தை அகற்றி தமிழரசுக் கட்சி கட்டி எழுப்பிய தமிழ் பேசும் இனம் என்ற கோட்டையில் வெடிப்பு ஏற்படுத்திவிட்டாராம். அதற்காகத்தான் அவருக்கு பாராட்டு.

பாராட்டு வழங்கியவர்களில், குறிப்பிடக்கூடியவர்

(9-ம் பக்கம் பார்க்க)

மில்க் வைற்
நீல சோப், பார் சோப்
சீரான சலவைக்கேற்ற சிக்கனமான சோப்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**400 கோடி சொத்து ✿ 43 மனைவியர் ✿ 46 பேரப்பிள்ளைகள்**

# ஐதராபாத் நிசாம் - சில சுவையான தகவல்கள்

ஐதராபாத் நிசாமின் மறைவை, 'இந்திய வரலாற்றில் குறிப்பிட்ட ஒரு காலத்தின் கடைசி ஏடு' எனக் கூறலாம்.

ஆங்கில ஏகாதிபத்தியத்தின் ஆதரவில் கொடி கட்டி ஆண்ட 600-க்கு மேற்பட்ட இந்திய குறுநில மன்னர்களில் முதன்மையானவராக வாழ்ந்து கொண்டிருந்தார் நிசாம்!

இராஜப் பரம்பரையின் போலி கௌரவத்தை அதன் முழுப் பொருளோடு நிலைநிறுத்தி வந்த இந்திய அரசர்களில், நிசாம் கோபுரமாக விளங்கினார்.

உலகின் மிகப் பெரிய பணக்காரர்களில் நிசாமும் ஒருவராக இருந்ததனால், அரசப் பரம்பரையின் 'அந்தஸ்தை' கட்டிக் காப்பதில் அவருக்கு எவ்விதக் கஷ்டமும் இருக்கவில்லை!

செல்வத்தில் அவரை மிஞ்சும் ஒருவர்கூட இந்தியாவில் இல்லை!

தமது நாட்டின் மிகப் பெரிய பரப்பளவும், பணப்பெட்டியின் கனமும், 'சுதந்தர ஐதராபாத்' என்று குரலெழுப்ப—இந்தியச் சுதந்திரத்தின் போது—அவருக்குத் தைரிய மூட்டின!

இந்தியாவின் பல அரசர்களும், 1947-ல் இந்தியாவுடன் இணைய ஒப்புதல் தந்தபோது, இணைப்புச் சாசனத்தில் கையெழுத்திட நிசாம் மட்டும் ஒப்புக்கொள்ள வில்லை. இந்தியாவில் ஆங்கிலேயரின் அதிகாரம் முடிவுறும்போது, இந்தியச் சுதந்தரச் சட்டத்தின் விதிப்படி தாமும் சுதந்திரமடைந்துவிட்டதாகவும், இந்தியாவையும் பாகிஸ்தானையும் போலவே ஐதராபாத்தும் ஒரு சுதந்திர நாடென்றும், இந்த அந்தஸ்துடன் பிரிட்டிஷ் காமன்வெல்த்தில் தம்மையும் ஓர் உறுப்பினராக்க வேண்டும் என்றும் அவர் வாதாடினார்.

## அவரது செல்வம் அவருக்கே தெரியாது

நிசாமின் அதிகார நிழலில்—ரஜ்லி என்பவரின் தலைமையில் இந்தியாவுடன் ஐதராபாத்தை இணைப்பதற்கு எதிராக நடத்தப்பட்ட போராட்டமும், அதைத் தொடர்ந்து இந்தியாவின் 'இரும்பு மனிதர்' சர்தார் பட்டேல் 'இராணுவ நடவடிக்கை' எடுத்ததும் இந்தியச் சரித்திரத்தின் உணர்ச்சிகரமான ஓர் அத்தியாயமாகும்.

இராணுவ நடவடிக்கைக்குப் பிறகுதான் நிசாம், இந்தியாவுடன் இணைய ஒப்புக்கொண்டார்.

அதற்குப் பிறகு இந்திய அரசாங்கம், எவ்விதப் பகை போக்கும் காட்டாமல் மிகுந்த பெருந்தன்மையுடன் நிசாமிடம் நடந்து கொண்டது. அவரது அந்தஸ்துக்கு ஏற்ப ஆண்டுதோறும் அவருக்கு ஒருகோடி ரூபாய் தர இந்திய அரசால் முடிவுசெய்யப்பட்டது. வேறு எந்த அரசருக்கும் இவ்வளவு பெருந்தொகை அனுமதிக்கப்படவில்லை!

நிசாமின் செல்வத்தின் அளவு அவரைத் தவிர வேறு யாருக்கும் தெரியாது! அது 'ரூ. 800 கோடியாக இருக்கக் கூடும்' என்று 1944ல் பிரபல அமெரிக்க இதழ் 'ரீடர்ஸ்டைஜஸ்டு' குறிப்பிட்டிருந்தது.

ஆயினும், இந்தியா சுதந்தரம் அடைந்ததற்குப் பிறகு நிசாமின் செல்வம் குறைய ஆரம்பித்தது. 'சுதந்தர ஐதராபாத்' நிறுவும் எண்ணத்தில் அவர், ரூ. 40 கோடி செலவழித்திருக்கிறார் என்று சொல்லப்படுகிறது.

ஐதராபாத் இந்தியாவுடன் இணைந்ததற்குப் பிறகு நிசாமின் சொத்துக்கள் இரண்டு விதமாகப் பிரிக்கப்பட்டன. அவரது தனிச் சொத்துக்கள் ஒருவகையாகவும், அரசாங்க வருமானத்தால் ஏற்பட்ட சொத்துக்கள் இன்னொரு வகையாகவும் தரம் பிரிக்கப்பட்டது.

தனிச் சொத்து, அவருக்கே அளிக்கப்பட்டது. ஒரு கோடி ரூபாய் உதவிப் பணத்துடன். அவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட நிலங்களுக்கு நஷ்டஈடும் அளிக்கப்பட்டிருக்கிறது.

## இன்றுள்ள சொத்துக்கள்

இன்று நிசாமின் தனிச் சொத்து மதிப்பு ரூ. 135 கோடியாக இருக்குமென்று கணக்கிடப்பட்டிருக்கிறது. இதில் ரூ. 35 கோடி பணமாகவும், ரூ. 50 கோடி இரத்தினங்களாகவும், நகைகளாகவும், ரூ. 50 கோடி அரசாங்கக் கடன் பத்திரங்களாகவும் இருக்கிறது.

இதல்லாமல், அவரது குடும்பத்தினருக்காக ரூ. 30 கோடியில் ஒரு டிரஸ்டும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

இரத்தினங்களில் பலவும் பம்பாயில் பாங்கி ஒன்றில் வைக்கப்பட்டுள்ளன.

திட்டப்படாத வைரக் கற்களைத் தம்மிடமே அவர் வைத்துக்கொண்டிருந்தார். இவைகளில் 150 காரட் எடையும் ரூ. 1½ கோடி மதிப்புமுடைய 'ஜேக்கப்' என்னும் வைரக் கல்லும், 277 காரட் எடையுள்ள 'நிசாம் வைரக் கல்'லும் உள்ளன.

விலை மதிப்பற்ற கலைப் பொருட்களையும் அவர் வைத்துக்கொண்டிருக்கிறார்.

அவரிடமுள்ள இரத்தினப் பொருட்கள், உலகின் சிறந்தனவற்றில் சிலவாகும்.

நிசாமின் 'பலூக் நூமா' என்னும் வரவேற்பு அறையில் மட்டும் மூன்றுகோடி ரூபாய் மதிப்புள்ள அலங்காரப் பொருட்கள் உள்ளனவாம்.

## எலி கடித்த 4 இலட்சம் ரூபா

சில நாட்களுக்குமுன் 'இலண்டன் மெயில்' என்னும் பிரிட்டிஷ் பத்திரிகை, நிசாமின் பாதுகாப்பிலிருந்த பணத்தில், ரூ. 4 கோடி மதிப்புள்ள நோட்டுக்களை எலிகள் நாசப்படுத்தியிருப்பதாகச் செய்தி வெளியிட்டிருந்தது. இதற்குப் பதிலாக நல்ல நோட்டுக்கள் தரவேண்டுமென்ற நிசாமின் வேண்டுகோளை, இந்திய அரசு நிராகரித்துவிட்டது!

இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் ஏராளமான அரண்மனைகளை வைத்துக்கொண்டிருந்த நிசாமுக்கு, தற்போது ஐதராபாத்தில் மூன்று அரண்மனைகளும், பல பங்களாக்களும் மட்டுந்தான் உள்ளன.

இந்திய அரசால் கைப்பற்றப்பட்டது போக, 20,143 ஏக்கர் நிலத்தைத் தம்மிடமும், 3,854 ஏக்கர் நிலத்தைக் குடியானவர்களிடமும் நிசாம் வைத்திருக்கிறார். இந்தியாவின் மிகப் பெரிய நிலக்கிழாரும் நிசாமே ஆவார்.

இத்தனை செல்வத்துக்கு அதிபதியாக இருந்தவரானாலும், தனிப்பட்ட முறையில் நிசாம் எளிமையான வாழ்க்கையைக் கடைப்பிடித்திருந்தார்.

## கொடை வள்ளல்

நிசாம், ஒரு கொடைவள்ளலும் ஆவார். சில ஆண்டுகட்கு முன் வினோபாபாவேயின் நிலக் கொடை தியாகத்துக்கு நிசாம் 3,700 ஏக்கர் நிலத்தை அளித்தார்.

பலவிதமான ரோல்ஸ் ராய்ஸ் கார்களை வைத்திருந்தாலும், 1930 மாடல் கார் ஒன்றில்தான் அவர் அண்மைக்காலம் வரையில் பிரயாணம் செய்துகொண்டிருந்தார்.

ஏறக்குறைய ரூ. 30 கோடி அளவுக்கான 28 பொதுநல டிரஸ்டுக்களை அவர் ஏற்படுத்தியிருக்கிறார்; இவைகளில் ரூ. 5 கோடி மதிப்புடைய ஒரு டிரஸ்ட் இலவச நிறுவனமாகும்.

ஐதராபாத்திலும், வெளியிடங்களிலும் உள்ள முஸ்லீம் பள்ளிகளின் பராமரிப்புக்காகவும், ஹிஜாவிலும் மக்காவிலும் தொழுகைக்காகவும் ரூ. 40 இலட்சமும், உருதுமொழியிலும் பாரசீக மொழியிலும் தாம் எழுதிய கவிதைகளை பதிப்பித்து வெளியிட ரூ. 1¼ இலட்சமும் வேறொரு நிறுவனத்திற்கு ரூ. 2 இலட்சமும் அவரால் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

1947-க்குப் பிறகும் ஏறக்குறைய ரூ. 3¼ கோடியை அவர் பல நிறுவனங்களுக்கும் அளித்துள்ளார்.

உஸ்மானியா பல்கலைக்கழகத்துக்கு மட்டும் ரூ. 3 கோடியை அவர் நன்கொடையாக அளித்திருக்கிறார்.

பாலஸ்தீன் அகதிகள் நிவாரணத்திற்காக ரூ. [illegible] இலட்சமும் [illegible] ரூ. 5 இலட்சம் [illegible]கப்பட்டிருக்கிறது.

உதவிப் பணமாகத் தமக்குக் கிடைக்கும் ஒரு கோடி ரூபாயிலிருந்து ரூ. 25 இலட்சத்தை, ஆந்திர அரசுக்குத் தந்து விடுகிறார்.

நிசாமின் செலவின் பெரும் பகுதி, அவரது குடும்பத்துக்காகத்தான் செலவிடப்படுகிறது.

அவரது குடும்ப அமைப்பு வேடிக்கையானது.

அவருக்கு 43 மனைவிமார் இருக்கிறார்கள்! அவர்களில் மூவர் மட்டுமே சட்டபூர்வமானவர்கள்!

36 பேர்களின் தந்தையான அவருக்கு 46 பேரக் குழந்தைகள் உள்ளனர்!

அவரது 8 மகன்களின் மனைவிமார்களான 16 மருமகள்களும் இருக்கின்றனர்!

இவர்களன்றி அரண்மனைப் பொறுப்பாளர்களான 100-க்கு மேற்பட்ட பணியாளர்களும் அவரது குடும்ப உறுப்பினர்கள் போலவே வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

இவர்கள் ஒவ்வொருவருக்கும் மூன்று நான்கு வேலையாட்கள் உள்ளனர்; இவர்களின் நாட் செலவுக்கு மட்டும் ரூ. 20 இலட்சம் தேவைப்படுகிறதாம்! இந்தச் செலவுக்கணக்கை அவர் மிகவும் கண்டிப்பாகவே அமுல் நடத்திக்கொண்டிருந்தார்.

அரசு தரும் உதவிப் பணத்திலிருந்து ரூ. 6 இலட்சம் அவரது மூத்த மகனுக்கும், ரூ. 4 இலட்சம் இரண்டாவது மகனுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது. மூத்த பேரனுக்கு ரூ. 1½ இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

## வாரிசு

மூத்த பேரனான முக்ரம்ஜாவை, நிசாம், தமது வாரிசாகத் தேர்ந்தெடுத்திருக்கிறார்.

மூத்த மகன் பெரார் ராஜகுமாரன் பொறுப்பற்றவராம்; உதவிப் பணத்திலிருந்து இவருக்குப் பெருந்தொகை அனுமதிக்கப்பட்டும், கடந்த 17 ஆண்டுகளுக்குள் இவர், ரூ. 5 கோடிக்குமேல் கடன்பட்டிருக்கிறாராம்! இத்தொகை முழுவதும், நிசாமால் திருப்பித் தரப்பட்டிருக்கிறது!

இந்தக் குடும்பச் செலவைத் தவிர தமது பரம்பரையைச் சேர்ந்த 'சாகேப் சாத'மாரின் செலவையும் நிசாம் ஏற்கவேண்டியிருந்தது. இவர்களில் மாதந்தோறும் ரூ. 25,000-த்திலிருந்து ரூ. 46 வரை உதவி பெறுபவர்கள் இருக்கின்றனர்.

சுமார் 3000 பேர் அடங்கிய ஓர் 'இராணு'வத்தையும் நிசாம் வைத்துக்கொண்டிருக்கிறார்!

இந்தியச் சுதந்திரத்திற்குப் பிறகு, எல்லோரையும்போலவே புதிய தேசிய வாழ்க்கையுடன் ஒத்துப்போக நிசாம் விரும்பவில்லை. தமது ஒளிமயமான பழைய காலத்தை எண்ணி எண்ணி மனம் வருந்தி வாழ்ந்துகொண்டிருந்தார் நிசாம்!

## நிசாமின் அதிர்ச்சி!

யாராலும் பார்க்கமுடியாமல்-யாரையும் பார்க்க விரும்பாமல் தமது மாளிகையில் ஒரு தனி வாழ்க்கையை அவர் மேற்கொண்டிருந்தார் என்றே சொல்லலாம்.

எப்பொழுதாவது சில பழைய மன்னர்கள் அவரைச் சந்தித்துக் கொண்டிருந்தனர்.

1952-ல் அவர் டெல்லிக்குச்சென்றபோது பண்டித நேரு அளித்த ஒரு விருந்தில் கலந்துகொண்ட பரோடா மன்னரும், ஜெய்ப்பூர் மன்னரும் இராசப் பெருமையைக் குறிக்கும் தலைப்பாகை அணியாமல் கலந்துகொண்டது நிசாமை அதிர்ச்சியடையச் செய்ததாம்!

இப்படி சொந்த, அரண்மனையில் பழைய அரச பெருமையின் மகத்துவத்தை எண்ணிக் கனவுலகில் வாழ்ந்துகொண்டிருந்த நிசாம் தமது 84 வது வயதில் இயற்கையெய்தியதோடு இந்தியாவின் அரசியல் சரித்திரத்தில் எண்ணப்பட்ட ஒரு காலகட்டமும், அவரது கருத்துப்படி நிசாமின் இராச வாழ்வும் மறைந்துவிட்டது என்றே கூறலாம்!

ஆதாரம்: 'மாத்ருபூமி'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




திருவாளர்
குயுக்தியார்
மே பா சுதந்திரன்
194, ஏ பண்டாரநாயக்கா வீதி,
கொழும்பு-12

எஸ். எஸ். நாதன்,
ஏறுவூர்-4.

கே: தமிழகத்தில் நடைபெறும் தி. மு. கழக ஆட்சியைப்பற்றி கனம் சிறிமாவோ அம்மையார் தேர்தல் கூட்டங்களில் பிதற்றுவது ஏன்?

ப: சிங்கள மக்களின் வாக்குகளைக் கைப்பற்றுவதற்காக.

கே: கிழக்கு மாகாணத்தில் 'இஸ்லாமிய சோசலிஸ்ட் முன்னணி' என்ற பெயரில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஆதரவான கிளைகள் ஸ்தாபிக்கப்படுவது எதற்காக?

ப: அடுத்த பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்கு முஸ்லிம் மக்களை வளைத்துக் கொள்வதற்காக.

ஃ

நுரையூர் கிருஷ்ணு,
கொம்மாதுறை.

கே: 'உலகிலே உண்மையான கம்யூனிசம் எந்த நாட்டில் இருக்கின்றது?'

ப: உலகில் எந்த நாட்டிலுமே கம்யூனிஸம் இன்னும் ஏற்படவில்லை. ரஷியா, கிழக்கு ஐரோப்பிய நாடுகள், கியூபா, சீனு ஆகியவை அந்த நிலையை நோக்கி இன்னும் முன்னேறிக் கொண்டுதான் இருக்கின்றன.

ஃ

ஜோ.
மக்கள் கிநெனியா.

கே: என் அத்தை மகனை எனக்கு திருமணம் செய்ய என் சகோதரர்கள் ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் என் மனமோ வேறிடத்தில்! சகோதரர்களை எதிர்ப்பதா? காதலை துறப்பதா?

ப: சகோதரர்களிடம் நேரடியாகவோ ஒரு குடும்பப் பெரியார் மூலமாகவோ உங்களின் கருத்தைக்கூறி, அவர்களுடன் தெளிவாக விவாதித்து பிரச்சினைக்கு ஒரு சுமுக முடிவு காண்பதே அறிவுடமை.

ஃ

சழத்துமணி,
யாழ்ப்பாணம்.

கே: மூதூர் மஜீத் இங்கேஒரு கூட்டத்தில் 'முஸ்லிம்களின்தாய் மொழிதமிழே. கலாசாரமொழி அரபு' எனக் கூறி இருக்கிறேரே?

ப: அவர் கூற்று சரியே! தமிழகத்தின் கலாசார மொழியை 'அரபுத் தமிழ்' என்று கூறுகின்றனர். ஆனால் அவருடைய கட்சியைச்சேர்ந்த ஜனுப் பதியுதீன் மாமூத் முஸ்லிம்களின் தாய்மொழி சிங்களம் என்று கூறுகிறரே! இதில் அவர்கள் இருவருக்கும் மோதுதலோ?

கே: எதிர்க்கட்சியினர் வட பகுதிக்கு வந்து போவதின் அந்தரங்கம் என்ன?

ப: வடபகுதி இடதுபக்கம் சாய்ந்துவருகிறது என்பது அவர்கள் புதிதாகக் கண்டுபிடித்த சித்தாந்தம். இந்தத் தவருன மதிப்பீடே அவர்களின் புதிய படையெடுப்புக்குக் காரணமாகும்.

ஃ

இ. நா. மணி,
தாழங்குடா.

கே: என் காதலிக்கு எம். ஜி. ஆர். பைத்தியம் பிடித்துவிட்டது. போக்குவதற்கு ஒரு வழி சொல்லுங்கள்?

ப: அங்கொடை என்னுமிடத்துக்கு அழைத்துச் செல்லுங்கள்! பைத்தியம் நீங்கிவிடும்.

ஃ

எஸ். எம். ஏ. காதர்,
மிருவோடை

கே: மாவட்டசபைகள் அமைக்கப்பட்டால் முஸ்லிம்கள் பாதிக்கப்பட்ட மாட்டார்கள் என்பதற்கு ஆதாரம் என்ன?

ப: பாதிக்கப்படுவார்கள் என்பதற்கு ஆதாரம் என்ன?

ஃ

ஆர். கண்ணதாசன்,
நீர்கொழும்பு

கே: காலையில் கல்வி கற்பிக்கச் செல்லும் ஆசிரியர் மாலையில் கசிப்புப் போத்தலுடன் வீடு வருகிறுரே ஏன்?

ப: விஸ்கிப் போத்தலுடன் வீடு வருவதற்குப் போதுமான சம்பளம் அவருக்குக் கொடுக்கப்படாததால்......

கே: மனிதனை ஏன் மரத்துக்கு மரம் தாவும் குரங்குக்கு ஒப்பிடுகிறுர்கள்?

ப: குரங்கைப் போன்ற மனம் அவனுக்கு இருப்பதால்.

ஃ

எம். ஜீ. பிரியன்,
ஏறுவூர்.

கே: எம். ஜீ. ஆர். மாண்டு போனால் நானும் மாண்டு போவேன்.

ப: அப்படியா? ஆனால் நீங்கள் மாண்டுபோனால் அவர் மாளமாட்டார்.

ஃ

ஆர். பாலகிருஷ்ணன்,
மாத்தளை.

கே: குயுக்தியாரே, தாங்கள் இளைஞரா? அல்லது கிழவனா?

ப: உடலில் கிழவன், உள்ளத்தில் இளைஞன்!

ஃ

சிவானந்தன்,
காங்கேசன்துறை.

கே: நான் பக்கத்துவீடுகளுக்குப் போக எனது பெற்ரேர் தடை விதிக்கிருர்கள். ஆனால் அங்கே இருக்கும் பெண்கள் எங்கள் வீட்டுக்குள் சுதந்திரமாக வந்து போகிருர்கள். இதனால் எனது உள்ளம் பாதிக்கப்படுகிறது. இதை எங்ஙனம் பெற்ரேருக்கு எடுத்துக் கூறுவது?

ப: பெற்ரேருக்குகூறவேண்டாம். சலனமடையும் உங்களின் உள்ளத்துக்குசற்றுஉறுதியூட்டினலே போதுமானது.

ஃ

மு. கருணநிதி,
ஏழாலை மேற்கு.

கே: காமராஜரின் தோல்வியைப்பற்றி தங்கள் கருத்து என்ன?

ப: எவ்வளவு பெரிய தலைவராக இருந்தாலும் தேர்தல் சமயத்திலாவது தங்களை வந்து நேரிடையாகச சந்திக்காவிட்டால் வோட்டர்மகா ஜனங்கள் அவரைத் தோற்கடித்து விடுவார்கள்என்பதே என கருத்து.

கே: தி. மு. க. பற்றி தங்கள் அபிப்பிராயம் என்ன?

ப: தி. மு. க. வலதுசாரியுமல்ல இடதுசாரியுமல்ல என்கிறார் அண்ணு. ஆகையாற்தான் அதனை நடுவாந்தரக் கட்சி (Centrist Party) என்றும் ஆனால் அதுவலதுபக்கம் திரும்பாத திருமபுப் பார்த்துக் கொண்டு இடதுபக்கம் ஓடுகிற தென்றும ஓர் அரசியல் மாணவர் சுதந்திரனல் விமரிசனம் எழுதியிருந்தார். எனது கருத்தும் அதுவே.

கே: மு. கருணநிதியை பற்றியும், என்னைபபற்றியும் சிறிது கூறுங்கள் பார்ப்போம்?

ப: அவர் சென்னை அமைச்சர் கலைஞர் கருணநிதி—நீங்கள் 'டுப்ளிகேட்' கருணநிதி.

கே: மந்திரிகள் யாவரும் 500 ரூபா தான் சம்பளமாக எடுப்போமென்று அண்ணுதுரை கூறுகின்ருரே இதைப்பற்றி குயுக்தி மாமாவின் அபிப்பிராயம் என்ன?

ப: அம்மாதிரி இலங்கைமந்திரிகளின் சம்பளத்தையும் சரி பாதியாகக் குறைத்துவிட வேண்டுமென்பதுதான் என் கருத்து.

கே: குயுக்தி மாமாவின் மகன் இலங்கைப் பிரதமராக வந்தால்?

ப: அரிசி ரூபாய்க்கு ஆறு கொத்து கிடைக்கும்.

த. கா.,
கரவெட்டி.

கே: 29-வது சரத்து அரசியல் சட்டத்தில் இடம்பெற்றது எப்படி?

ப: கொழும்பு அதிமேற்றிராணி ஆண்டகையின் கோரிக்கையின்மீதும பெரிய சேனநாயக்காவின் இணக்கத்தின் மீதும் இடம்பெற்றது.

கே: திரு. பொ., சிறிமா—சாத்திரி ஒப்பந்த அமுல் சட்டத்தை ஆதரித்தது ஏன்?

ப: அவருடைய சொற்களில் கூறவேண்டுமானல், துரோகம் செய்வதற்காக.

கே: திரு. பொ.வின் அடுத்த திட்டம் என்னவாயிருக்கும்?

ப: முன்பு ஒரு திட்டம் இருந்திருந்தாலல்லவா அடுத்த திட்டம் என்ன என்று கேட்க முடியும்.

கே: தமிழ்பேசும் மக்களின் உயர்தரக் கல்வி பிரச்சினையுடன் திரு. பொ. இந்துசமயத்தையும் திரு. இராமநாதனின் பெயரையும் இணைக்க முயலுவது ஏன்?

ப: கலாசாரம் மட்டுமே உயர்தரக் கல்வியென்பது அவர் அண்மையில் கண்டுபிடித்த சாதனையாக இருப்பது தான் காரணம்.

ஃ

சு. மனேகரன்,
இறத்தோட்டை.

கே: நமது தேவைகள், அபிலாசைகளை நன்குணர்ந்த கடவுளிடம் அவற்றைக்கோரி வழிபாடு நடத்துவது அவசியமா?

ப: அழுத பிள்ளைக்குத் தான் பால் கிடைக்கும்.

கே: இன்றைய நாகரிக உலகில் புராணங்கள்—இதிகாசங்களின் பிரத்தியட்சமான நற்பலன்கள் எவை?

ப: வாழ்க்கையைச் சீர்படுத்த அவை வழிகாட்டும்.

ஃ

வா. ஜெயரட்ணம்,
கண்டி.

கே: விருதுநகர் தேர்தல் முடிவையும் இலங்கைகொலன்ஞவை தேர்தல் முடிவையும் பார்க்கும் போது தாங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

ப: விருதுநகர் தேர்தலில் தி. மு. க. வென்றது. அந்த வெற்றியை முக்கிய பிரச்சினையாக மக்கள் முன் வைத்து சுதந்திரக்கட்சிகொலன்ஞவையில் வென்றது.

ஃ

ஆனந்தசுப்பிரமணியம்,
நீர்கொழும்பு.

கே: மனிதனை ஏன் மரத்துக்கு மரம் தாவும் குரங்குக்கு ஒப்பிடுகிறுர்கள்?

ப: மனிதனின் மூதாதை குரங்கு என்பது ஒரு சித்தாந்தம். அவனின் மனதும் குரங்கைப்போல ஒன்றிலிருந்து மற்றென்றுக்குத் தாவிக்கொண்டிருக்கிறது. இதுதான் மனிதனை குரங்குக்கு ஒப்பிடக்காரணம்! கட்சிவிட்டு கட்சிக்குத் தாவும் மனிதனையும் குரங்கு என்று கூறலாம்.



### போர்க் குரல்!

பெண்கள் ஆபாசமான உடையணிந்து வேலைக்கு வருவதை ஹரியானு அரசாங்கம் தடை செய்தது.

—செய்தி.

—பெண்களின் இந்த 'அடிப்படை' உரிமையை தடை செய்வதை எதிர்த்து வாலிபப் பட்டாளம் போர்க் குரல் எழுப்பலாம்.'

### இவர் எங்கு போனுர்?

முஸ்லிம்களை தமிழரசுக் கட்சி மறந்து விட்டது.

—உடுப்பிட்டி எம். பி.

—தமிழரசுக்கட்சி இருக்கட்டும், முஸ்லிம் பல்கலைக்கழக விவாதத்தின்போது இவர் எங்குபோய் ஒளிந்துகொண்டாராம் என்று கேட்கிருர் ஒரு முஸ்லிம்.

### டைனமைட்!

'டைனமைட்' வைத்து மீன் பிடிப்போர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

—செய்தி.

—இதைக் கேட்டதும் 'டைனமைட்' வைத்து மீன் பிடிப்போருக்கு 'டைனமைட்' வெடித்த அதிர்ச்சி ஏற்பட்டிருக்கலாம்.

### அர்த்தம் என்ன?

தெவிநுவரையில் சுதந்திரக்கட்சி மீண்டும் வெற்றி பெற்றது.

—செய்தி.

—தி. மு. க. புச்சாண்டிசிங்களமக்களிடம் நன்ருக வேலை செய்கிறது என்பது தான் இதன் கருத்து என்கிருர் ஒரு நடுநிலைமை அரசியல்வாதி.

### அனுபவ பூர்வமோ?

தமிழ் மக்களை நீண்டகாலத்துக்கு ஏமாற்ற முடியாது.

—ஜீ. ஜீ.

—அனுபவ பூர்வமாககண்டறிந்த உண்மையை வெளியிடுக்ருரோ?

### கூண்டு கஜனம்!

காங்கிரஸ் கூண்டுப்புலியாகி விட்டது.

—ராஜாஜீ.

—கூண்டில் பழுது வராமல் பார்த்துக்கொள்ளத் தவறினுல் புலி மீண்டும் கூண்டை விட்டு தப்பியோடலாம்.





# அச்சகத்தோரே!
# அச்சம் வேண்டாம்!!

இறக்குமதிக் கட்டுப்பாட்டினுல் புதிய அச்சுக்களை வாங்க முடியவில்லையே என்று ஏங்க வேண்டாம்

இறக்குமதி அச்சுக்களை விட ஏற்றமிகு அச்சுக்களை இலங்கையிலே வார்த்துக் கொடுக்கின்ருேம.

புதிய தமிழ் ஆங்கில அச்சுக்கள்

விபரங்களுக்கு

**சுதந்திரன் அச்சுவார்ப்பகம்**

194 ஏ. பண்டாரநாயக்கா வீதி,
கொழும்பு-12

தொலைபேசி: 3411 த. பெ. 1183


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தமிழர் நலனை தமிழரசார் பேணவில்லையாம்

## உலகம் சுற்றியவர் ஒப்பாரி வைக்கிறார்

அன்னையொருத்தி மிகக் கடினமான நோயால் பீடிக்கப்பட்டு பால்போல் வெளுத்த தோற்றத்தினளாய், நூல்போல் இளைத்து கட்டிலில் கிடக்கிறாள். அவளுக்குற்ற நோய் கண்டு இந்நேரத்தில் ஊரிலிருந்தால் தாய்க்கு ஏதாவது பணிவிடை செய்ய வேண்டிவருமே என்ற காரணத்தால், 'நைசாக' ஊரைவிட்டு உலகம் சுற்ற கிளம்புகிறான் ஒரு மகன். ஆனால் மற்றவனோ அன்னையின்கூட இருந்து அவள்படும் வேதனையை தான்படும் வேதனையாக கருதி, அவளது நோயைச் சிறுகச் சிறுக மாற்றும் பணியில் ஈடுபடுகிறான். அன்னையின் நோயைக் குணப்படுத்த அவன் பட்ட கஷ்டங்கள், செய்த தியாகங்கள் சொல்லுந்தரமன்று. அன்னை ஓரளவு சுகப்பட்டு எழுந்துவிட்டாள் என்று அறிந்ததும், உலகம் சுற்றசென்ற மகன் ஊர் திரும்புகிறான். அடடே, என் அன்னையை தம்பி கவனிக்கவேயில்லையே! நானிருந்தால் இப்படியிருப்பேனா? அன்னையைக் கவனியாமல் தம்பி சொந்த வேலைகளை அல்லவா கவனிக்கிறான்' என்று தலைதலையாக அடித்துக் கொண்டு ஒப்பாரி சொன்னானால், அவனைப்பற்றி ஊர் என்ன சொல்லும்? மக்கள் என்ன நினைப்பார்கள்?

கடந்தவாரம்திருநெல்வேலியில் திரு. பொன்னம்பலம் கூறியதாக பத்திரிகையில் வெளிவந்த ஒரு செய்தியைப் பார்க்கும்போதுமேற்சொன்ன 'அண்ணனின்' கதை நான் ஞாபகத்துக்கு வருகிறது.

'தமிழரசுக்கட்சியினர் தமிழ் மக்களின் நலனை மறந்துவிட்டார்கள். அவர்கள் தங்கள் ஆதரவாளர்களுக்கு உத்தியோகம் வாங்கிக் கொடுப்பதிலும் தங்கள் அரசியல் விரோதிகளை இடமாற்றஞ் செய்வதிலும்தான் அதிக அக்கறை காட்டுகிறார்கள்' என்பதாக பொன்னம்பல 'அண்ணர்' 'ஒப்பாரி' வைத்திருக்கிறார். இதைக்கேட்டு அங்கிருந்த பொதுமக்கள் விழுந்துவிழுந்து சிரித்தார்களாம்.

### சபாஷ் போடவேண்டும்

தமிழர் நலன் ஒன்றுக்காகவே தோன்றி தமிழர் நலன் ஒன்றுக்காகவே தன்னை அர்ப்பணித்து, அதிலேயே இன்னல் பல ஏற்று, தியாகங்கள் பல செய்து, கண்ணும் கருத்துமாக தமிழர் நலனைப் பேணி வரும் ஒரு கட்சியைப்பற்றி அதுவும் தமிழர் மத்தியிலேயே—இப்படிக் கூறும் நெஞ்சழுத்தம் அவருக்குஇருப்பதற்காக ஒருமுறை அவரைப் பாராட்டத்தான் வேண்டும். தமிழ்பேசும் மக்களுக்கு சோதனையேற்பட்ட நேரமெல்லாம், ஊண், உறக்கம் மறந்து உரிமைக்காக போராடிய——போராடிவரும் ஒரு கட்சியை, ஊர் சுற்றிவந்த திரு. பொன்னம்பலம் திட்டுவதற்கு துணிந்தாரே, அந்தத் துணிவுக்கு ஒரு சபாஷ், போடத்தான் வேண்டும்.

ஆனால் தமிழ்பேசும் மக்களுக்குத்தெரியும்—இந்நாட்டிலே தமிழுரிமை பேணி, அதைக் கண்ணும் கருத்துமாக காத்துவருபவர்கள் யார் என்பது. இங்கு தமிழ் மக்களுக்கு சோதனையேற்பட்ட நேரத்தில் எல்லாம் தமிழரசுக்கட்சியைச் சேர்ந்த எந்த உறுப்பினராவது 'நைசாக' ஊர் சுற்றக் கிளம்பவில்லை. ஐ. நா.வுக்கும் அமெரிக்காவுக்கும் செல்லவில்லை.

### தமிழரசார் ஓடவில்லை

பிரச்சினைகளிலிருந்துமெல்ல 'ஒதுங்கிக்' கொள்வதும், பிரச்சினை தீர்வு அடையும் சமயம் பார்த்து எனக்கும் பங்குண்டு என்று கூறிக்கொண்டு வந்து வெற்றியில் பங்கு கேட்பதும் பொ. கட்சியினருக்கும் குறிப்பாக அதன் தலைவருக்கும் உள்ள குணநலன்களில் ஒன்றாக இருக்கலாம். ஆனால் தமிழரசுக்கட்சியினருக்கு இந்த வித்தைகள் எல்லாம் தெரியாது. தமிழரசுக்கட்சியினர் எவ்வளவு கஷ்டமான பிரச்சினைகள் வந்து முட்டிமோதிய போதும் நிலை தளர்ந்ததில்லை. 'நைசாக' நழுவியதுமில்லை.

சென்ற ஆண்டில் இரு முக்கிய பிரச்சினைகள் தமிழ்பேசும் மக்களை எதிர்நோக்கின. ஒன்று போதனாமொழிப் பிரச்சினை. மற்றது சிங்கள ஆசிரியர் பிரச்சினை. இந்த இரண்டு பிரச்சினை சிக்கலடைந்திருந்த நேரத்தில் திரு பொன்னம்பலம் எங்கேயிருந்தார்? தாம் பிச்சையெடுக்க மகன் கும்பகோணத்தில் கோதானம் செய்தான் என்பதுபோல, தமிழன்னை இந்த நாட்டில் தலைவிரி கோலமாக நின்றபோது திரு. பொன்னம்பலம் அமெரிக்காவில் யாருக்கு என்ன உபதேசம் செய்து கொண்டிருந்தார்? அவரை உடனடியாக நாடு திரும்பும்படி அவரது சகாக்கள் தந்தியடித்தும் கூட அவர் நாடு திரும்ப மறுத்துவிட்டாராமே! ஏன்? இதுதான் 'தமிழர் நலன்' பேணும் தலைவருக்குரிய இலட்சணமா?

### இடமாற்ற ஆசைகாட்டியது யார்?

தமிழரசுக்கட்சியினர் இடமாற்ற விஷயங்களில்தான் அதிக அக்கறைகாட்டி வருவதாக குறைப்பட்டிருக்கிறார் திரு. பொன்னம்பலம். உண்மையில், இடமாற்றங்களுக்காக. அமைச்சர்களை 'காக்காய்' பிடித்துத் திரிவது யார் என்பது தமிழ் மக்களுக்கு நன்கு தெரியும்.

தமிழாசிரியர்களின் இடமாற்றப் பிரச்சினையில் தலையிடுவதில்லையென்று தமிழரசுக்கட்சி திட்டவட்டமாகஅறிவித்து விட்ட நேரத்தில், தமிழரசுக்கட்சி சார்புள்ள சில தமிழாசிரியர்களுக்கு 'இடமாற்றத்தை' நிறுத்தித் தருவதாக ஆசைமொழி காட்டி, தனது வலையில் சிக்கவைத்தது யார் என்பதையும் தமிழ்மக்கள் நன்கு அறிவார்கள்.

### வாக்குறுதிகள் என்னவாயிற்று?

சென்ற தேர்தலின்போது 'என்னையும் எனது கட்சியையும் அனுப்புங்கள். மூன்று மாதத்தில் தமிழர் உரிமை எல்லாவற்றையும் பெற்றுத் தருவேன். அதில் தவறினால் பதவியிலிருந்து ராஜினாமா செய்வேன்' என்று வடமாகாணத்து மேடைகள் தோறும் முழங்கினாரே திரு. பொன்னம்பலம், மூன்று மாதத்தில் தமிழர் உரிமை எல்லாவற்றையும் பெற்றுத் தந்துவிட்டாரா? அல்லது இன்னும் மூன்று மாதங்கள் முடியவில்லையா? உரிமைகளை பெறமுயற்சியாவது எடுத்தாரா? உரிமை பெறத் தவறினால் ராஜினாமா செய்வேன் என்றவர் அதையாவது செய்தாரா? உரிமைபெற இன்னும் நல்ல வட்டமேசை அகப்படவில்லையா?

தேர்தல் சமயத்தில் மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளில் ஒன்றைக்கூட நிறைவேற்றாத திரு. பொன்னம்பலம், தமிழர் மத்தியில் சென்று தமிழர் நலனுக்காக உழைத்துவரும் கட்சியை திட்டத் துணிந்தாரே அதற்காக அவருக்கு ஒரு சபாஷ் போடத்தான் வேண்டும்.

இவர் இப்படியென்றால் இவரது பிரதம சீடரான உடுப்பிட்டியார், முந்தாநாள் முளைத்த ஒரு 'கடுதாசிக்கு' அறிக்கை கொடுத்திருக்கிறார். முஸ்லிம் மக்களை தமிழரசுக்கட்சி கைவிட்டுவிட்டதாம்——கிழக்கு மாகாணத்தை தமி[illegible] தாம்—இப்படி எங்கோ கூறியிருக்கிறார் தமது அறிக்கையில்.'

முஸ்லிம்கள்மேலும், கிழக்கு மாகாணத்தின்மேலும் பொ. கட்சியினருக்கு இப்பொழுது திடீர் 'காதல்' பிறந்திருக்கிறது—இதனால் நன்மையோ தீமையோ நாமறியோம். ஆனால் கிழக்கு மாகாணத்திலுள்ள மக்களை பொ. கட்சி எப்பொழுதுமதித்திருக்கிறது? சட்ட நிருபண சபை காலத்திலிருந்து சமீப காலம்வரை, கிழக்கு மாகாணம் என்று ஒன்றுண்டு-அங்கு வாழ்ந்து வருபவர்கள் தமிழ் பேசும் மக்கள்—அவர்களும் தமிழ் இனத்தைச் சேர்ந்தவர்கள் என்ற எண்ணம் பொ. கட்சிக்கோ அதன் தலைவருக்கோ தோன்றியதாகத் தெரியவில்லையே. தோன்றியிருந்தால், திரு. பொன்னம்பலம் 'தனிப் பெருந் தலைவராக' இருந்த நேரத்தில் நடத்திய அரசியல் கிளர்ச்சிகளில் கிழக்கு மாகாண மக்களையும் ஏன் சேர்க்கவில்லை? யாழ்ப்பாணம் மட்டும்தான் தமிழ்ப் பிரதேசம்—யாழ்ப்பாணத்தில் வசிப்பவர்கள்மட்டும்தான் தமிழர்கள் என்ற ஒரு தவறான எண்ணத்துடன்தான நீண்டகாலமாக பொ. கட்சி செயல்பட்டு வந்தது என்பதை எவரும் மறுக்கமுடியாது.

அதுமட்டுமல்ல, வடக்கு, கிழக்கு, மன்னார், வவுனியா, மலைநாடு என்று தமிழ்மக்களை கூறுபோடுவதற்கும் பொ. கட்சி துணையிருந்தது என்பதையும் எவரும் மறுக்க முடியாது. ஆனால், தமிழரசுக் கட்சியினர்தான—தந்தை செல்வநாயகம்தான்—வடக்கைப் போலவே கிழக்கையும் சரிசமமாக மதித்து அரசியல் ரீதியில் இணைத்து வைத்தார்கள் என்பதைஎவரும்ஒப்புக்கொண்டே தீரவேண்டும். இன்னும்சொல்லப்போனால், வடக்கைவிட, கிழக்கை தந்தை செல்வா அதிகம் நேசிக்கிறார். இதை அவரே பலமுறை கூறியுமிருக்கிறார்.

ஆனால் இன்று கிழக்குக்காகப் பரிந்துபேச முன்வந்திருக்கும் பொ. கட்சியினர் உண்மையில் மனப்பூர்வமாக கிழக்கு மாகாண மக்களை நேசிக்கிறார்களா என்றால் இல்லை என்று கூறுவது தவறல்ல. உதாரணத்துக்கு ஒன்றைமட்டும் கவனிப்போம்.

கிழக்குமாகாணம் கல்வியில் பின் தங்கியுள்ள ஒரு பிரதேசம். ஆன காரணத்தினால் கிழக்கில் ஒரு முழுமைபெற்ற தமிழ் பல்கலைக்கழகம் அமைக்கப்படவேண்டும் என்றகொள்கையில் மிக உறுதியாக இருக்கிறது தமிழரசுக்கட்சி. ஆனால் கிழக்கு மாகாணத்தில் ஒரு தமிழ்ப்பல்கலைக்கழகம்அமைக்கப்படுவதை பொ. கட்சி எதிர்க்கிறதே இது ஏன்? இவ்வளவுதான் பொ. கட்சியினர் கிழக்கு மாகாண மக்கள்மேல் காட்டும்இரக்கத்தின் 'அளவு' போதும்!

கிழக்கு மாகாண மக்களுக்கு பொ. கட்சியினரின் மாய்மாலங்களும் புரட்டல்களும் நன்கு விளங்கும். அதனாலேதான் இதுகாலவரை பொ. கட்சியினர்கிழக்குமாகாணத்தில் அடியெடுத்து வைக்க முடியவில்லை. இனிமேலும் பொ. கட்சியினரின் ஆட்டம் கிழக்கில் பலிக்காது என்பது திண்ணம்.

இறுதியாக முஸ்லிம் மக்களுக்குஒருவார்த்தை. இலங்கையில் உள்ள அரசியற்கட்சிகளில் தமிழரசுக்கட்சியொன்றுதான் முஸ்லிம்மக்களுக்குதனியொரு பிரதேச முண்டென்பதையும், அப்பிரதேசத்தை ஆளுவதற்குரிய உரிமை முஸ்லிம்களுக்கு அளிக்கப்பட வேண்டுமென்பதையும் ஒப்புக்கொண்டுள்ள கட்சி. இன்று முஸ்லிம்களுக்காக முதலைக்கண்ணீர் வடிப்பவர்கள் முஸ்லிம் மக்களை ஒரு தனியான தேசியஇனம் என்று ஒருபோதும் மதித்ததில்லை. ஆகவே நண்பர்களாக நடிக்கும் சுயநலமிகளையும் போலிகளையும் நம்பி ஏமாறாது, உண்மையான நண்பர்கள் யார், பகைவர்கள் யார் என்பதை இனங்கண்டு கொண்டு முஸ்லிம் மக்கள் நேரான பாதையிற் செல்ல முன்வருவார்களாக.

**கோவை மகேசன்**

# சுவாமிஜி மறைந்தார்

மீன்பாடும் தேனாட்டில் பொதுப்பணி, சைவப்பணி, தமிழ்ப்பணி ஆகிய மூன்று பணிகளையும் ஆற்றி வந்த மட்டக்களப்பு மாவட்ட ராமகிருஷ்ண சங்கத்தின் தலைவரான துறவி நடராஜானந்தாஜீ இம்மாதம் 19ந் திகதி காலமானது பொதுவாக தமிழுலகத்துக்கும் குறிப்பாக மட்டு நகருக்கும் ஈடு செய்ய முடியாத ஒரு பேரிழப்பாகும்.

உலகில் பிறவியெடுப்பதுமக்களுக்குத் தொண்டாற்றவே என்ற கொள்கையில் அசைக்க முடியாத நம்பிக்கையுடைய சுவாமிஜீ அவர்கள், தன்வாழ்நாள் முழுவதும் பொதுப்பணியாற்றியவர்.

மக்களின் அறிவுக்கண்ணைத் திறக்க மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கிராமம் கிராமமாகச் சென்று கல்விக்கூடங்களை அமைக்க முயற்சி எடுத்து அதில்வெற்றியும் பெற்ற சுவாமிஜி அவர்கள் அனாதை மாணவர்களுக்கு இலவசமாக கல்வி புகட்டியவர்.

சமுதாயத்தின் அடித்தளத்திலுள்ள மக்களிடம் பேரன்பு கொண்ட சுவாமி அவர்கள் இராம கிருஷ்ண ஆச்சிரமம், இராம கிருஷ்ண அனாதை இல்லம், முதலியவற்றை நிறுவி ஏழைப் பிள்ளைகளுக்கு உதவி புரிந்தார்.

மட்டக்களப்பின் தென் கோடியிலுள்ள காரைதீவு கிராமத்தில் பிறந்த சுவாமிஜியின் இயற்பெயர் ஸ்ரீவாசன். இராமகிருஷ்ண மடத்திற் சேர்ந்து துறவியானதும், ஸ்ரீவாசன் நடராஜானந்தாஜியாக மாறினார். இவர் இறக்கும் போது வயது 64.



சுவாமிகள் மறைந்தாலும், பொதுப் பணியாற்றுபவர்களுக்கு ஒரு ஒளி விளக்காக நின்று வழிகாட்டுவார் என்பது திண்ணம்.


களிப்புற்ற வாழ்க்கை சலிப்புற்றதா?

அதற்குக் காரணம்...?

கல்யாண விஷயமா?
காதல் விவகாரமா?
கிரக தோஷமா?
கீர்த்தி கேடா?
குடும்பத் தகராறு?
கூடுதல் கடனா?
கெடுதல் வருகையா?
கேடுகள் சேர்க்கையா?
கை நஷ்ட வியாபாரமா?
கொடிய எதிரியா?
கோணல் வாழ்வா?
கௌரவ தாழ்வா?

எதுவானுலென்ன!

நிவாரணம் பெற
என் உதவியை நாடுங்கள்!
இல்வச ஆலோசனைக்கு
எனக்கொரு கடிதமெழுதுங்கள்!

அரசாங்க பதிவு பெற்ற
பி. எம். திசாநாயக்க
— நான்கு கோவில்களின் தர்மகர்த்தா —
கண்டி ரோட், கம்பனை. போன்: [illegible]


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அரசகருமமொழித் திணைக்களத்தில்

# தமிழைச் சிங்கள மயமாக்கும் ஆணையாளர் சூழ்ச்சி அம்பலம்

அரச கரும மொழித் திணைக்களத்தில் தமிழ் மொழியைச் சிங்கள மயமாக்கி சிதைக்க முயற்சிகள் நடைபெறுகின்றன என்று சுதந்திரன் அண்மையில் வெளியிட்ட செய்தியை மக்கள் மறந்திருக்க மாட்டார்கள். அது முழுவதும் உண்மையென நிரூபிப்பதற்கு இன்று எழுத்து மூலமாக சான்று கிடைத்திருக்கிறது.

இம்மாதம் 8ந்திகதி கூடிய பாராளுமன்றக் கூட்டத்தில் கிளிநொச்சித் தொகுதிப் பா. உ. திரு கா. பொ. இரத்தினம், 'புலட்டின்' என்னும் ஆங்கிலப் பதத்தின் தமிழ்ச் சொல்லை யறிவதற்கு மத்திய வங்கி அரச கரும மொழித் திணைக் களத்திற்கு எழுதிய கடிதங்களையும் அதற்கு அரச கரும மொழித் திணைக்களம் எழுதிய பதில்களையும் சமர்ப்பிக்குமாறு நிதியமைச்சரைக் கேட்டிருந்தார். திரு இரத்தினத்தின் கேள்விப்படி கடிதங்கள் சமர்ப்பிக்கப்பட்டு, அவை பாராளுமன்ற நடவடிக்கைப்புத்தகத்திலும் வெளிவந்திருக்கின்றன. இக்கடிதங்கள் தமிழ் மக்களைத் திடுக்கிட வைப்பதாக இருக்கின்றன.

### பண்டிதர் கேள்வி

அரச கரும சொற்றொகுதியில் உள்ள சொற்களை எவ்வித நீதிநியாயமுமின்றி, மயக்கத்தை உண்டாக்கும் வகையில் அரசகரும மொழித் திணைக்கள ஆணையாளர் மாற்றி வருகிறாரெனவும் இதனை உடனே நிறுத்துவதற்கு அமைச்சர் தமக்கு உறுதிமொழி தர வேண்டுமெனவும் திரு. இரத்தினம் பாராளுமன்றத்தில் கேட்டபோது இதுபற்றித் தாம் கவனிப்பதாக உதவி நிதி அமைச்சர் பதில் சொல்லியிருக்கிறார்.

இலங்கை மத்திய வங்கி சில ஆங்கிலச் சொற்களுக்குப் பொருத்தமான தமிழ்ச் சொற்களைத் தருமாறு அரச கரும மொழித் திணைக்களத்துக்கு எழுதுவதும் அரச கரும மொழித் திணைக்களம், அறிஞர் குழு ஆராய்ந்து தான் வெளியிட்ட அரச கரும சொற்றொகுதியிலுள்ள நல்ல தமிழ்ச் சொற்களைப் புறக்கணித்து சிங்களச் சொற்களைக் கொடுப்பதும் ஓர் சூழ்ச்சித் திட்டமென தமிழ் மக்கள் பலர் சந்தேகித்தனர், இந்தச் சூழ்ச்சித் திட்டத்தை அம்பலப்படுத்தவே திரு. இரத்தினம் பாராளுமன்றத்தில் கேள்வியெழுப்ப நேரிட்டது. 'சென்றல் பாங்க் ஒவ் சிலோன்' என்பதற்கு அரச கரும சொற்றொகுதியிற் காணப்படும் தமிழ்சொல் 'இலங்கை மத்திய வங்கி' என்பதே. ஆனால் மத்திய வங்கி அது பற்றி அரசகரும மொழித் திணைக்களத்துக்கு எழுதியதற்கு அரசகரும மொழித் திணைக்களம் எழுதிய கடிதத்தையும் வாசகர்களுக்கு சமர்ப்பிக்கிறோம்.

### கடிதம் இதுதான்

எனது எண்: 13/85
உமது எண்: எஸ் ஒஎல்எஸ் 20
அரசகரும மொழித் திணைக்களம், 22 றீட் அவனியூ,
(அஞ்சற்பெட்டி இல. 598)
கொழும்பு 7
1966 மார்ச் 17.

## தமிழ்த் துரோகத்துக்கு உதவும் தமிழர்கள் யார்?

செயலாளர்,

இலங்கை மத்திய வங்கி,
'சென்ரல் பாங்க் புலட்டின்'
என்ற பதத்திற்கு நிகரான
தமிழ்ப் பதம்

தங்களது, 1966 மாசி 2ம் தேதிய எஸ்,/ஒ. எல். எஸ். 20 இலக்க கடிதம் தொடர்பாக,

(2) ''செய்தித் திரட்டு'' என்ற பதம் 'புலட்டின்' என்ற பதத்தை முற்றாக விபரிக்கவில்லை. 'செய்தி' என்பது ஆங்கிலத்தில் 'நியூஸ்' என்ற பதத்தைக்குறிக்கும். 'திரட்டு' என்பது பொதுவாக 'றிற்ரேன்' என்ற சொல்லுக்காகப் பாவிக்கப்படுகின்றது.

(3) ''விவரத்திரட்டு'' என்பதன் கருத்து பூரண விளக்கத்தைக் கொடுக்கும் ஒரு கூற்று என்பதாம். 'விவரம்' என்பது "டிரெய்ல்ஸ்" என்ற கருத்தைக் குறிக்கும். ஆகையினால் 'புலட்டின்' என்பதற்கு 'விவரத்திரட்டு' என்பதை பொருத்தமுள்ளதொரு பதமாகக் கருதமுடியாது.

(4) இச் சந்தர்ப்பத்தில் 'புலட்டின்' என்பது உத்தியோக கருமத்தைப் பொறுத்துப் பொதுமக்களுக்கு வழங்கப்படும் சுற்றறிக்கையெனக் கருதப்படும். ஆகையினால் 'புலட்டின்' என்னும் சொல்லுக்காகப் பாவிக்கப்படும் 'விவரணிக்காவ' என்னும் சிங்களப் பதத்தின் கருத்தை தரக்கூடிய பொருத்தமானவொரு பதத்தைக் கையாளுதல் நன்று. இதைக் கருத்திற்கொண்டு 'விவரணம்' என்ற பதம் மேலும் ஆராயப்பட்டது. ''விவரக் குறிப்பு'' என்ற சொல்லினால் தரப்படும் ஒத்த கருத்தை வெளிப்படுத்தவே இச்சொல் பயன்படுத்தப்பட்டதாகவும் தெரிய வந்தது. குறிப்பு என்பது 'நோட்' என்பதாகும். ஆகையினால் 'விவரணம்' என்பது தான் மிகவும் பொருத்தமான பதம் என்று இச்சந்தர்ப்பத்தில் கூறமுடியும்.

(5) ஆகையினால் 'சென்ரல் பாங்க் ஒப் சிலோன் புலட்டின்' ''[illegible]'' என்ற பதங்களுக்கு 'ஸ்ரீ லங்கா மகா வங்கி விவரணம்' என்ற சொற்றொடரைப் பயன்படுத்துவதே சிறந்ததென நாம் யோசனை கூறுகிறோம்.

### பிரதமர் உத்தரவு

ஸ்ரீ லங்கா மகாவங்கி என்று அரச கரும மொழித் திணைக்களம் அறிவித்திருப்பதால் இதனையே தான் ஏற்கப் போவதாக மத்திய வங்கி அடம்பிடித்தது. இதனால் தமிழரசுத்தந்தை திரு செல்வநாயகம், பண்டிதர் கா. பொ. இரத்தினம் ஆகிய இருவரும் பரதம அமைச்சரைச் சந்தித்து இலங்கை மத்திய வங்கி என்ற சொல்லையே ஆளுமாறு மத்திய வங்கியை பணிக்கும்படி கோரினர். இதன்பலனாக மத்திய வங்கி என்ற சொல்லையே பயன்படுத்தும்படி மத்திய வங்கிக்கு பிரதமர் அறிவித்தார். அதைத் தொடர்ந்து அரச கரும மொழித் திணைக்களத்துக்கு மத்திய வங்கி எழுதிய கடிதம் கீழேஇடம்பெறுகிறது.

29, யூலை 1966

ஆணையாளர்,
அரசகரும மொழித் திணைக்களம்,
றீட் அவனியூ,
கொழும்பு 7.

அன்புடையீர்,

தங்களது 17-3-66 ஆந் தேதிய பி 13/85 ஆம் இலக்க கடிதம் சம்பந்தமாக 'சென்றல் பாங்க் ஒப் சிலோன்'' என்னும் ஆங்கிலப் பதத்திற்கு நிகரான தமிழ்ப் பதம் 'இலங்கை மத்திய வங்கி' என அரசாங்கம் தற்போது தீர்மானித்ததன் விளைவால் மேலே குறிப்பிட்ட தங்களது கடிதத்தின் கடைசிப் பந்தியில் தங்களால் யோசனை கூறப்பட்ட 'புலட்டின்' என்ற பதத்திற்கு நிகரான தமிழ்ப் பதத்தை, மீள ஆராய்தல தற்போது அவசியமாகத் தோன்றுகிறது. அரசகரும மொழித் திணைக்களத்தின் தமிழ்ச் சொற்றொகுதியில் தரப்பட்டுள்ள, 'புலட்டின்' என்ற பதத்திற்கு நிகரான தமிழ்ச் சொல் மத்திய வங்கியின் மாதாந்த வெளியீட்டைச் சரியான முறையில் விவரிக்கவில்லையெனக் குறிப்பிடப்பட்டுள்ளது. மத்திய வங்கியின் மாதாந்த வெளியீட்டைச் சரியான முறையில் விவரிக்கக்கூடிய ஒரு பதத்தைத் தமிழில் கையாள யாம் விரும்புவதால் இப்பிரச்சினையயிட்டு ஆலோசனை செய்வதற்குப் போதிய தேர்ச்சியுடையவரென்றும் தங்களுக்கு உதவியாக இருக்கக்கூடியவரென்றும் யாம் கருதும் திரு த. தயாநிதி, உதவிச் செலாவணிக் கட்டுப்பாட்டாளர் அவர்களுடன் இவ்விடயத்தையிட்டுத் தாங்கள் ஆலோசனை செய்ய இசையுமாறு வேண்டுகிறோம். திரு த. தயாநிதி அவர்களுடன் திரு. ப. திருச்செல்வம் உதவிச் செயலாளர் அவர்களும் சேர்ந்திருப்பர். வெகு விரைவாக ஒரு நேர்முக ஆலோசனைக்கு ஒழுங்கு செய்யின் யாம் கடப்பாடுடையவராவோம்.

தங்களது உண்மையுள்ள
செயலாளர்.

தமிழுரிமைக்காக மட்டுமின்றி நல்ல தமிழ்சொற்களைப் பாதுகாத்தற் பொருட்டும் தமிழரசார் போராடவேண்டிய நிலை இன்று ஏற்பட்டிருக்கிறது.

'புலட்டின்' என்ற ஆங்கிலச் சொல்லுக்கு அச் சொற்றொகுதியிற் காணப்படும் தமிழ்ச் சொல் செய்தித் திரட்டு. இதனை மத்திய வங்கியிலுள்ள தமிழ் தெரிந்தவர்கள் ஏற்க விரும்பவில்லை. தமிழே தெரியாத சிங்கள ஆணையாளரிடம் ஆலோசனை கேட்டு எழுதினர்.

அதற்குஅப்பெருமகன்கூறிய ஆலோசனை யாது? தமது அதிகாரத்தைப் பயன்படுத்தி செய்த சிபார்சு என்ன! இதோ அவரின் கடிதத்தைப் பாருங்கள்.

### ஆணையாளர் கடிதம்

எனது இல. வி. 13/85
அரசகரும மொழித் திணைக்களம்
22, றீட் வழி,
அ. பெ. இல. 598

கொழும்பு 7,
1966, நவம்பர்30.

செயலாளர்,
இலங்கை மத்திய வங்கி,
கொழும்பு 1

'புலட்டின்' என்ற ஆங்கிலப் பதத்தின் தமிழ்ச் சொல்

மேற்குறிப்பிட்ட விடயம் சம்பந்தமான தங்கள்66-7-29 ஆம் தேதிக் கடிதம் தொடர்பாக:—

தங்கள் நிலையத்தின் இரு அலுவலாளர்களால் சமர்ப்பிக்கப்பட்ட தமிழ் மொழிபெயர்ப்புகளும், மற்றும் குறிப்பிடத்தக்க மொழி பெயர்ப்புக்களும்மிகவும்கவனமாக ஆராயப்பட்டன. இவ்விடயத்தையொட்டி, அரச கரும மொழித் திணைக்கள அலுவலாளர்கள், உங்கள் பிரதிநிதிகள், ஆகியோரிடமிருந்து மட்டுமன்றி, தற்காலத் தமிழ் ஒலியியலில் சிறந்த புலமையும் தேர்ச்சியும் பெற்றுள்ள மற்றும் வெளியாட்களிடமிருந்தும் யோசனைகளும் கருத்துரைகளும் பெறப்பட்டன. இவையெல்லாவற்றையும் கருத்திற்கொண்டு 'புலட்டின்' என்ற ஆங்கிலப் பதத்திற்கு மிகவும் ஏற்புடைய தமிழ்ச் சொல் 'விவரணம்' எனபதே என யான் முடிவு செய்கிறேன். இச் சொல்லை உபயோகிக்கும்படி யான் சிபாரிசு செய்கிறேன்.

ஒப்பம்:
நந்தசேன விஜயசேகரா,
அரசகருமமொழிஆணையாளர்

### துணையிருந்தவர் யார்?

இப்பொழுது சொல்லுங்கள் தமிழை சிங்கள மயமாக்க தமிழ தெரியாத இவர் முயல்கின்றாரா இல்லையா? பாவம் தமிழ் தெரியாதவர்—தமிழின் தனித்தன்மை உணரமுடியாதவர்—இப்படிச் செய்துவிட்டார்—மன்னிப்போம்.

ஆனால் இவர் இவ்வாறு செய்வதற்குத் துணையாக இருந்த ''தமிழர்கள்'' (?) ஆலோசனை கூறிய 'தமிழறி

(9-ம் பக்கம் பார்க்க)




பாட்டாளி முதல் பணக்காரன் வரை
எல்லோரும் புகைப்பது
கமலா பீடி
ஒரு முறை வாங்கி உபயோகித்தால் அதன் உண்மை விளங்கும்
கமலா ஸ்டோர்ஸ்,
தந்தி: தாமரை
நெ. 15, செட்டியார் தெரு, கொழும்பு 11.
தொலைபேசி: 3397-6527


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# "முழுநேர தொழிற் சங்க ஊழியர்களுக்கு நம்பிக்கையான எதிர்காலம் வேண்டும்"

## இ. தொ. க. கூட்டத்தில் சாவகச்சேரி எம். பி.

"தொழிலாளர்களின் நலனுக்காக பாடுபடும் தொழிற்சங்க முழுநேர ஊழியர்கள் எத்தனையோ தியாகங்களைச்செய்து தங்களை தாங்களே வருத்திக்கொள்ளுகின்றார்கள். ஆனால் அவர்களின் நலனை இதுகாலவரை தொழிற்சங்கங்கள் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளவில்லை. அதனால் அவர்கள் எதிர்காலத்தில் சிக்கல்கள் நிறைந்த வாழ்க்கையை வாழ வேண்டியவர்களாக இருக்கின்றனர். அவர்களின் வாழ்க்கையை கவனிக்கும் மற்றோரும் தொழிற்சங்கத் துறையில் இறங்கப் பயப்படுகின்றனர். அதனால் எத்தனையோ பொது தொண்டர்களின் சேவையை நம் மக்கள் பெறமுடியாதவர்களாக இருக்கின்றனர். அந்நிலையை மாற்ற வேண்டும். தொழிற் சங்கத்துறையில் இருக்கும் முழுநேர ஊழியர்கள் தங்கள் வாழ்க்கையையும் எதிர்காலத்தையும் செம்மையாக அமைத்துக்கொள்ள வேண்டும் என்ற நோக்கத்தினால்தான் நான் கழகத்தின் முழுநேர ஊழியர்களுக்கு ஓர் சேமநல நிதியை ஆரம்பிக்கவேண்டும் என்று கூறுகிறேன். இம் முயற்சி எம்கழகத்தால் செய்யப்பட்ட ஒரு முக்கிய நிகழ்ச்சியாக சகல தொழிற்சங்கத் துறையிலுமுள்ள முழுநேர ஊழியர்கள் உணர்ந்து அவர்களும் இதை பெற்றெடுக்கக்கூடியவாறு அமைத்துக்கொள்வார்கள் என்பது திண்ணம்.

இவ்வாறு இலங்கைத் தொழிலாளர்கழகத்தின் முழுநேர ஊழியர்களின் முக்கியஸ்தர்கள் கூட்டத்தில் உரையாற்றிய கழகத்தின் தலைவரும் சாவகச்சேரி பாராளுமன்ற உறுப்பினருமான திரு வி. என். நவரத்தினம் அவர்கள் கூறினார். மேற்படி கூட்டம் கடந்த 17-3-67ல் கழகத்தின் தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது.



அவர் தொடர்ந்து பேசும்போது நாம் முழுநேர ஊழியர்களுக்கு சலுகைகள் கொடுப்பதன் மூலமே அவர்களின் உண்மையான உழைப்பை நாம் எதிர்பார்க்க முடியும். ஆகவே இதுபோன்ற பல திட்டங்கள் இயற்றப்படல் வேண்டும், அதன்மூலம் கழகமும் கழக ஊழியர்களும் நன்மை பெறமுடியும்" என்று கூறினார். மற்றும் பொதுச் செயலாளர் திரு. செ. கலிய பெருமாள் உட்பட பல முக்கியஸ்தர்களும் தங்கள் கருத்துரைகளை வழங்கினர்.

அக்கூட்டத்தில் முழு நேர ஊழியர்களின் நலன் காக்கக் கூடியவாறு பல திட்டங்கள் ஆக்கப்பட்டன.

## வாலிபர்களுக்கு அழைப்பு

'மலையகம் கல்வி நிலையில் பின்தங்கியிருப்பது யாரும் மறுக்கமுடியாத ஒன்று. அந்த பின்தங்கிய நிலையிலிருந்து முன்னேற்றத்திற்கு வருவதற்கு வாலிபர்கள் முயற்சி செய்ய வேண்டும். முயற்சி திருவினையாக்கும் என்பதற்கொப்ப வாலிபர்கள் கல்வி விடயத்தில் முயற்சி செய்து எம் மலையகம் முன்னேற வழி சமைத்து விட்டால் எம் கழகத்தின் கொள்கைகளை அதன் லட்சியத்தை பரப்பிவிட்டதாகவே இருக்கும்.'

இவ்வாறு கடந்த 3-3-67 ல் நடந்த இலங்கைத் தொழிலாளர் கழகத்தின் வாலிப முன்னணியின் அட்டன் மாவட்டக்கிளைக் கூட்டத்தில் மேற்படி கழகத்தின் அட்டன் மாவட்டப் பிரதிநிதி திரு. ப. சத்தியவேல் அவர்கள் கூறினார்.

அவர் தொடர்ந்து பேசும்போது கழகத்தின் மாபெரும் சக்தி வாலிபர்கள் தான். அவர்களை நல்ல வழியில் வழி நடத்திச் சென்று இந்நாட்டின் சிறந்த குடிமக்களாக, உரிமையுள்ளவர்களாக இந்நாட்டிற்கு எடுத்துக்காட்டாக விளங்கக் கூடியவர்களாக ஆக்குவதற்கு துரித முயற்சிகளை கைக்கொண்டுள்ளது. அந்த நல்ல முயற்சிக்கு நீங்கள் உங்கள் ஆதரவை தந்து அந்த முயற்சியை உங்கள் முயற்சியாக ஏற்று கழகத்தின் நிலையை உணர்த்த வேண்டுமாய்வேண்டுகின்றேன் என்று கூறினார்.

## மலையக வாலிபர்களே! எழுச்சி பெறுங்கள்!!

"மலையகத்தில் விழிப்புணர்ச்சி ஏற்படவேண்டுமானால் வாலிபர்கள் எழுச்சியுறவேண்டும். வாலிபர்கள் எழுச்சி பெற்றுவிட்டால் நாட்டின் வறுமையும் வாட்டத்தையும் எம்மத்தியிலிருக்கும் அறியாமையையும் மிகவிரைவாகவும் சுலபமாகவும் போக்கிவிட முடியும். ஆகவே வாலிபத் தோழர்களாகிய நீங்கள் எம் இனத்தின் நன்நோக்கம் கருதி ஆக்க சேவையில் ஈடுபடுமாறு வேண்டுகிறேன்."

இவ்வாறு 10-3-67 காலையில் அட்டனிலுள்ள இ. தொ. கழகத்தின் தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற மாவட்ட வாலிப முன்னணியின் கூட்டத்தில் உரையாற்றிய கழகத்தின் வாலிப முன்னணி அமைப்புச் செயலாளர் திரு. கே. பி. செல்லத்துரை கூறினார்.

அவர் தொடர்ந்து பேசும்போது கழகத்தின் வளர்ச்சி வாலிபர்கள் கையில்தான் தங்கியுள்ளது. கழகத்தை வளர்ப்பது, கழகத்தின் கொள்கைகளை பரப்புவது, கோட்பாடுகளை சகலருக்கும் அறியச் செய்வது ஆகியவைகளை எமது கடமையில் ஒன்றுக்கருதி நாம் செயல்பட்டால எதிர்காலத்தில் எம் கழகத்தை ஒரு மாபெரும் ஸ்தாபனமாக, மலையகத்தில் ஒரேயொரு தொழிற் சங்கமாக வளர்க்க முடியும், அதோடு எம்மத்தியிலிருக்கும் சமூக குறைபாடுகளைப்போக்கி சமூக சீர்திருத்தமும் மறுமலர்ச்சியும்பெற நம் சமூகம் முன்னேற பாடுபட வேண்டும் என்று கூறினார்.

200க்கும் அதிகமான வாலிபர்கள் கலந்துகொண்ட இக் கூட்டத்தில் அட்டன்மாவட்ட வாலிப முன்னணித் தளபதி திரு. இரா. ம. வடிவேல் ஆகியோருடன் பல வாலிப முன்னணி தளபதிகளும் பேசினர்.

## ராகலையில் வாலிப முன்னணிக் கூட்டம்

இம்மாதம் கடைசிப்பகுதியில் அட்டனிலுள்ள இலங்கைத் தொழிலாளர் கழகத்தின் தலைமை அலுவலகத்தில் மேற்படி கழகத்தின் வாலிப முன்னணியின் ஓர் விசேட கூட்டம் நடைபெறவிருக்கின்றது. இக்கூட்டம் எதிர் வரும் ஏப்ரல் மாதத்தில் இராகலையில் நடைபெறவிருக்கும் வாலிப முன்னணியின் மகாநாட்டை நடத்துவதற்கான திட்டங்கள், அம்மகாநாட்டில் கலந்து கொள்பவர்களுக்கு செய்ய வேண்டிய ஒழுங்குகள் போன்ற முக்கிய பல விடயங்களை ஆராய்ந்து முடிவு செய்யவே விசேடமாகக் கூடுகிறது.

இக்கூட்டத்தில் கலந்துகொள்ள கழகத்தின் தலைவரும் சாவகச்சேரி பாராளுமன்ற உறுப்பினருமான திரு. வி. என். நவரத்தினம் கழகத்தின் இணைப் பொருளாளர்களில் ஒருவரான செனட்டர் சு. நடராசா உடுவில் பாராளுமன்ற உறுப்பினர் திரு. வி. தர்மலிங்கம் ஆகியோருடன் கட்சியின் பிரபல முக்கியஸ்தர்களும் கலந்து கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இம்மகாநாட்டை நடத்துவதில் கண்ணும் கருத்தும் கொண்டு செயலாற்றும் கழகத்தின் வாலிப முன்னணி அமைப்புச் செயலாளர் திரு. கே. பா. செல்வத்துரை அவர்களுடன், அட்டன் மாவட்ட வாலிப முன்னணி தளபதி திரு. இரா. ம. வடிவேல், தலவாக்கொல்லை வாலிப முன்னணியின் மாவட்ட தளபதி திரு. அருணசலம், பசுமலை மாவட்ட தளபதி திரு. பி. எம் முருகையா, பலவிலை மாவட்ட தளபதி திரு. சு. முத்தையா, இராகலை மாவட்ட தளபதி திரு. அ. ம. பிரகாசம், பதுளை மாவட்ட தளபதி திரு. வி. கிருஸ்ணசாமி, மஸ்கெலியா மாவட்ட தளபதி திரு. ஆவளி ஆகியோர் துரித சேவையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இக் கூட்டத்தில் இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியின் வாலிப முன்னணி தலைவர் திரு. செ. இராசதுரை கழகத்தின் வாலிப முன்னணியின் விசேட அழைப்பின் பேரில் கலந்து கொள்ளவிருக்கின்றார்.

இக் கூட்டத்தில் சுமார் 500க்கு அதிகமான தோட்டத்து வாலிப முன்னணி தலைவர்களும் 300 க்கு அதிகமான அணித்தளபதிகளும் 200க்கு மேற்பட்ட வாலிப முன்னணி முக்கியத்தர்களும் கலந்து கொள்ளக் கூடியதாக ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

## மக்கள் குரல்

### கிழக்கு மாகாணம் தமிழ் பிரதேசம் இல்லையாம்

தேசிய உயர் கல்விச் சபையின் காரியாலயத் திறப்பு விழாவில் கல்வி அமைச்சர் ஐ. எம். ஆர். ஏ. இரியகொல்ல அவர்கள் கலந்து கொண்டு ஆற்றிய உரையில் 'கிழக்கு மாகாணத்தை ஒரு தமிழ்ப்பகுதியாக கூற முடியாது' என்னும் கருத்தை வலியுறுத்தியுள்ளமை கிழக்கு மாகாணம் வாழ் தமிழ் பேசும் மக்களின் உள்ளத்தை புண்படுத்தியுள்ளது.

தேசிய அரசாங்கத்தின் அமைச்சரான திரு. ஐ. எம். ஆர். ஏ. இரியகொல்ல அவர்களின் மேற்படி கூற்று வேண்டுமென்றே இனத்தைத் அவமதிப்பதாகவும், சரித்திரத்தை மூடி மறைப்பதாகவும் பாரம்பரிய சொத்தான எமது பிரதேசத்தை சிங்களப் பிரதேசமாகப் பிரகடனபடுத்துவதாகவும் அமைந்திருப்பதால் எமது பொதுநலத் தமிழ்ப் பேசும் வாலிப முன்னணி அமைச்சரின் பொறுப்பற்ற பேச்சை வன்மையாகக் கண்டிக்கிறது.

கடந்த காலத்தில் இன ஒழிப்பின் அஸ்திவாரத்தில் கட்டியெழுப்பப்பட்ட கூட்ட ரசாங்க வாதிகளே கூறத் தயங்கிய மேற்படி கூற்றை, தேசிய இன ஐக்கியத்தை நிலை நாட்ட உருவாக்கப்பட்ட தேசிய அரசின் அமைச்சர் வலியுறுத்திியிருப்பது! பழைய படி வேதாளம் முருங்கை மரத்தில் ஏறியிருப்பதை நினைவுறுத்துவதோடு சமீபகாலமாக தேசிய அரசாங்கம் கிழக்கு மாகாணத்தில் கடைப்பிடித்துவரும் திட்டமிடப்பட்ட சிங்களக் குடியேற்றத்தின் மறைமுக நோக்கம் எதிர்காலத்தில் கிழக்கிலங்கையை சிங்களப்பிரதேசமாக்குவதே என்பதை உறுதிப்படுத்துகின்றது.

கடந்த காலங்களில் தமிழ் பேசும் மக்கள் நடாத்திய நிலம்... மொழி... இன விடுதலைப்போராட்டத்தின் கொள்கைகளை அவமதிப்பதாகவும், உதாசீனம் செய்வதாகவும் அமைந்திருக்கும் அமைச்சரின் பேச்சு எதிர்காலத்தில் தங்கள் இலட்சிய விடுதலை தேசிய அரசில் நிறைவேறுமெனத் தமிழ்ப் பேசும் மக்கள் வைத்திருந்த நம்பிக்கைக்கு உலை வைப்பதாக அமைந்துள்ளது.

அமைச்சர் அவர்களுக்கு இலங்கையின் வரலாறோ அன்றி பூகோள அறிவோ இல்லாது மேற்படி கூற்றை வலியுறுத்தியிருந்தாலும், பாராளுமன்றத்தில் அமைச்சரின் பக்கத்தில் கிழக்கு மாகாணத்தின் பிரதிநிதிகளாக வீற்றிருக்கும்பாராளுமன்றஅங்கத்தவர்களின் ஞாபகமாவது நினைவில் இருந்திருக்க வேண்டும்.

ஞாபகசக்தியாவது சற்றுக் குறைவாக இருந்தாலும், சமீபத்தில் திருமலைக்கு விஜயம் செய்த கல்வி அமைச்சர் அவர்கள் திருமலைக்கு வருவதற்கு முன்னர் மேற்படி கூற்றை வெளியிட்டிருந்தால் நிச்சயமாகக் கிழக்குமாகாணம் தமிழ்ப்பேசும் மக்களின் பிரதேசம்தான் என்பதை அமைச்சரின் விஜயத்தை பகிஷ்கரிப்பதன் மூலம் நிலைநிறுத்தியிருப்பார்கள் திருமலை வாழ் தமிழ் பேசும் மக்கள்.

நீண்ட காலத்தின் பின்னர் தேசிய ஐக்கியத்தை மனதில் கொண்டு எங்கள் தமிழ்ப் பேசும் பிரதிநிதிகள் தேசிய அரசாங்கத்தில் சேர்ந்திருந்தாலும், எங்கள் தன்மானத்திற்கு அவமானமேற்படுமானல் எங்கள் சுதந்திரப் [illegible] படுத்த முடியாது போய்விடும்.

(14-ம் பக்கம் பார்க்க).

## தி. மு. க. பாராட்டு விழா

கொட்டகல மாவட்டம் பளிங்குமலையில் 'இ தி. மு. க.' குழுவினர்களால், 7-3-67ம் நாள் கழகப் பணிமனையில், தமிழகத்தில் தி. மு. க. வெற்றியீட்டியுள்ளதையும் அறிவுலக மேதை அறிஞர் அண்ணா தலைமையில், அமைச்சரவைகள் அமைந்து ஆளும் கட்சியாக மாறி, தமிழன் தலைநிமிர்ந்து தனியாட்சி தமிழகத்தில் நடத்துவதையும் முன்னிட்டு பாராட்டுவிழா நடாத்தப் பட்டது!

இவ்விழாவிற்கு அட்டன் மாவட்டச் செயலாளர் திரு. இரா. ரெங்கையா தலைமை வகித்தார். 350 க்கு மேற்பட்ட கலைமன்றக் குழுவினர்களுட்பட கழகத்தோழர்கள் குழுமியிருந்தார்கள்! அறிஞர் அண்ணா உருவப்படத்தை திரைநீக்கம் செய்து வைத்து அவர் வாழ்க்கை வரலாற்றையும், அவரது வழிவகைகளையும் நற்செயல்களையும் திராவிடப் பெருங்குடி மக்களனைவரும் பின்பற்றி செல்ல வேண்டுமென்று திரு. ரெங்கையா தனது உரையில் குறிப்பிட்டார்.

திருவாளர்கள் எஸ். ஜீவனி, என். எஸ். துரைபாண்டியன், சி. மணி, மல்லிகை குமார் ஆகியோர்களும் உரை நிகழ்த்தினர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "அன்று இந்தியாவுக்கு அரிசி அனுப்பினேம்; இன்று வெளிநாடுகளிடம் கையேந்துகிறேம்"

## "இந்த நிலை மாற என்ன செய்ய வேண்டும்?"

## பாராளுமன்றத்தில் மட்டுநகர் முதல்வர்

"அன்று நமது இலங்கைநாடு இந்தியாவுக்கு அரிசி ஏற்றுமதி செய்திருக்கிறதென்பதை சங்க இலக்கிய வாயிலாக நாம் அறிகிறேம். தமிழ் நாட்டின் முக்கிய துறைமுகமான காவிரிப்பூம்பட்டினத்திலே இறக்குமதி செய்யப்பட்ட வெளிநாட்டுப் பொருட்களில் இலங்கை அரிசியும் இருந்தது என்பதற்கு சங்க இலக்கியங்கள் சாட்சியம் பகருகின்றன. பண்டைத் தமிழிலக்கியமான பட்டினபாலையிலே வருகின்ற 'ஈழத்துணவும்' என்ற பாடலடி இலங்கை, அரிசியை இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்தது என்ற உண்மையை எடுத்துக் காட்டுகிறது. ஆனல் இன்று நம் நிலைமை என்ன? இன்று அரிசிக்காக பர்மா, தாய்லாந்து, சீன போன்ற நாடுகளிடம் கையேந்துகிறேம். இந்த நிலைமையை வெகு சீக்கிரத்தில் மாற்றியமைக்க வேண்டும். அதற்கு முதற்படியாக நாட்டில் தூர்ந்து போய்க் கிடக்கும் குளங்களை அபிவிருத்தி செய்வது அவசியம்" இவ்வாறு, மூதூர் தொகுதியிலுள்ள இடிந்தும் தூர்ந்தும் போன குளங்கள் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும் என்ற தனிநபர் பிரேரணை மீது பாராளுமன்றத்தில் இம்மாதம் 6-ம் திகதி உரையாற்றிய மட்டுநகர் பாராளுமன்ற உறுப்பினர் திரு. செ. இராசதுரை குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:—

இந்தப் பாராளுமன்றத்திலே பல வரவு செலவுத் திட்ட விவாதங்கள் நடைபெற்ற போது கிராமாந்தரக் குளங்களைத் திருத்த வேண்டிய தன் அவசியத்தைப் பல அங்கத்தவர்களும் வற்புறுத்தியிருக்கிருர்கள். அவர்களில் ஒருவனுக நானும் இருக்கின்றேன். விவசாயத் திட்டங்களிலே முன்னணியில் நிற்கின்ற கீழைத்தேசங்களை எடுத்துக்கொண்டால் அந்த நாடுகளிலேபெரியநீர்ப்பாசனத்திட்டங்களிலே அரசாங்கம் கவனம் செலுத்துகின்றபொழுது சில கிராமியத் திட்டங்களை அபி



விருத்தி செய்வதிலும் அரசாங்கம் கவனஞ் செலுத்துகின்றது. அதன் காரணமாகத்தான் தென்கிழக்கு ஆசியாவிலுள்ள தாய்லாந்து, பர்மா, சீன போன்ற தேசங்கள் மிகவும் முன்னணியில் நின்று, தத்தம்நாட்டுஉணவு உற்பத்தியை பெருக்குகின்றன.

### முன்னேர் விட்டுச் சென்ற செல்வங்கள்

'நமது நாட்டில், நமது முன்னேர்கள், நமக்கு அளித்த செல்வங்கள் பல. கலை கலாசாரம். பண்பாடு, அழியாமல் வர்ண ஓவியங்களைக்கொண்ட சிற்பக் கூடங்களை மட்டும் நமது முன்னேர்கள் நமக்கு கொடுத்து விட்டுச் செல்லவில்லை. இலங்கை முழுவதிலும் எங்கு பார்த்தாலும் நூற்றுக் கணக்கான குளங்களை நமது முன்னேர்கள் விட்டுச் சென்ருர்கள். ஆனல், அக் குளங்கள் தேடுவாரற்று அழிந்து, சிதைந்து விட்டன. இன்றைக்கு இலங்கை நாடு அரிசிக்காக பர்மா, தாய்லாந்து, சீன போன்றநாடுகளைஎதிர்நோக்கியிருப்பதை நாம் பார்க்கிறேம்.

### பட்டினப்பாலை கூறும் உண்மை

அன்று நமது இலங்கை நாடு இந்தியாவுக்கு அரிசி அனுப்பியிருக்கிறதென்று சங்க இலக்கியப் பாடல்களிலே நாம் காணக்கூடியதாக இருக்கிறது. தமிழ் நாட்டின் முக்கிய துறைமுகமான காவிரிப்பூம்பட்டினத்தில் இறக்குமதி செய்யப்பட்ட வெளிநாட்டுப் பொருட்களில் இலங்கை அரிசியும் இருந்தது என்பதற்குச் சங்க இலக்கியங்கள் நமக்குச் சான்று பகர்கின்றன. பண்டைத் தமிழிலக்கியமான 'பட்டினப்பாலை' யிலே வருகின்ற "ஈழத்துணவும்' என்ற பாடலடி இலங்கை, அரிசியை ஏற்றுமதி செய்தது என்ற உண்மையை எமக்கு எடுத்துக்காட்டுகின்றது. 'ஈழம்' என்ருல் இலங்கை என்று பொருள்

### இன்று ஏனிந்த நிலை?

அந்தக்காலத்திலே இலங்கையிலிருந்து பிறநாடுகளுக்கு அரிசி ஏற்றுமதி செய்திருக்கிருர்கள் நமது முன்னேர்கள். அப்படி ஏற்றுமதி செய்திருப்பதை சங்க இலக்கியங்கள் வாயிலாக அறிந்திருக்கிறேம். ஆனல் இன்று நாம் அரிசிக்காக பிற நாடுகளிடம் கையேந்த வேண்டிய நிலையில் இருக்கிறேம். ஆகவே இந்த நிலையை மாற்ற அரசாங்கம் பல நீர்ப்பாசனத் திட்டங்களில் பல கோடிக்கணக்கான ரூபா பணத்தை முதலீடு செய்து அபிவிருத்தி செய்யும் அதே நேரத்தில் சென்ற காலத்திய நிலையை எண்ணிப்பார்க்க வேண்டியதும் அவசியமாகின்றது.

### காலதாமதமே காரணம்

'நீர்ப்பாசன இலாகாவிலும், விவசாய இலாகாவிலும் ஏற்படுகின்ற கால தாமதங்களைக் கவனித்து நிவர்த்தி செய்ய வேண்டும். இன்றுஒருகட்டடத்தை அல்லது பாலத்தைக் கட்டி முடிக்க வேண்டுமானல் அதனைக் கட்டி முடிக்க எவ்வளவு காலம் செலவும், எவ்வளவு பணம் செலவாகும் என்பதைத் தயாரிப்பதற்குப் பெரும் காலம் எடுக்கிறது. அப்படிக் கணக்குப்பார்த்த பின் அதற்கு வேண்டிய பணம் ஒதுக்கப்படுகிறது. இது நடைபெற இன்னும் பல ஆண்டுகள் செல்லும், அதன் பின் அது நடைமுறைக்கு வர பல ஆண்டுகள் செல்லுகின்றன. பின் அத்திட்டம் முடிவடைய பல ஆண்டுகள் செல்லுகின்றன. இதனுலேதான் நம்முடைய உணவு உற்பத்தி, பொருளாதார செல்வம் முதலியன பின் தங்கிய நிலையில் இருக்கின்றன.

### மூதூர்த் தொகுதி குளங்களை திருத்துக

'மூதூர்த் தொகுதியைச் சேர்ந்த பல குளங்கள் இன்று தேடுவாரற்ற நிலையில் இடிந்தும் தூர்ந்தும் போயிருக்கின்றன. அவற்றையெல்லாம் அரசாங்கம் அபிவிருத்தி செய்யும் நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்வதுடன், இத்தகைய நடவடிக்கையின் மூலம் நமது நாட்டில் அரிசி உற்பத்தியையும், ஏனைய உப உணவுப் பொருட்களின் உற்பத்தியையும் பெருக்குவதில் கவனம் செலுத்தவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.,

---

# "எல்லாம் தமிழில் செய்ய உறுதியெடுங்கள்"

## தமிழ் பேசும் மக்களுக்கு கிளிநொச்சி எம். பி. வேண்டுகோள்

## தொண்டர் படையில் சேரும்படியும் அழைப்பு

மீண்டும் 'எல்லாம் தமிழியக்கம்' அவசியம் என்று கிளிநொச்சிப் பிரதிநிதி திரு. கா. பொ. இரத்தினம் நமது நிருபருக்கு அளித்த விசேட பேட்டியொன்றில் குறிப்பிட்டுள்ளார். "அரசாங்கம் தமிழில் பதில் கொடுக்க வில்லை என்றும், தமிழ் மொழிச் சட்டவிதிகளை அரசாங்கம் அமுல்நடத்தத் தவறுகிறது என்றும் நாம் வெறுமனே அரசாங்கத்தைக் குறைகூறுவது அர்த்தமற்ற செயலாகும். நாம் அரசாங்கத்துடன் தமிழில் தொடர்பு கொண்டால் அல்லவா அரசாங்கம் நம்முடன் தமிழில் தொடர்பு கொள்ளும். எனவேதான் தமிழர்கள் தமிழைப் பயன் படுத்துவதற்காக மீண்டும் தமிழியக்கத்தை ஆரம்பிக்கப் போகிறேன். தமிழ் பற்றுடையவர்கள் என்னுடன் தொடர்பு கொண்டு தங்களைத் தொண்டர்களாகப் பதிவுசெய்து கொள்ளலாம். தமிழியக்கம் யாருக்கும் எதிரான இயக்கம் அல்ல என்பதனையும் தெளிவுபடுத்திக்கொள்ள விரும்புகிறேன்" என்று மேலும் அப்பேட்டியில் திரு. இரத்தினம் குறிப்பிட்டார்.

நமது நிருபரின் வினுக்களுக்கு திரு. இரத்தினம் அளித்த விளக்கம் வருமாறு:-

'உரிமைகளைப் பெறபோராடும் மக்கள் தங்கள் கடமைகளைச் செய்தல் வேண்டும். கடமைகளைச் செய்ய தவறுபவர்களும் தயங்குபவர்களும், உரிமையைப்பற்றி பேச தகுதியற்றவர்களாவர். இன்று தமிழ்பேசும் மக்கள் தாம் இழந்த தமிழ் உரிமைகளைப் பற்றி மட்டும் பேசிக்கொண்டி ருப்பதால் பெரும் பய[illegible] யாது. அவர்கள் முதலில் தம் கடமைகளை முற்று முழுதாகச் செய்தல் வேண்டும்.

'தமிழ்மொழிக்கு தம் வாழ்வின் துறையனைத்திலும் முத[illegible] மொழியிலேயே [illegible] களைச் செய்தலும், தமிழ் பேசும் மக்களின் தலையாயகடமையாகும். இந்தக்கடமையை இன்று எத்தனை மக்கள் செய்கின்ருர்கள்? 100க்கு 10 பேராகுதல் செய்கின்ருர்களா? இல்லையென்றுதான் கூறல் வேண்டும்.



'சென்ற சில ஆண்டுகளாக அரசாங்கத்துடன் போராடி தமிழ் உரிமைகள் சிலவற்றை பெற்றிருக்கிறேம். சட்டவாயிலாகவும் சில உரிமைகள் எமக்கு வழங்கப்பட்டுள்ளன. இந்த உரிமைகளை நாம் முற்று முழுதாகப் பயன்படுத்தத் தவறிவிட்டோம். இன்னும் காலம் தாழ்த்தாமல் இவற்றைப்பயன்படுத்த முயலவேண்டும்.

'அரசாங்கத்துக்கு தமிழில் எழுதும் கடிதங்களுக்கு மறுமொழி அனுப்பும் உத்தியோகத்தரின் கையொப்பத்துடன் தமிழில் மறுமொழி அனுப்புதற்கு அரசாங்கம் இப்பொழுது ஒப்புக்கொண்டுள்ளது. நாம் தமிழில் எழுதாமல் அரசாங்கத்திடமிருந்து எவ்வாறு தமிழில் மறுமொழி பெற முடியும்?

'படிவங்கள் எல்லாவற்றையும் தமிழிலும் வெளியிட அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. முன்னர் தமிழில் கிடையாத பல படிவங்கள் இப்பொழுது தமிழிலும் வெளியிடப்பட்டுள்ளன. உதாரணத்துக்காக வானெலி உத்தரவுப் படிவத்தின் விண்ணப்பச் சீட்டை குறிப்பிட விரும்புகிறேன்.

'தமிழில் நிரப்பி அனுப்பப்படும் படிவங்களுக்கு அனுப்பும் உத்தரவுச்சீட்டு அனுமதிச் சீட்டு முதலியவற்றை தமிழிலும் கொடுப்பதற்கு அரசாங்கம் இப்பொழுது உடன்பட்டுள்ளது. தபால் அறிமுக அட்டை இம் மாதம் தொடக்கம் தமிழிலும் வழங்கப்படுகின்றது.

'எனவே தமிழிலும் உத்தரவு சீட்டு, அறிமுக அட்டை முதலியவற்றைப் பெறவேண்டுமானல் நாம் அவற்றுக்குரிய படிவங்களை தமிழில் நிரப்பி அனுப்புதல் வேண்டும். நம்மக்கள் பலர் இன்றும் தமிழைப் புறக்கணித்து ஆங்கிலத்தில் நிரப்பி அனுப்புகின்ருர்கள்.

'இந்நிலைமையை நீடிக்கவிடாமல், தமிழ்மக்களை தமிழிலே தம் கருமங்களைச் செய்யுமாறு அன்புரிமையோடு தூண்டுதற்கு தமிழியக்கத் தொண்டர்கள் முன்வரல்வேண்டும். "எல்லாம் தமிழியக்கத்தை" நாடெங்கும் தீவிரமாக தொழிற்படச் செய்ய பல திட்

(14-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

சுதந்திரன்
SUTANTIRAN

1967 மார்ச் மாதம் 25-ம் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.
தொலை பேசி எண் - 3411 த. பெ. 1183

# நாவடக்கம் தேவை

கிழக்கு மாகாணத்தைத் தமிழ்ப் பிரதேசம் என்று கூறுவதற்கில்லை என்பது கல்வி அமைச்சர் திரு. இரியகொல்லையின் கூற்று. அமைச்சர் இக்கருத்தை அண்மையிற் பாராளுமன்றத்தில் வெளியிட்டார். தொடர்ந்து பொதுக்கூட்டங்களிலும் இதனை வலியுறுத்தி வருகிறார்.

இக்கூற்று பொருள் பொதிந்ததாகும். வடமாகாணம் மட்டுமே தமிழ்ப் பிரதேசம் என்பது இதன் நோக்கம். கிழக்குப் பகுதியைச் சிங்களப் பிரதேசம் விழுங்கிவிட்டால் எஞ்சி நிற்பது வடபகுதியே. அடுத்து, வடபகுதியையும் படிப்படியாக விழுங்கும் முயற்சிகள் தொடங்கும். இதற்காகக் கையாளப்படும் கருவி காணிக் குடியேற்றமே.

தம்பதெனியாப் பிரதிநிதி திரு. ஆர். ஜி. சேனநாயக்கா "வடபகுதியில் சிங்களவர்களைக் குடியேற்றுங்கள்" என்று ஒரு வேண்டுகோள் விடுத்துள்ளார். ஏன்? வடமாகாணமும் சிங்களப் பகுதியாகிவிட்டதென்று பின்னர் பிரகடனம் செய்வதற்குத்தான்.

இந்த நோக்கம் நிறைவேறும் பொழுது, சிங்களப் பிரதேசத்தின் விஸ்தரிப்பு நிறைவுபெறும் — தமிழ் பேசும் மக்களின் தாயகம் அபகரிக்கப்பட்டுவிடும். ஒரு தேசிய இனம் தனக்குரிய பாரம்பரிய பிரதேசத்தை இழந்துவிட்டால் அதன் பின் அது தனி இனமாக தலைநிமிர்ந்துநிற்க இயலாத நிலையை அடையும். நிலத்தில் வேரூன்றி நிற்காமல் வானத்தில் மிதக்கும் இனமாக ஓர் இனம் எவ்வளவு காலத்துக்குத்தான் உயிர் வாழ முடியும்?

சிங்களக் குடியேற்றத்தின் மூலம் தமிழ் மண்ணை ஆக்கிரமிப்புச் செய்யவேண்டும் என்பது சிங்களத் தீவிரவாதிகள் நீண்டகாலத்துக்கு முன்பு உருவாக்கிய ஒரு சதித்திட்டமாகும். இது காலஞ்சென்ற பெரிய சேனநாயக்கா அவர்கள் விவசாய அமைச்சராக இருந்தபோதே அமுலுக்கு வரத் தொடங்கிவிட்டது.

முதலில் கிழக்குப் பகுதியை ஆக்கிரமித்து, பின்னர் வடபகுதியில் கைவைப்பது என்பதுதான் திட்டம், அதன்படி சிங்களக் குடியேற்றங்கள் ஆரம்பமாயின. தமிழ்ப் பிரதேசத்தைச் சேர்ந்த இடங்களிலே விவசாயக் குடியேற்றத் திட்டங்கள் திறக்கப்பட்டன. இத்திட்டங்களிலுள்ள காணிகளைத் தென்னிலங்கைச் சிங்களவர்களுக்கு வழங்கி, அவர்களைக் கொண்டுவந்து குடியேற்றினர். இதனால் பாதிக்கப்பட்ட தமிழ்ப்பேசும் மக்கள் கடுமையான எதிர்ப்புத் தெரிவித்தனர்.

முன்னாள் அரசாங்கங்கள் சட்டபூர்வமான முறையில் தமிழ் மண்ணிலுள்ள காணிகளை வழங்கும்போது, அரசாங்க ஆதரவை மறைமுகமாகப் பெற்ற சில சிங்கள வகுப்புவாத ஸ்தாபனங்கள் கிழக்குப் பகுதியில் சிங்களவர்களைக் கொண்டு போய் பலவந்தமாகவும், சட்டவிரோதமாகவும் குடியேற்றின. இதற்காக இந்த ஸ்தாபனங்கள் பெரும் தொகை நிதியும் செலவு செய்தன.

சட்டவிரோதக் குடியேற்றத்துக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கக்கூடிய அரசாங்க உயர்தர அதிகாரிகள் ஆங்காங்கு நியமனம் செய்யப்பட்டனர். விரிந்த அடிப்படையில் நடைபெற்ற சட்டவிரோதக் குடியேற்றத்துக்குப் பெரும்பாலும் பலியான பகுதி திருகோணமலை மாவட்டமே.

ஆனால் "கள்ளத்தோணிகள்" பெருமளவில் இப்பிரதேசத்தில் காடு வெட்டி, வீடு கட்டிக் குடியேறி, விவசாயம் செய்கின்றனரென்றும், தமிழரசுக் கட்சி அவர்களுக்கு எல்லாவித உதவிகளையும் அளிக்கிறதென்றும் சில சிங்களத் தினசரிகள் தீவிரமாகப் பிரசாரம் செய்தன. இப்பிரசாரத்தின் நோக்கம் சட்டவிரோத சிங்களக் குடியேற்றத்தை மூடி மறைப்பதே.

சிங்களக் குடியேற்றத்தால் மட்டக்களப்பு மாவட்டத்தில் மூஸ்லிம் விவசாயிகளே பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளனர். அநேகர் சொந்தக் காணிகளையே இழந்துவிட்டனர். அம்பாறைத் தொகுதியிலிருந்து ஒரு சிங்களவரைப் பாராளுமன்றத்துக்குத் தெரிவுசெய்யுமளவுக்கு சிங்களக் குடியேற்றம் இந்தப் பகுதியிலே வெற்றிபெற்றுள்ளது.

சிங்களக் குடியேற்றத்தை எதிர்த்துப் போராடிய—இன்றும் போராடுகின்ற கட்சி தமிழரசுக் கட்சியே. சிங்களக் குடியேற்றத்தைத் தடுத்து, தமிழ்ப் பேசும் மக்களின் பாரம்பரிய பிரதேசங்களைப் பாதுகாத்துக்கொள்வது கட்சியின் அடிப்படைக் கொள்கைகளிலொன்று. தென்னிலங்கைச் சிங்களவர்களைத் தமிழ்ப் பிரதேசங்களில் குடியேற்றுவதை நிறுத்தும்படி பாராளுமன்றத்திலும் வெளியிலும் கட்சி கிளர்ச்சி செய்துவந்துள்ளது.

இக்கிளர்ச்சியின் விளைவாகவே தேசிய அரசாங்கம் கட்சியின் காணிக்கொள்கையை ஓரளவு ஏற்றுக் கொண்டுள்ளது. பொ. கட்சிபோன்ற தமிழரசுக் கட்சியைத் தூற்றுவதையே அரசியலாகக் கொண்டுள்ள ஸ்தாபனங்கள் அன்று சிங்களக் குடியேற்றத்தை எதிர்த்து கண்டுவிரலைக்கூட உயர்த்தவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இந்த ஸ்தாபனங்களின் போக்கு கல்வி அமைச்சர் போன்றோரைக் "கிழக்கு மாகாணம் தமிழ்ப் பிரதேசம் அல்ல" என்று கூறும் அளவு ஊக்குவித்துள்ளது.

அமைச்சரின் கூற்றுக்குப் பதிலடி கொடுத்துள்ளார் பட்டிருப்புப் பிரதிநிதி திரு. இராசமாணிக்கம். கிழக்கு மாகாணம் தமிழ்ப் பிரதேசமே என்பதை ஆணித்தரமாக எடுத்துக் காட்டியுள்ளார்.

கல்வி அமைச்சரின் இக்கூற்று தேசிய ஒற்றுமைக்கு குந்தகம் விளைவிப்பதாகும். தமிழ்ப்பேசும் இனமும், சிங்கள இனமும் நாட்டின் நலன்களையும் சனநாயகத்தையும் பாதுகாக்கும் பொருட்டு ஒத்துழைத்து, நல்லாட்சி நடத்துகின்றனர். இந்நிலையிலே தமிழ்ப் பிரதேசங்களிலொன்று தமிழ்ப் பேசும் மக்களுக்கு உரியதன்று" என்று பொறுப்புள்ள ஓர் அமைச்சர் கூறுவது தமிழ் பேசும் மக்களை ஆத்திரம் கொள்ளச் செய்வதுடன், அவர்களின் ஒத்துழைப்பு மனப்பான்மையையும் பாதிக்கும். இதனால் இரு தேசிய இனங்களுக்கும் தீங்கு ஏற்படும். அத்துடன், தேசிய ஒற்றுமை வெறும் உதட்டளவிற்தானா என்று மக்கள் கேட்பர். ஆகவே கல்வி அமைச்சர் தமது தவறான கூற்றை உடனே வாபஸ் பெறவேண்டும்.

வேலியே பயிரை மேய்வதைப்போல தேசிய ஐக்கியத்தை உருவாக்கும் பணியை மேற்கொண்டுள்ளவர்களே அதனை அழித்துவிடுவதா? நாடாளும் அமைச்சர்களுக்கு நாவடக்கம் தேவை என்பதைக் கல்வி அமைச்சருக்குச் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

# சிங்கள நிபந்தனையை உடன் வாபஸ் பெறுக

சுதந்திரன் அரசியல் நிருபர்

'கொடுப்பது போல கொடுத்து எடுப்பது போல எடுப்பது' என்பது ஒரு நாடோடி வழக்கு. சிங்களத் தேர்ச்சி பெறாத காரணத்துக்காக 55 வயதைக் கடந்த அரசாங்க ஊழியர்கள் பலருக்குக் கட்டாய ஓய்வுக் கடிதம் அனுப்பப்பட்டிருப்பதாக வெளிவந்த செய்தி மேற்கண்ட நாடோடிவழக்கினையே நினைவூட்டுகிறது.

தேசிய அரசாங்கம்பதவிக்கு வந்த போது தமிழ் பேசும் அரசாங்க ஊழியர்கள் சம்பந்தமாக அளித்த வாக்குறுதியில் முக்கியமான ஒன்று பழைய அரசாங்க ஊழியர்களுக்கு எவ்வித சிங்களநிபந்தனையும் விதிக்கப் படமாட்டாது என்பதே. தமிழரசுக் கட்சி தேசிய அரசாங்கத்தில் சேர்வதற்கு முன் வந்ததற்கும் இந்த உத்தரவாதம் ஒரு முக்கிய அடிப்படைக் காரணம் என்பது பலரும் அறிந்த ஒரு உண்மையாகும். திறைசேரி சுற்றறிக்கை 700இன் படியும் பழைய அரசாங்க ஊழியர்களுக்கு சிங்களத்தகைமை தேவையில்லை என்றே அறிவிக்கப்பட்டிருந்தது.

## நம்பிக்கையை இழந்துவிடும்

ஆனால் இன்று பழையகுருடி கதவைத் திறவடி என்பது போல 55வயதுகடந்த பழைய அரசாங்க ஊழியர்களிடம் சிங்கள மொழியறிவு கேட்கப் படுவதும், சிங்களத் தேர்ச்சியின்மை என்ற ஒரே காரணத்துக்காக அவர்களுக்குக் கட்டாய ஓய்வுக் கடிதம் வழங்குதலும் தேசிய அரசாங்கத்தின் மேல் தமிழ் பேசும் மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையையும் விசுவாசத்தையும் சிதறடித்துவிடும் என்பதை தேசிய அரசாங்க அமைச்சர்களும் குறிப்பாக நிதி அமைச்சரும் மறந்துவிடக் கூடாது.

பழைய அரசாங்க ஊழியர்களுக்கு சிங்களத் தகைமை தேவையில்லையென்று கூறுவதும், ஆனால் அதே சமயம் 55வயது கடந்த ஊழியர்கள் மட்டும் தொடர்ந்து அரசாங்க ஊழியத்தில் இருப்பதற்கு சிங்கள தகைமை பெற வேண்டும் என்று நிபந்தனை விதிப்பதும் முன்னுக்குப் பின் முரண்பட்ட ஒரு செயலாகும். இன்று அரசாங்க சேவையில் இருக்கும் 55 வயதைக் கடந்த எந்த ஊழியரும் பழைய ஊழியர்கள் என்றே கணிக்கப்படுபவர்கள். பழைய அரசாங்க ஊழியர்கள் எவரும் சிங்கள நிபந்தனைக்குக் கட்டுப்படவேண்டிய அவசியம் இல்லை. ஏனெனில் பழைய ஊழியர்கள் சிங்களம் படிக்க வேண்டியதில்லையென ஏற்கெனவே ஒப்புக்கொள்ளப் பட்டுவிட்டது.

பழைய அரசாங்க ஊழியர்களில் 55 வயதைக் கடந்தவர்களைமட்டும் சிங்களத் தகைமையில்லை என்ற காரணம் காட்டி கட்டாய ஓய்வில் அனுப்புவது என்ன நியாயத்தின் பாற்பட்டது என்று நமக்கு விளங்கவில்லை.

## சிங்களத்தை திணிக்கும் சூழ்ச்சியா?

பழைய அரசாங்க ஊழியர்களுக்கு சிங்களத் தகைமை தேவையில்லையென கூறப்பட்டிருப்பதால் ஒரு பழைய அரசாங்க ஊழியர் சிங்களம்படிப்பதில் ஆர்வம் காட்டப்போவதில்லை. ஆனால் அதே ஊழியரை, அவர் 55 வயதையடையும்நேரத்தில் திடீரென்றுசிங்களத்தகைமையில்லை, அதனாலே வெளியே போ என்று கழுத்தைப் பிடித்து தள்ளுவது மிகவும் அக்கிரமமான ஒரு செயலாகும். இது மறைமுகமாகச் சிங்களத்தை பழைய ஊழியர்களின் தொண்டைக்குள் திணிக்கும் ஒரு சூழ்ச்சித் திட்டம் என்றே கருதவேண்டியிருக்கிறது.

இன்று தமிழ்பேசும் மக்கள் தேசிய அரசாங்கம் தங்களுக்கு அநீதி இழைக்க மாட்டாது என்ற ஒரே நம்பிக்கையுடன் இருக்கின்றனர். ஆனால் தேசிய அரசாங்கத்தின் இந்த சின்னத்தனமான செயல்கள் அவர்களின் மனதில் மீண்டும் வெறுப்பையும், எதிர்ப்புணர்ச்சியையும் ஏற்படுத்திவிடும்என்பதை அரசாங்கம் நன்கு உணர்ந்துகொள்ள வேண்டும்.

## தமிழரசார் நடவடிக்கை

அரசாங்கத்தின் இந்த அநீதியான நடவடிக்கையை தமிழரசுக்கட்சி பலமாக கண்டித்திருப்பதாகவும், இதுபற்றி நிதியமைச்சருடன் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகவும் செய்திகள் கூறுகின்றன. இவ்விஷயத்தில் நிதியமைச்சர் நேர்மையான முடிவை எடுப்பார் என்று நம்புகிறோம்.

நிதியமைச்சரின் பாரபட்சமற்ற நடுநிலைமையான போக்கில் நமக்கு நம்பிக்கையுண்டு. இனத்துவேஷத்தை கக்கும் சக்திகளின் நெருக்குதல் எதற்கும் பணிந்துவிடாது சிங்களத் தகைமையில்லை என்ற காரணத்துக்காக 55 வயது கடந்த பழைய அரசாங்க ஊழியர்களுக்கு கட்டாய ஓய்வு வழங்கும் கட்டளையை நிறுத்தி வைக்க நடவடிக்கைஎடுப்பார் என்று எதிர்பார்க்கிறோம்.

# மட்டுநகருக்கு சிங்கள....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

முதன் முதலில், கடந்த பொதுத் தேர்தலின் போது தன்னை எதிர்த்து போட்டியிட்ட திரு. மாணிக்கவாசகரின் ஆதரவாளர் என்று தாம் கருதிய அரசாங்க ஊழியர்களை இடமாற்றம் செய்யுமாறு சிபார்சு செய்தாரென்றும், அதன்படி அவர்கள் இடமாற்றம் செய்யப்பட்டனரென்றும் சொல்லப்படுகிறது. ஆனால் மாற்றம் செய்யப்பட்ட புதியஊழியர்களும், கட்சி பேதமின்றி, திரு. மாணிக்கவாசகரின் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றி வந்தனரென்றும், இதனால் அதிருப்தியுற்றதாகக் கூறப்படும் திரு. தேவநாயகம் பின்னர் ஒரு புது அரசியல் வழியைக் கையாண்டார் என்று அறியப்படுகிறது.

மட்டக்களப்பார் - யாழ்ப்பாணத்தார் என்ற பிரதேச வேறுபாட்டைக் கிளறி, மட்டக்களப்பில் கடமைபுரிந்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அரசாங்க ஊழியர்களை மாற்றுவதில் ஆர்வம்காட்டினாராம். முன்பு அரசியலில் செல்லாக் காசானவர்கள் கையாண்ட தந்திரம் இது.

இதிலும் திரு. தேவநாயகம் தோல்வியையே தழுவினதாகவும் மட்டக்களப்பைச் சேர்ந்த அரசாங்க அதிகாரிகளும் திரு. மாணிக்கவாசகரின் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றி வைக்க தவறவில்லையென்றும் கூறப்படுகிறது.

இதன் பின் திரு. தேவநாயகம் மட்டக்களப்பு மாவட்டத்தில் கடமைபுரியும் அரசாங்க ஊழியர்கள் தான் சார்ந்துள்ள கட்சியைச் சேர்ந்தவர்களாக இருக்கவேண்டுமென்பதில் அதிக அக்கறை காட்டினாராம்.

கடைசியாக அதிலும் மனநிறைவுபெறாமல் கடந்த வாரம் பிரதமமந்திரியைச் சந்தித்து மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள சகல அரசாங்க திணைக்களங்களுக்கும் சிங்கள அதிகாரிகளைமட்டுமே அனுப்பவேண்டுமென்றும், அப்பொழுதுதான் தனிச் சிங்களத்தை இலகுவாக அமுல் நடத்த முடியும் என்றும் கேட்டுக் கொண்டாரென்று தெரிகிறது.

ஆனால் பிரதமர் அதற்கு சம்மதமளிக்க மறுத்துவிட்டாரென்றும், தேசிய அரசாங்கம் தமிழ், சிங்களம் என்று பாரபட்சம் காட்டி அரசாங்க ஊழியர்களை பிரிக்கமுடியாதென்றும் அது அரசாங்கம் கொண்டுள்ள கொள்கைக்கே முரணானது என்றும் திரு.தேவநாயகத்துக்கு எடுத்துக் கூறி புத்தி புகட்டியதாகக் கூறப்படுகிறது. பிரதமரின் கண்டிப்பான பதிலைக் கேட்ட திரு. திரு. தேவநாயகம் தொங்கிய முகத்துடன் அங்கிருந்து வெளியேறினாராம்.

# தி. மு. க......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு நெருக்குதலை ஏற்படுத்திவிடமுயற்சியெடுத்துவருகிறது தி. மு. க. வுக்கும் தமிழரசுக் கட்சிக்கும் நெருங்கியதொடர்பிருப்பதாக அரசாங்கத்திலிருக்கும் பின்வரிசை எம். பீக்களை நம்ப வைத்து, அவர்கள் தமிழரசுக் கட்சிமேல் வைத்திருக்கும் நம்பிக்கையை சிதறடித்து, அதன் மூலம் தமிழரசுக் கட்சியை அரசாங்கத்திலிருந்து வெளியேற்ற உள்ளுக்குள் ஒருநெருக்குதலை ஏற்படுத்துவதற்கும் தமிழ் காங்கிரஸ் முயற்சிகள் மேற்கொண்டுவருவதாக தெரிகிறது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலங்கை இந்திய ஒப்பந்த அமுல் சட்டத்தில்

# 'கட்டாய நாடுகடத்தலுக்கு இடமில்லை

## —அமிர்தலிங்கம்

## ஜீ. ஜீ. யின் வலையில் முஸ்லிம்கள் சிக்கமாட்டார்

### —மசூர் மௌலானா

## வாலிப முன்னணிக் கூட்டத்தில் பேச்சு

'இலங்கை இந்திய ஒப்பந்த அமுல் மசோதாவில் கட்டாய நாடு கடத்தலுக்கு இடமேயில்லை. இந்தியப்பிரஜையாக தாங்களே விரும்பிவிண்ணப்பிப்பவர்கள் மட்டுமே இந்தியப் பிரஜையாக பதிவுசெய்யப்படுவார்கள். இந்த சட்டத்தின்படி இந்தியா செல்ல விருப்பமில்லாத எந்த ஒரு மலைநாட்டுத் தோட்டத் தொழிலாளியையும் இந்தியாவுக்கு அனுப்பிவிட முடியாது. அதே சமயம், இன்று நாடற்றவராக்கப்பட்டுள்ள தோட்டத்தொழிலாளர்களில் 3 லட்சம் பேருக்கு இலங்கைப் பிரஜாவுரிமை இடைக்கவும் இந்த சட்டம் வழி செய்கிறது' இவ்வாறு இம் மாதம் 18ம் திகதியன்று கொழும்பு கன்னரத் தெருவில் தமிழ்வாலிப முன்னணியின் ஆதரவின் கீழ் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் உரையாற்றிய வட்டுக் கோட்டைப் பிரதிநிதி திரு அ. அமிர்தலிங்கம் கூறினர்.

பெருவாரியான தமிழ் பேசும் மக்கள் கலந்து கொண்ட இக் கூட்டத்துக்கு திரு. ஆறுமுகம் தலைமை வகித்தார். இக் கூட்டத்தில் திரு. அமிர்தலிங்கம் பேசுகையில் மேலும் கூறியதாவது:

'இலங்கை இந்திய ஒப்பந்த அமுல் சட்டத்தை சரத்து வாரியாக, மிக நுணுக்கமாக நாம் பரிசீலனை செய்த பின்பே அதை ஆதரிப்பது என்று முடிவு செய்தோம். இந்தச் சட்டத்தினுல் இந்நாட்டிலுள்ள தோட்டத் தொழிலாளிகளான தமிழ் மக்களுக்கு ஒரு சிறு தீங்கு கூட ஏற்படுவதற்கு இடமில்லை.

'சிலர் இந்த சட்டத்திலுள்ள விதிகளை விளங்கிக்கொள்ளாமல் அதை எதிர்க்கிறார்கள். வேறு சிலர் விளங்கிக் கொண்டே வேண்டும் என்று எதிர்க்கிருர்கள்.

''1948ம் ஆண்டின் இந்திய--பாகிஸ்தானிய பிரஜாவுரிமைச்சட்டத்தை ஆதரித்த துரோகச்செயலை மறைப்பதற்காக சிலர் இன்று நிறைவேற்றப்பட்டுள்ள இலங்கை இந்திய ஒப்பந்த அமுல் சட்டமும் 1948ம் ஆண்டு நிறைவேற்றப் பட்ட சட்டமும் ஒன்று என்று கூறி குட்டை குழப்பப்பார்க்கிருர்கள். அன்று நிறைவேற்றப் பட்ட சட்டம் மலையகத்தமிழர்களின் பிரஜாவுரிமை வாக்குரிமையை பறித்தது. அப்படி



பறிக்கப்பட்ட குடியுரிமையை இன்று நிறைவேற்றப்பட்ட சட்டம் வழங்க இருக்கிறது. இந்திய-பாகிஸ்தானிய பிரஜாவுரிமைச்சட்டம் ஏற்படுத்திய நோயை இலங்கை இந்திய ஒப்பந்த அமுல் சட்டம் ஓரளவில் தீர்த்துவைக்கும் மருந்தாக இருக்கிறது.

'இந்தச் சட்டத்தின்படி விருப்பமற்ற எவரையும் பலவந்தமாக இந்தியாவுக்கு அனுப்ப முடியாது. தப்பித்தவறி விருப்பமில்லாத ஒருவரை இந்தியாவுக்கு செல்ல வேண்டும் என்று நிர்ப்பந்தித்தால் அவர் அதை எதிர்த்து நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ய முடியும்.'

ஜனப் மசூர் மௌலானு பேசும்போது கூறியதாவது:-

'இன்று முஸ்லிம் மக்களின் நண்பர் என்று தன்னைச் சொல்லிக் கொள்ளும் திரு. பொன்னம்பலம், முஸ்லிம்களின் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டை போடும் காரியங்களை செய்து வருகிருர். முஸ்லிம் மக்கள் கல்வியறிவில் முன்னேறி படித்து பட்டம் பெற்று சமூகத்தில் சிறந்த அந்தஸ்து பெற்றவர்களாக விளங்க வேண்டுமென்ருல் அவர்களுக்குதேவையானது வைத்தியம், சட்டம், பொறியியல், விஞ்ஞானம் போன்ற பல் துறைகளும் உள்ள ஒரு முழுமைபெற்ற பல்கலைக் கழகமே. இப்படிப்பட்ட பல்கலைக்கழகத்தை தமிழ் பேசும் மக்களுக்கு பெற்றுக் கொடுப்பதற்கு போராடி வரும் தமிழர்களோடுதான் முஸ்லிம்கள் சேர வேண்டுமே தவிர, கலாசாரபல்கலைக் கழகம் என்ற கானல் நீரைக் காட்டி முஸ்லிம்களை ஏமாற்ற நினைக்கும் பொன்னம்பலம் கட்சியினருடனல்ல.

''நான் திரு. பொன்னம்பலத்துக்கு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன் -முஸ்லிம் மக்களின் தோள்களின் மேல் ஏறி குதிரைவிட திரு. பொன்னம்பலம் நினைத்திருந்தால் அந்த எண்ணத்தை கைவிட்டு விட வேண்டும். அப்படியின்றி முஸ்லிம் மக்களின் தோள் மீது ஏறி சவாரி செய்யநினைத்தால் முஸ்லிம் மக்கள் திரு. பொன்னம்பலத்தின் மீது நிச்சயமாக சவாரி விட தவறமாட்டார்கள்'

கூட்டத்தில் முதலை உறுப்பினர் திரு. சு. நடராசா திரு. மணவைத்தம்பி. உட்பட பலர் பேசினர்.

## தமிழை சிங்கள........

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

ஞர்கள்' யார்? ஆணையாளரின் கடிதத்தை மீண்டும் பாருங்கள்.

வீடு கொழுத்தும் இராசாவுக்கு நெருப்பு எடுத்துக் கொடுக்கும் மந்திரிகள் அரசகரும மொழித் திணைக்களத்து தமிழ் உத்தியோகத்தரும் ஒலி இயல் தெரிந்த தமிழரும் என ஆணையாளர் கூறுவதைக் கவனியுங்கள்.

அரசகருமமொழித் திணைக்களத்திலுள்ள பலரை விசாரித்ததிலிருந்து திரு எப். எக்ஸ். சி. நடராசா அவர்களே இக் கைங்கரியத்தைச் செய்திருக்கலாம் என்று ஊகிக்கப்படுகிறது. திரு நடராசா இப்பொழுது தமிழ் பகுதிக்கு தற்காலிகமாகப் பொறுப்பாக இருக்கின்ருர் என்றும் இவருடைய 'சேவையைப்' பாராட்டி கண்காணிப்பாளராக நியமிக்கும்படி ஆணையாளர் சிபார்சு செய்திருக்கிருர் என்றும் தெரிய வருகிறது.

### ஒலி இயல் அறிஞர் யார்?

ஒலி இயல் தெரிந்த தமிழர்கள் யார்? இவர்களில் ஒருவர் கிழக்குப் பகுதியைச் சேர்ந்த பெரியவர் என்று அறியப்படுகிறது. மற்றவர் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்தவர் என்றும் இவரது குடும்பத்தில் உள்ள ஒருவருக்கு அரசகரும மொழித் திணைக்களததில் ஒரு பதவி பெற முயற்சிநடக்கிற தென்றும்கூறப்படுகிறது. இவருடைய பெயரை வெளியிடும் சந்தர்ப்பம் விரைவில் கிடைக்கலாம்.

தமிழறிந்த இப்பெரியார்களுடைய ஆலோசனையுடன் தமிழறியாத ஆணையாளர் கொடுத்த விவரணம் என்ற சொல்லை மத்திய வங்கி ஏற்க மறுத்துவிட்டது. கடைசியாக செய்தித்திரட்டே இடம்பெற்றுள்ளது.

### துரதிருஷ்ட நிலை

ஸ்ரீ லங்கா மகா வங்கி, விவரணம், என்ற பிழையான கொடுந்தமிழ்ச் சொற்களை நீக்கி, இலங்கை மத்திய வங்கி செய்தித் திரட்டு முதலிய செந்தமிழ்ச் சொற்களை நிலை நாட்ட பெரும்போராட்டமே நடத்தவேண்டியேற்பட்டது. தமிழ் மக்கள் இந்நாட்டில் சிங்களத் தீவிரவாதிகளுடன் மட்டுமின்றி தமிழ்மொழிக்கு துரோகிகளாக மாறியுள்ள ஒருசில தமிழர்களோடும் போராடவேண்டிய துரதிருஷ்ட நிலைமையை இது உணர்த்துகிறது.

இப்போராட்ட முன்னணியில, அயராதுழைத்த கிளிநொச்சிப் பிரதிநிதி பண்டிதர் கா.பொ. இரத்தினம் மத்திய வங்கித் தமிழ் ஊழியர் சங்கத்தினர், கொழும்பு தமிழ் சங்கத்தினர், கொழும்பு விவேகானந்த சபையினர், எழுத்தாளர் மன்றத்தினர் முதலியவர்களை தமிழ் மக்கள் என்றும் மறக்க முடியாது.

## சுதந்திரக்...

(1ம் பக்கத் தொடர்ட்சி)

வைப் பெறவேண்டுமாளுல் தமிழர்களை மாற்றுந் தாய் மனப்பான்மையில் நோக்குவதை சுதந்திரக்கட்சி கைவிட வேண்டுமென்றும், தமிழர்கள் சிங்களத்தை அரசாங்கமொழியாக ஏற்றுக் கொண்டிருப்பதால் அவர்களின் உரிமைகளை அங்கீகரிப்பதற்கு சுதந்திரக் கட்சி முன்வர வேண்டுமென்றும், இந்தக் கோஷ்டியினர் கருத்துத் தெரிவித்துள்ளார்களாம்.

சுதந்திரக் கட்சிக்குள் இக் கருத்தை வலியுறுத்தி வருபவர்கள், முன்னர் இடதுசாரி இயக்கங்களில் இருந்தவர்களே என்று சொல்லப்படுகிறது. யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கம்யூனிஸ்ட் வாலிப மகாநாட்டில் முன்னுள் குருநாகலை எம்.பியும் சுதந்திரக் கட்சி பிரமுகர்களில் ஒருவருமான திரு. ஜெயாபத்திராளு இத்தகைய ஒருவேண்டுகோளை சுதந்திரக் கட்சித் தலைமைப் பீடத்துக்கு பகிரங்கமாக விடுத்திருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

## தமிழில் ஆண்டறிக்கை

மத்திய வங்கியின் 1966-67-ம் ஆண்டுக் குரிய ஆண்டறிக்கையும், மாதாந்த செய்தித் திரட்டும் தமிழில் இப்பொழுது வெளி வந்திருக்கின்றன.

இவற்றை தமிழில் வெளியிட வேண்டுமென வங்கியின் தமிழ் ஊழியர் சங்கம் பலகாலமாகப் போராடி வந்தது தெரிந்ததே.

## மேதின ஏற்பாடுகள்

இலங்கைத் தொழிலாளர் கழகம் இவ்வாண்டு மேதின விழாவை அட்டனில் கொண்டாடவிருக்கிறது.

இவ்விழாவை வெற்றிகரமாகவும் சிறப்பாகவும் நடத்துவதற்காக ஆரம்ப ஏற்பாடுகள் இப்பொழுதிருந்தே மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இம்மேதின விழாவிற்கு தொழில் அமைச்சர் திரு. எம். எச். மகமது, உள்ளூராட்சி அமைச்சர் திரு. மு. திருச்செல்வம், அட்டன் டிக்கோயா நகரசபைத் தலைவா திரு. டீவ ஆகியோரை அழைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டிருப்பதாகவும் கழகப் பொதுச் செயலாளர் திரு. செ. கலியப்பெருமாள் அறிவிக்கிருர்.

## இனத்தை......

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

'நாம் சிங்களவர்' இயக்கத்தின் சேனுதிபதி என்று சொல்லப்படுகிறது.

முஸ்லிம் பல்கலைக் கழக விவாதத்தின் போது திரு. பொன்னம்பலம் ஆற்றிய பேச்சுக்களினுல், அவர் 'இப் பெரும் பணியை' செய்து முடித்துவிட்டதாகவும், தமிழ் பேசும் இனத்தை இரு கூருகப் பிளவு படுத்த வழிசமைத்துவிட்டது திரு. ஜீ. ஜீ. நாட்டுக்குச் செய்த ஒரு பெருந் தொண்டு என்றும் 'நாம் சிங்களவர்' சேனுதிபதி பாராட்டுரை வழங்கினுர் என்று தெரிகிறது.

தொம்பே உறுப்பினர் திரு. பீலிக்ஸ் உட்பட எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் பலரும் இதற்காக திரு. ஜீ. ஜீ. யை பாராட்டினுர்களாம்.

## இரட்டை......

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஆனுல் அதே நாளில் வெளியான ஆங்கிலத் தினசரியான 'சன்' பத்திரிகை, இதே செய்தியை வெளியிட்டு அதன் கீழ் மேற்படி கிராமசபைத் தலைவர் திரு. செல்வநாயகம் எழுதிய கடிதம் சம்பந்தமாக பிரதமருக்கு எழுதியுள்ளதாகவும், அதில் திரு. செல்வநாயகத்துக்கு இவ்விஷயங்களில் தலையிட அதிகாரம் கொடுத்தது யார் என்று கேட்டுள்ளதாகவும் ஒரு மேலதிக செய்தியையும் வெளியிட்டுள்ளது. அதே சமயம் கிராமசபைத் தலைவர் பிரதமருக்கு எழுதிய கடிதம்பற்றி 'தினபதி' மூச்சுக் கூட விடவில்லை. சிங்களமக்களுக்கு ஒன்றும் தமிழ்மக்களுக்கு இன்னென்றும் சொல்லிவரும் இந்தப் பத்திரிகைகளின் இரட்டை வேடம் பொதுமக்களுக்கு இப்பொழுது நன்ருக புரிந்திருக்கும்.

## அவுஸ்திரேலியா செல்கிருர் அமிர்தலிங்கம்

இலங்கைத் தமிழரசுக் கட்சிப் பொதுச் செயலாளரும் வட்டுக்கோட்டைத் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினருமான திரு. அ. அமிர்தலிங்கம் இம் மாதம் 25-ம் திகதி அவுஸ்திரேலியா புறப்படவிருக்கிருர். அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் அங்கு செல்லவிருக்கும் இலங்கை பாராளுமன்ற உறுப்பினர் கோஷ்டியில் ஒருவராகவே திரு. அமிர்தலிங்கம் செல்கிருர்.

திரு. அமிர்தலிங்கம் அவுஸ்திரேலியாவில் தங்கியிருக்கும் நாட்களில் சமஷ்டி அரசியல் அமைப்பு அவுஸ்திரேலியாவில் எங்ஙனம் செயல்படுகிறது என்பது பற்றி விரிவாக ஆராய்வார் என்று [illegible].

## வீட்டுக்குள்ளே விடிஞ்சால் வெளியிலும் விடியும்

இது யாழ்ப்பாணப் பேச்சு வழக்கில் வரும் பழமொழிகளில் ஒன்று. கோட்டைக்குள் குத்துவெட்டு நடத்தும் பொ. கட்சிக் சாரர்கள் தங்களின் கருத்து வேற்றுமைகளை தீர்த்துக் கொண்ட பிறகல்லவா 'ஐக்கிய முன்னணி' பற்றிப் பேச வேண்டும் என்பதற்காக இப் பழமொழியை இங்கு குறிப்பிடவில்லை.

வட்டுக்கோட்டை மக்கள் கவிமணி திரு. மு. இராமலிங்கம் யாழ்ப்பாணத்தில் வழங்கி வரும் பழமொழிகளை அச்சேற்றும் பொருட்டு, சேகரித்து வருகிருர். அவர் சேகரித்து சுதந்திரனுக்கு அனுப்பி வைத 100 பழமொழிகளில் ஒன்றுதான் [illegible] பழமொழி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைராக்கியம்

இன்று நினைத்தாலும் இப்போது நடந்தது போல் நிகழ்ந்துவிட்ட கதிர்மலையின் முடிவு...? கேவலம்... சாதாரண மனிதக் கூட்டத்தின் 'வந்து-போகும்' வாழ்வைவிட எத்தனை படிகளோ உயர்ந்தது. தங்கத்தைப் பித்தளையோடு இணைக்க இயலுமா...?

காய்ந்துபோன சருகுகளுக்குத் தீ மூட்டி விடுவது போலவும்; 'அழுகிப் போன கெட்டதுகளை'ப் புதைத்து விடுவது போன்றும்; இறந்து போன 'மனித கட்டைகளை' 'அடக்கம்' செய்த கணமே மறந்துவிடும் மனிதர்கள்...கதிர் மலையைக் கனவிலும் நினைப்பார்களா...?

'நாம் அவனின் தூய நினைவோடு தான் இருக்கிறோம்'' —என்று பன்மையில் குறிப்பிட்டுச் சொல்ல எனக்குத் தைரியமில்லை ஆனுல்...? நான் கதிர்மலையின் புனித நினைவுகளோடும், சிந்தனைகளோடும் தான் வாழ்ந்து கொண்டிருக்கின்றேன். இரத்தமும் சதையுமாக என் வாழ்வோடு பின்னியுள்ள கதிர்மலையின் துயரங்களையும், 'தியாகச் சுவடுகளை'யும் நானே நினைந்து, நினைந்து குமைவதிலும், தியங்கி மனங் கலங்குவதிலும் பார்க்க, உங்களோடு பகிர்ந்து கொள்வதில் சற்றேனும் அமைதி கிட்டுமல்லவா?...

மார்கழி மாதத்தில் கொட்ட ஆரம்பித்த அடைமழை தை மாதத்தில் ஓய வேண்டும் என்பது நமது சங்கடமான நியதியாக இருக்கலாம். கொடுங் குளிர் நடுக்கம் விளைத்த விருப்பமாகவும் இருக்கலாம்...! ஆனுல்...

இயற்கையின்விருப்பிற்கோ, வெறுப்பிற்கோ நம்மைவிட அதிக வல்லமை உண்டே...? இதை அறிவு மிகுந்த மனித குலம் எங்கே உணரும்? எப்படித் தான் உணரும்? இதற்குச் சாட்சியாக மாசிமாதம் கூட மழையும் வெயிலும் மாறி மாறி விழுந்தது.

தேயிலை மலைகளின் மீதெல்லாம் வெள்ளைத் துகிலைப் போன்ற ஒளி வெள்ளம் அலை அலையாக அவைகளின் மீது பாய்ந்து, தாறுமாருக அவற்றினைக் கிழித் தெறிவது போல் அகற்றும்! விரட்டும்! முகிலுக்கும் வெளி வெயிலுக்கும் நடக்கும் ஓச் சமர் ஓர் நித்திய போராட்டமோ...? இயற்கையின் சின்னஞ் சிறு அசைவுகளும் கூட ஏதோ ஓர் மெய்மையை அடித்துக் கூறுவது தானே...?

கதிர்மலையின் கண்ணீரை எனது உருக் காட்டியும் ஆறுதல் மொழிகளும் அணை போட்டு நிறுத்தி விடுமா? அவனும் அவனது தந்தையும், அண்ணியும், அண்ணனது பிள்ளைகளும், உடன் பிறப்புகளும் படும் வேதனையைக்; கவலையை நான் மொழியும் வார்த்தைகள் தணித்துவிடும் வல்லமையை முழுதாகப் பெற்றிருக்குமானுல்; சிக்கலுக்கே இடமில்லைத்தான்!...

தன்னையே முதல் மகனுகக் கருதி; உயிராக வளர்த்த தமயனை இழந்து, தடுமாறி நிற்கும்—மாலுமி இல்லாத கப்பல் போல நடுக்கடலில் சிக்குண்டு தத்தளிக்கும்—கதிர் மலைக்கு...!

'தன் அண்ணியையும், அண்ணனது குழந்தைகளையும் எப்படிக் காப்பாற்றுவேன்? அவர்களின் நெஞ்சங்களில் பழைய அமைதியை; ஆனந்தத்தை எப்படித் தூவித் துளிர்த்திடச் செய்வேன்...?'—என்று தடுமாறும் கதிர்மலைக்கு; நான் வாயளவில்தான் ஆறுதல் கூற முடியும். செயலளவில்...?

எட்டு நாட்கள் கடந்துவிடப் போவதை ஞாபக மூட்டும் விதத்தில்; சமய விதிப்படியோ, இல்லை பழைய மரபுப்படியோ, 'எட்டுக்கும்பிடல்' இன்று நடக்கிறது. ஆம், கதிர்மலையின். மூத்த அண்ணன் 'அகால' மரணம் அடைந்தோ, கொலை செய்யப்பட்டோ, இன்று 'எட்டாம் நாள்!'

நானும் கதிர்மலையின் வீட்டுக்குள் நுழைந்தேன். திண்ணையில் துயரத்தின் சின்னமாக, கவலைகள் முன்னும் பின்னும் கதிர்மலையைத் தள்ள; துவண்டு போன நெஞ்சத்தோடு சோர்ந்து போய், முகம் முழங்கால்களை வட்டமிடக் குத்துக் கல்லாகக் குந்தி இருந்தான் கதிர்மலை!

'கதிர்மலை கவலைப்படாதே!' —நான் அவனை நெருங்கினேன். அவன் நிமிர்ந்து என்னைப் பார்த்தான்.

'எங்க அண்ணனுக்கு எட்டுக்கும்பிட வேண்டிய கட்டம் எனக்கு வந்திடுச்சே...'. கதிர்மலையின வாயை எனது கரங்கள் மூடின. அந்தக் கணமே வீட்டின் மூலையிலிருந்து; ,எங்களை இப்படி விட்டுட்டுப் போயிட்டீங்களே...சாமி!''—என்று அவனின் அண்ணியின் துயர ஓலம்- அழுகுரல் அந்த லயத்தையே கலங்க வைத்தது...

திண்ணையில் குந்தியிருந்த கதிர்மலையின் அண்ணன் மகன் அம்மாவின் அழுகை ஒலி கேட்டு, பொருமி; அழ ஆரம்பித்தான். உடனே கதிர்மலை அவனை வாரி அணைத்துத் தூக்கிக் கொண்டு—

அழாதே எங்க துரை! அழாதே!'' பீறிட்டுக் கிளம்பிய குமுறலை அடக்கிக் கொண்டு அவன் தேற்றினுன். குழந்தையைத் தேற்றிவிடலாம். குமைந்து மடியும் ஒரு பெண்ணினைத் தேற்ற முடியுமா...?

தோட்டத்துப் பெரிய மனிதர்கள்; உறவினர்கள் எல்லோரும் சோகக் கதைகளையும், உண்மைகளையும், கூறிக்கொண்டே கூடினுர்கள். கதிர் மலை அண்ணனின திருவுருவப் படத்தை எடுத்துவைத்தான.

அவனின் தகப்பனுர் தட்டுண்டு தள்ளாடி மூத்தமகனைப் படத்தில் பார்த்தார். குழிவிழுந்த அப்பெரியவரின் கண்களால் பொங்கிக் கிளம்பிய கண்ணீர்த் துளிகள் மாலை மாலையாக உதிர்ந்தன. 'என்னைக் கொண்டு போயிருக்கக் கூடாதா கடவுளே...? வாழைக்குருத்தை முறிச்ச மாதிரி என குடும்பத்தையே கட்டுக் குலைச்சிட்டியே...?' பெரியவர் புதற்றுவதில் அர்த்தம் இல்லாமலில்லை. மகனைப் பிரிந்த கவலை அவருக்கல்லவா புரியும். 'நாம நினைக்கிற மாதிரியா கடவுள் நினைக்கிறுன்? கண்ணீர் விட்டு காரியம் நடக்காது' — கூட்டத்தில் ஒருவரின் பொன்மொழி ஆறுதல்மொழியாக வெளிவந்தது. இப்படிப் பலரும் பலபட எப்படி எல்லாமோ சொல்லாறுதல் காட்டினுர்கள். இதற்கூடே, 'எட்டுக்கும்பிடல்' முறையோடு நடந்து முடிந்தது.

எல்லோரும் அமர்ந்தார்கள். வெற்றிலையை ஒருவர் குதப்பிமென்றூர். ஒருவர் பாக்கை நறுக்கினுர். மற்றொருவர் சுண்ணும்பை வெற்றிலையில் தடவிய படியே,

'பாலன் பாடு முடிந்து 'ரோச்சு' அவன் மனைவியையும் மக்களையும் அவனைப் போலே இனியாரு காப்பாற்றப் போருரே...? என்று [illegible] முடிக்கவில்லை.

'என்னு சொன்னீங்க? நான் இருக்கிறேன். என் அண்ணனுக்குப் பதிலாத் தெரியுமா? இங்கே எவரும் அண்ணியைப் பத்தியோ, அண்ணன் பிள்ளைகளைப் பத்தியோ எதுவும் சொல்லவேண்டாம். எல்லாத்திற்கும் நான் பொறுப்பு!'—கதிர்மலையின் பதில் பேசியவர்கள் வாய்களை மட்டுமா, அங்கிருந்தவர்கள் வாய்களையே அடைத்து விட்டது. எல்லோருக்கும் திகைப்பும், அதிர்ச்சியும் தலைதட்டியது. அங்கே சில விஞடிகள் ஒரே அமைதி!

'நியாயம்' பேச வந்தவர்கள் துண்டை தோளில் போட்டுக் கொண்டு, நெஞ்சடைத்து நடந்தார்கள்.

நான் கதிர்மலையைக் கட்டித் தழுவிக்கொண்டேன். அவனை எப்படிப் பாராட்டுவது? என்ன சொல்லி பாராட்டுவது என்று புரியாமல் தடுமாறினேன்.

கதிர்மலையின் கண்களில் பொங்கி நின்றதே கண்ணீர்! விம்மிக் குமுறியதே அவனது நெஞ்சம்!

இவை ஏன்?

முந்நூறு மரங்கள் 'கவ்வாத்து' வெட்டிய களைப்பு! அயர்ந்து திண்ணையில் படுத்திருந்தேன்! என்ன இடைஞ்சல்...?

கோழிகளும் குஞ்சுகளும் கூட்டங் கூட்டமாக வந்து என்னை உறங்கவிடவில்லை. என் நாய் வேறு காலடியில் படுத்துக் கொண்டு, உறவு காட்டி; வாலையாட்டி விளையாட ஆரம்பித்தது. கையிலிருந்த 'அகல் விளக்கு' என்னும் புத்தகத்தை அடையாளத்துடன் மூடி வைத்தேன்.

## எமது சிறுகதை

'என்னடா ராஜா குழப்பம்!'—நாயை செல்லமாக அதட்டினேன். அது பலபடி முன்னேறிமுகத்துக்குக்கிட்டேயே வந்துவிட்டது. 'போதும் போடா ராஜா!'. உரக்கச் சத்தமிட்டேன். அது ஓடியது. கண் விழித்துப் பார்த்தேன். பகற்பொழுது வேகமாக ஓடுகிறதே அவசரக்காரனைப் போல்?

வீட்டைத் திறந்து கோழிக் குஞ்சுகளுக்கு 'அரிசிக் குருனை'க் கொஞ்சம் அள்ளி வாசற்படியில் போட்டேன். அவை ஒன்ருேடு ஒன்றிக் கொத்திக் கொண்டு அதைக் கொரிக்கத் தொடங்கின.

'தங்கவேலு...! கடைக்குப் போகலையா?' -கதிர்மலை கேட்டபடியே திண்ணையில் அமர்ந்தான்.

'நீ குடும்பக்காரன்! நான் தனி மனிதன்! நினைத்தால் போவேன்! இல்லாவிட்டால் சும்மாகிடப்பேன்!'

'குடும்பப் பாரத்தோடு துயரச் சுமையும் உள்ளவன் நான்.'—கதிர்மலையின் பதில் என்னைப் பேச வைத்தது.

கதிர்மலை! உனக்காவது அண்ணி உண்டு! எனக்கு...'

'நீயும் மற்றவர்களைப் போலத்தான் நினைக்கிறீயா? நான் ஒன்றும் 'சம்சார' வாழ்வு நடத்தலே என்பதை நீயாவது தெரிஞ்சிக்கப்பா!'

'என்னப்பா கதிர்மலை... [illegible]

'ஆம் தங்கவேல். என் வாழ்வில் இனிப்பிற்கே இனி இடமேது? கசப்பும் கவலையும் தான் உரிமை கொண்டாடும்!'

'ஏன்?' நான் அவனை நோக்கினேன். அவன் முகம் வாடியே இருந்தது.

'அண்ணியை என்று கண்டேனே அன்றே அவுங்களை அன்னையாகத்தான் கண்டேன். தாயற்ற எனக்கு என் அண்ணியின் அன்பும் ஆதரவும் தாய்ப் பாசத்தைத்தான் எனக்குக் காட்டியது. வளர்த்தது. அந்தத் தாயை எப்படி நான் தாரமாக நினைக்க முடியும்?'—கதிர்மலையின் பதில் என்னைத் திடுக்கிட வைத்தது.

எவ்வளவோ சொல்லிப் பார்த்தேன். அவன் தனது உறுதியிலிருந்து சற்றும் தளர்வதாக இல்லை.

'பிறகேன் நானென்று பொறுப்பு ஏற்ருய்!' —துணிந்து கேட்டேன். 'அண்ணி இன்னும் அண்ணன் நினைவாகவே இருக்கிருங்களே. என் கடமையை நான் செய்ய வேண்டாமா?' -பெருஞ் சுமையோடு நின்று பேசுவோனைப் போல் அவனது குரல் தொனித்தது,

'தான்' வேதனைத் தீயில் அகப்பட்டுக் கருகிச் சாவது போல் அந்த இளம் விதவையையும் நெருப்பிலே பூவாக வாட விடுகிறுனே...!'

தோட்டத்து மக்கள் மற்றவர்களின் குடும்ப நடப்புகளைப் பற்றிப் பேசுவதில் மிகவும் வல்லவர்கள். அதிலும் கதிர் மலையை அவர்கள் எப்படி மறந்துவிடப் போகிறுர்கள்...? சம்பந்தமின்றியே சம்பந்தப் படுத்துவதில் ஏதோ ஒரு ரசனை அவர்கட்கு!

'அவளும் பிள்ளைகளும் தவிக்குது! இவன் லயம் வயமா சுத்துறன்!' இதைப் போல நூறு நெருப்புச் சொற்கள் கதிர்மலையின் மெல்லிய உள்ளத்தைச் சுட்டுப் பொசுக்கின.

மனித உள்ளங்களின் நெளிவு சுழிவுகளைத் தோட்டத்து மக்கள் மதிப்பதில்லை. மென்மையான நெஞ்சங்களை வன்மையான சொற்களால் காயப் படுத்துவதில் 'கை தேர்ந்தவர்கள்' பட்டத்தை அவர்கள் விடத் தயாராயில்லை.

அடிக்கடி எனது வீட்டிற்கு ஆறுதலுக்காக வரும் கதிர் மலையை எனது சகோதரி ,பொட்டு' வோடு இணைத்துக் கதை கட்டி விட்டார்கள். அத்தோடு நிற்கவில்லை. அவன் அண்ணியின் காதிலும் இதனை பலவாறு எடுத்து ஓதி விட்டார்கள். பயன்...?

என்னையும் என் பிள்ளைகளையும் கொன்றுவிட்டு நீ பொட்டோடு போய் இரு!?

ஒரு நாள் கதிர்மலையின் அண்ணியிட்ட ஆணை அவனை நிலை குலைய அடித்தது. அவளின் முன் அவன் ஊமை. அண்ணன் மகனைத் தூக்கிக் கொண்டு வெளியில் நடந்தான். தோட்டத்தோடு அண்ணியும் சேர்ந்து சந்தேகப்படுவது அவனை மேலும் பித்தனுக்கியது. 'அப்பா!' - என்ற அண்ணன் மகனை அணைத்தவாறே அழுதான்!

'நினைத்தவுடன் சுரப்பதா காதல்? அது உணர்ச்சியின் கொடுமுடி!' என்றெல்லாம் அறிஞர்கள் அநுபவசாலிகள் கூறலாம். சாதாரண மக்கள் இதற்குச் 'சரி' யிடவோ' 'சம்மதம்' காட்ட முன் வரமாட்டார்கள்.

அத்தோடு கதிர்மலை எடுத்துக் கொண்ட 'சங்கற்பம்' அவனுக்கும் எனக்குந்தானே வெளிச்சம்!

நான் அவனது இளைய சகோதரியை மணந்து கொண்டேன்' எனது திருமணத்தால் கதிர்மலையின் குடும்பச் சுமை —மனச் சுமையும்தான் -சற்றளகாவது குறைந்திருந்தால் நல்லது தான். அது அடபடியாகத தெரியவில்லையே.

என் தங்கை பொட்டை, 'கதிமலைச்சேர்த்துக்கொள்ளப் போகிறுன். கூட்டிக்கிட்டு ஓடப் போகிறுன்.' எங்கே திரும்பினுலும் ஏக வசனங்கள் எதிரொலித்தன. தலைநிமிர முடியவில்லை, கதிர்மலைக்கு இரு புறமும் தாக்குதல்.

சிக்கலிலிருந்து மீள வழி...

கதிர்மலை அறிமுகப் படுத்திய மாப்பிளைக்கே பொட்டையைத் திருமணஞ் செய்து கொடுத்தேன். வெறு வாய்களை அவர்கள் மெல்லத் தவறவில்லை.

கதிர்மலையின் அண்ணியைக் கிள்ளி விட்டு வேடிக்கைபார்த்தார்கள். என்ருலும் அவன் தன் பாட்டில் தனிவழியே நடந்தான். எந்தப் பெண்களையும் அவன் கண்கள் பார்ப்பதில்லை. அவன் ஓர் உண்மைத் துறவி! அவனது புறநடத்தைகள் இதை துல்லியமாகப் புலப்படுத்தின... மனச்சாந்தி, மனேதர்மம்; இதற்கு அவன் அடங்கிவிட்டானு? இல்லை தனது,சபதம் - நிறைவேற இவைகளைப் பாதுகாப்பாக்கினுனே? என்ன சொன்னுலும் அவன கண்ணியன்! கட்டுக் கதைகளுக்கு அப்பாற்பட்டவன்!

**காலம்** வகுத்த கணக்கை கதிர்மலையின் தந்தை செய்து முடித்து மன நிறைவில் பொய்யுடல் நீத்தார். 'வளரும்; தளரும்; வற்றும்; பெருகும்!' - இதையே சதா; சொல்லியபடி இருந்த 'பெரியவர்' ஆமாம் ,கிழவர்' மறைந்துவிட்டார். மூத்த மகனுடைய மனைவி பிள்ளைகள் கவலையும் சேர்ந்து அவரை சாய்த்தது. கதிர்மலையின்' கடவுள் போக்கு அவருக்கு குழி காட்டியது!

காலம் கவலை கொள்ளாமல் ஓடியது...!

கதிர்மலையின் அண்ணன் மகன் மூத்தவனுக்கே வயது பதினுறு! கதிர்மலையின் அண்ணிக்கக;க' மகன் பெரியாளாகி விட்டான்! நம்மையும் பிள்ளைகளையும் மகன் கரைசேர்த்து விடுவான்!' - என்ற தைரியம். அதனுல் அண்ணியார் யாரையுமே சட்டை செய்வதில்லை. இதை 'மண்டைக்கர்வம்' என்பது பிழை. அவளுக்கு மகனின் வளர்ச்சி ஊட்டிய மனப் பூரிப்பு!

தலை நரை கண்டு விட்டது கதிர்மலைக்கு! வாலிபத்தின் வனப்பில் முதுமையின் வடு மெழுகேற முனைவது தெரிந்தது. உள்ளத்தில் அவன் முதியவன் தானே! அண்ணன் குடியை ஒப்பேற்ற அவன் ஏற்ற கூடுமுழைப்பு.!

'முள்ளுக்குத்து மலைக்கு' அன்று காலையில் வழக்கப்படி தலையில் உரமூடையும், தோளில் முள்ளுமாக 'ஆயுதக் காம்பரா'விலிருந்து புறப்பட்டான் கதிர்மலை.

இளைத்துவிட்ட அவன் சக்திக்கு உரமூட்டைச் சுமை அதிகம்; மிகவும் அதிகம்! நெஞ்சேற்றமான குறுக்குப் பாதையில் நூறுநூறு படிகளுக்கும் மேலேறி மூச்சுத் திணற ஒரு விதமாக மலைக்கு வந்தான்.

அடுத்த கணம்...?

'அம்மா!'- என்றபடியே கதிர்மலை கீழே சாய்ந்தான்.

(14-ம் பக்கம் பார்க்க)

தமிழோவியன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சோசலிச பாதையிலே தி. மு. க.

## கவர்னர் உரை பற்றி ஒரு கண்ணோட்டம்

ஜனநாயகத்திலும், சோசலிசத்திலும் அபரிமிதமான நம்பிக்கையுடைய தி. மு. கழகம் தனது முதலாவது அரியணை உரையை கடந்த வாரம் சென்னை சட்டசபையில் சென்னை மாநில கவர்னர் உஜ்ஜல்சிங் வாயிலாக சமர்ப்பித்திருக்கிறது.

சனநாயகசோசலிசமே தமது மூச்சான கொள்கையென கடந்த சில ஆண்டுகளாக அகில இந்திய காங்கிரஸ் கூறி வந்த போதிலும் அதன் செயல் முறைத்திட்டங்கள் பணம் படைத்தவர்களை வாழ வைப்பதாகவே அமைந்திருந்தது. சனநாயகத்தையும் சோசலிசத்தையும் பிணைத்து தி. மு. க. பெருங் கோஷங்களை எழுப்பாத போதிலும் உண்மையான சனநாயக சோசலிசத்தை மிக அழகாகவும் ஆணித்தரமாகவும் தனது கன்னித்திட்டத்தில் சமர்ப்பித்து விட்டது.

சனநாயகத்தின் ஜீவநாடி தனி நபர் உரிமையாகும். அந்தத் தனி நபர் உரிமைக்கு அதிகப்படியான முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டுமென்பதை தி.மு.கழகத்தின் கன்னிப் பிரசங்கம் வலியுறுத்தி நிற்கிறது. இன்றைய இந்திய அரசியல் அமைப்புப்படி மத்திய அரசு அதிகப்படியான அதிகாரங்களைத் தனதாகக்கொண்டிருக்கிறது. இதனால் பாரதப் பொது மக்களுக்கு ஆட்சியுடன் நெருங்கிய பிணைப்பு அற்றுப் போய்விட்டது. ஐந்து ஆண்டுகளுக்கொரு முறை வாக்களிப்பது மட்டுமே தாம் நாட்டுக்கு செய்யும் கடமையென பாரத மக்கள் எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். இந்நிலை மாற்றியமைக்கப்பட்டு பொது மக்களும் ஆட்சி நடைமுறையில் அதிக ஈடுபாடு கொள்ள வேண்டுமெனில் நிர்வாகம் பரவலாக்கப்பட்டு மாநில ஆட்சி மன்றங்களின் கையில் அதிக பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட வேண்டும். இந்த உண்மையினை கடந்த வாரம் கவர்னர் உஜ்ஜல்சிங் சமர்ப்பித்த அரியணை உரை வலியுறுத்தி நிற்கிறது.

### அதிகாரப் பரவல்

ஆட்சியதிகாரங்கள் பரவலாக்கப்பட வேண்டும் என்ற கொள்கை சனநாயக நாடுகளுக்கு புதுமையானது அல்ல. பாராளுமன்ற ஆட்சி முறையின் தந்தையர் நாடு என வர்ணிக்கப்படும் இங்கிலாந்து நாட்டிலும் அதிகாரங்கள் பரவலாக்கப்பட்டிருப்பதை நாம் காண்கிறோம். அடுத்த பெரும் சனநாயகநாடு என்று கூறப்படும் ஐக்கிய அமெரிக்காவிலும் இந்நிலையே காணப்படுகிறது. கம்யூனிச சித்தாந்தத்தின் பிறப்பிடம் என வர்ணிக்கப்படும் ரஷ்யாவிலும் கூட ஆட்சியதிகாரம் பரவலாக்கப்பட்டிருக்கிறது.

நமது நாட்டிலும் கூட மாவட்டசபைகள் மூலம் இதனை செய்ய வேண்டுமென்ற கோரிக்கை அண்மைக் காலத்தில் வலுப்பெற்றுவிட்டது.

**எஸ். ஆர். எம்.**

மேலும் இந்தியநாட்டில்மத்திய அரசில் குவிந்து கிடக்கும் அதிகாரம் பரவலாக்கப்பட வேண்டும் என்பதை தீவிர வலது சாரிகளான சுதந்திரக் கட்சியினரும் தீவிர இடது சாரிகளான கம்யூனிஸ்டுகளும் திரு. ம. பொ. சியின் தமிழரடுக் கழகமும் அது போன்று ஆங்காங்கே உள்ள சிறு அரசியற் கட்சிகளும் வலியுறுத்தி வருகின்றன.

நடைபெற்ற பொதுத்தேர்தலின்பின் காங்கிரஸ் அல்லாத கட்சிகள் நிர்வாகப் பொறுப்பை ஏற்றிருக்கும் மாநிலங்களின் முதல்வர்களும் இக்கோரிக்கையை ஆதரித்து கருத்து வெளியிட்டுள்ளனர்.

பாரத நாட்டின் தேசிய ஒற்றுமை தொடர்ந்து பாதுகாக்கப்பட வேண்டுமெனில் நிச்சயமாக மத்திய அரசில் குவிந்து கிடக்கும் அதிகாரங்கள் பரவலாக்கப்பட வேண்டுமென்பதை எவரும் மறக்க முடியாது. ஆகவே தி. மு. கவின் இக்கோரிக்கைக்கு மத்திய அரசு செவிமடுக்க கடமைப்பட்டிருக்கிறது.

### ஐந்தாண்டுத் திட்டங்களின் குறை

பாரத நாடு சுதந்திரம் பெற்ற பின்னர் 3 ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவேற்றியுள்ளது. 4வது ஐந்தாண்டுத் திட்டத்துக்கான உத்தேசக் குறிப்புக்கள் நாடு பூராவிலும் விவாதிக்கப்பட்டு வருகிறது. முந்திய மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களும் ஓரளவு வெற்றி பெற்றிருக்கின்றன என்பதனை நாம் மறுக்கவில்லை. என்றாலும் இத்திட்டங்களினால் தென்னாடு, குறிப்பாக தமிழ் நாடு பூரணமான பயனை பெற்றிருக்கிறதா என்பது கேள்விக்குரியதாகும். நிறைவேற்றப்பட்ட மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களும் வடநாட்டை உள்மனதின் அடித்தளத்தில் கொண்டு ஆக்கப்பட்டது என்பதை எவரும் மறுக்க முடியாது.

வடநாட்டின் இயற்கை அமைப்பும் கலாசார பின்னணியும் முற்றிலும் தென்னாட்டிலிருந்து வேறுபட்டிருக்கிறது. குறிப்பாக தமிழ் நாட்டு மக்களில் எழுபது சதவீதம் பேர் விவசாயிகள். வேளாண்மையை நம்பியிருப்பவர்கள். ஆனால் மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களிலும் விவசாயத்துக்கு உரிய இடமளிக்கப்படவில்லை. விவசாயம் உரிய முறையில் கவனிக்கப்படாத காரணம் [illegible] - விவசாயிகளுக்கு ஊக்கமும் உதவியும் அளிக்கப்படாதது தான்-தமிழ் நாட்டில் ஏற்பட்டுள்ள உணவுப் பற்றுக் குறைக்கு ஒரு முக்கிய காரணம் என்பதை எவரும் மறுக்க முடியாது.

### உணவுப் பற்றுக்குறை செயற்கையானது

ஐந்தாண்டுத் திட்டங்களினால் தமிழ் நாட்டில் ஓரளவு தொழிற்சாலைகள் ஏற்பட்டுள்ளதென்றாலும், மக்களின் அடிப்படைத் தேவையான உணவுற்பத்தியைப் பெருக்கும் விவசாயிகளின் முன்னேற்றத்துக்கும் விவசாய உபகரணங்களை உற்பத்தி செய்வதற்கும் எவ்வித திட்டவட்டமான நடவடிக்கையும் இது காலவரை எடுக்கப்படவில்லை.

தமிழகத்திலுள்ள உணவுப் பற்றுக்குறை இயற்கையானது அல்ல, செயற்கையானதுதான் என்று தி. மு. க. தலைவர்கள் பலமுறை கருத்து வெளியிட்டிருக்கிறார்கள்.

தி. மு. க. ஆட்சியினரின் கொள்கைப் பிரகடனத்தில் டெல்லி அரசினரின் 4வது ஐந்தாண்டுத் திட்டத்தில் வேளாண்மை உற்பத்திதிட்ட வேலைகள் அடிப்படையாக அமைய வேண்டுமென்று கூறியிருப்பது வரவேற்கக் கூடிய ஒன்றாகும்.

உணவுக் கட்டுப்பாட்டுக் கொள்கையை தொடர்ந்து வைத்துக் கொள்வது என்றும், சிறிய விவசாயிகளுக்கு இடையூறு ஏற்படாத வகையில் கொள் முதல் செய்யவும் அரசாங்கம் உத்தேசித்துள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

இந்த முடிவுக்கு தி. மு. க.வின் தோழமைக் கட்சிகளில் ஒன்றான சுதந்திராக் கட்சி எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறது. தி. மு. க. ஆட்சியின் இந்த முடிவு சமுதாயத்தில் மிக எளிய நிலையில் உள்ள மக்களால் நிச்சயமாக வரவேற்கப்படும்.

### உணவுக் கட்டுப்பாடு

நாட்டில் போதிய உணவு தானியங்கள் இல்லாதவரை உணவுக் கட்டுப்பாட்டை நீக்குவதென்பது மிகவும் ஆபத்தான ஒரு செயல் என்பது மறுக்க முடியாத உண்மை.

போதிய தானியம் இல்லாத நிலையில், கட்டுப்பாடும் ரத்துச் செய்யப்பட்டால், அரிசிவிலை, ஆனை விலை குதிரை விலைக்கு ஏறிவிடும். கட்டுப்பாடு உள்ள நிலையிலேயே படி அரிசி 3 ரூபா விற்கிறதென்றால் கட்டுப்பாடற்ற நிலையில் ஏழை, நடுத்தர மக்கள் அரிசியை நினைத்தும் பார்க்க முடியாதபடி ஆகிவிடும். பொறுப்புணர்ச்சியற்ற வர்த்தகர்கள் இதுதான் தருணம் என்று கொள்ளை லாபம் அடிக்க முயலுவார்கள்.

கடந்த வாரம் தமிழ் நாடு வர்த்தகர்கள் சங்கம் தமிழக முதலமைச்சர் அண்ணாவைக் கண்டு, கட்டுப்பாட்டை ரத்துச் செய்ய வேண்டும் என்று கோரிய போது, 'ஒரு ரூபாவுக்கு ஒரு படி அரிசி தருவதாக உறுதிமொழி எழுதிக் கொடுத்தால் கட்டுப்பாட்டை ரத்துச் செய்வது பற்றி அரசாங்கம் ஆலோசிக்கும்' என்று முதலமைச்சர் தெரிவித்துள்ளார். இது பற்றி யோசித்து முடிவு சொல்வதாக வர்த்தகர்கள் கூறியிருக்கின்றனர். ஆகவே நாட்டில் போதிய தானியம் கிடைக்கும் நிலையேற்படும் வரை, வர்த்தகர்கள் பொறுப்புணர்ச்சியுடன் நடந்து கொள்வார்கள் என்ற நம்பிக்கை ஏற்படும் வரை, உணவுக் கட்டுப்பாட்டை ரத்துசெய்வது புத்திசாலித்தனமான காரியமல்ல.

### கொள்முதல்

தட்டுப்பாடான காலங்களில் உதவும் பொருட்டு போதிய உணவு தானியங்களை கொள்முதல் செய்து சேமித்து வைப்பது என்று கவர்னர் உரையில் கூறப்பட்டுள்ளது. இதில் சிறு விவசாயிகள் நசுக்கப்படாமல் பார்த்துக் கொள்வது அரசின் தவிர்க்க முடியாத கடமையாகும்.

சிறு நிலச் சொந்தக்காரர்களை வரிச் சுமையிலிருந்து விடுவிக்க படிப்படியான திட்டம் மேற் கொள்ளப்பட விருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இது உற்பத்தியைப் பெருக்குவதற்கு, உழவர்களுக்கு உற்சாகத்தையும், தூண்டுதலையும் அளிக்கும் ஒரு திட்டம் என்றே கொள்ள வேண்டியுள்ளது. ஆனால் இத்திட்டம் அமுலாகும் போது பெரிய நில சொந்தக்காரர்கள் தப்பிவிட இடமளிக்கக் கூடாது.

### மத்திய அரசின் உதவி

விலைவாசிப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மாநில அரசு எடுக்கும் நடவடிக்கைகளுக்கு மத்திய அரசு உதவி புரிய முன்வர வேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது. மத்திய அரசின் உதவியின்றி மாநில அரசு தனது திட்டங்களை முழுமையாக செயல்படுத்த முடியாது என்பது உண்மையே. காங்கிரசல்லாத அரசுகள

(12-ம் பக்கம் பார்க்க)

# இந்திய ஒருமைப்பாட்டுக்கு ஒரு சவால்—

இந்தியத் துணைக் கண்டத்தின் ஒற்றுமைக்கும் ஒருமைப்பாட்டுக்கும் ஒரு பெருஞ் சவாலாக அமைந்துள்ளது மகாராஷ்டிர மாநிலத்தில் தோன்றியுள்ள சிவசேனை என்ற இயக்கம். இந்த இயக்கத்தினர் எப்படித்தான் மறுத்த போதிலும், இனத்துவேசமும், வேற்று மாநிலத்தவர் ஒழிப்புந்தான் இவ்வியக்கத்தின் நோக்கம் என்பதை அந்த இயக்கத்தினரின் நடவடிக்கைகள் துலாம்பரமாக எடுத்துக்காட்டுவதாயிருக்கின்றன. தென்னிந்தியர்கள்மீது--அதிலும் குறிப்பாக தமிழர்கள், மலையாளிகள்மீது இவ்வியக்கத்தினர் கொண்டுள்ள துவேஷ உணர்ச்சி அவர்கள் சமீபத்தில் நடத்திய அரசியல் கிளர்ச்சியொன்றின் விளைவிலிருந்து மிகவும் தெளிவாக விளங்கியுள்ளது.

இந்த இயக்கம் தோன்றி 5 மாதங்கள்தான் ஆகின்றன. 1966ம் ஆண்டு அக்டோபர் மாதத்தில்தான் 'சிவசேனை' இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது. இந்த இயக்கத்தை உருவாக்கக் காரணமாக இருந்தவர் ஒரு மராட்டிய வார இதழின் ஆசிரியர். இதை ஆரம்பித்த போது மராட்டியரின் தன்மானத்தைக் காப்பாற்றவே இவ்வியக்கம் ஆரம்பிக்கப்படுகிறது என்று சொல்லப்பட்டது.

### 80 கிளைக்கழகம் ஒரு இலட்சம் உறுப்பினர்கள்

இவ்வியக்கத்தை ஆரம்பித்தவர் பத்திரிகையாளர் மட்டுமல்ல, ஒரு சிறந்த கேலிச்சித்திரக்காரரும் கூட. 'சிவசேனை இயக்கம்' எவ்வகையிலும் இனத்துவேஷமற்ற இயக்கம் என்று அவர் இயக்கம் தொடங்கப்பட்ட நேரத்தில் விளக்கம் அளித்திருந்தார்.

மகாராஷ்டிர மாநிலமெங்கும் சுமார் 80 கிளைக் கழகங்களைக் கொண்ட இவ்வியக்கத்தில் இதுவரை ஒரு லட்சம் பேர் உறுப்பினர்களாக சேர்ந்திருக்கிறார்கள்.

குஜராத் தனி மாநிலமாகப் பிரிவதற்குமுன்னர் 54 சதவீதமாக இருந்த மராட்டியர் எண்ணிக்கை 34 சதவீதமாக இப்பொழுது குறைந்துவிட்டிருக்கிறதாம். இதுதான் 'சிவசேனை'யின் கவலை!

மகாராட்டிர மாநிலத்தில் உள்ள பல்வேறு நிறுவனங்களிலும், அரசாங்க திணைக்களங்களிலும், 80 சதவீதம்-சொந்த மாநிலத்தவருக்கே-மராட்டியர்களுக்கே கொடுக்கப்பட வேண்டும் என்பது 'சிவசேனையின்' முக்கியமான ஒரு கொள்கை.

### இனவெறியினால் ஏற்பட்ட நஷ்டம்

பம்பாயிலுள்ள தனியார் துறை பலவற்றிலும் தென்னிந்தியர்கள் பெரும்பான்மையாக இடம்பெற்றுள்ளனர். இந்த 'ஆக்கிரமிப்பு' உடைத் தெரியப்பட வேண்டும்—இது சிவசேனையின் வாதம்!

இந்த குறுகிய [illegible] பிடித்த இயக்க[illegible] மையில் நடத்திய அரசியற் கிளர்ச்சியொன்றின் விளைவாக தென்னிந்தியர் வைத்திருந்த கடைகள், ஒட்டல்கள், தென்னிந்தியருக்கு சொந்தமான நிறுவனங்கள், அத்தனையும் சிவசேனைஇயக்கத்தினரின் வன்முறைத் தாக்குதலுக்கு உட்படுத்தப்பட்டன. இதனால் ஏற்பட்ட நஷ்டம் மிகப் பெரியது. ஆனால் இச் செய்திகள் வெளியே வராமல்இருட்டடிப்புச் செய்யப்பட்டுவிட்டன.

இன்று மகாராஷ்டிரத்திலே வாழ்கின்ற தென்னிந்தியர்களின் வாழ்க்கை—உயிர், ஒரு பயங்கரமான நிலையிலே இருக்கின்றது. எப்படி ஈழத்தில் சிங்கள இனவெறி தமிழர்மீது 1958ல் பாய்ந்ததோ, அதே போல மகாராஷ்டிரத்தில் வாழும் தென்னவர்கள் மீது வகுப்பு வெறியைக் கக்கியது 'சிவசேனை' இயக்கம்'

### கிருஷ்ணமேனனுக்கு எதிரான பிரசாரம்

'சிவசேனையில்' முஸ்லிம்களும், கிறித்தவர்களும்கூட இருக்கிறார்கள். எங்கள் இயக்கம் பாகுபாடற்றது' என்று அதன் ஸ்தாபகத்தலைவர் எப்படிவிளக்கமளித்தபோதிலும், அந்த இயக்கம் எடுத்த நடவடிக்கைகளும், அதன் செயல்களும், அது ஒரு குறுகியஇனத்துவேஷ இயக்கம் என்பதை ஐயந்திரிபுக்கு இடமின்றி எடுத்து விளக்குவதாக உள்ளன.

நடைபெற்று முடிந்த இந்தியப் பொதுத்தேர்தலில், பம்பாய் [illegible] திரு. [illegible] அதன்

(12-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம்.ஜீ.ஆரை எதிர்த்து பரங்கிமலைத் தொகுதியில் ஏன் பிரசாரம் செய்யவில்லை?

## பத்மினி அளித்த பதில்கள்

நடிகை பத்மினி சமீபத்தில் அளித்த பேட்டி யொன்றில் பல சுவையான பதில்களை தந்திருக்கிறார். அவை இங்கு இடம்பெறுகின்றன.

கே: திருமணத்திற்குப் பின் சினிமாவில் நடிக்கமாட்டேன் என்று முன்பு கூறினீர்களே இப்போது பல படங்களில் நடிக்கிறீர்களே அதன்மர்மம் என்ன?

ப: மனிதன் நினைப்பது போல் எதுவும் நடப்பதில்லை. நடிப்பைத் தொழிலாகக் கொண்டபின்பு அதை அறவே மறப்பதென்றால் அது மிகவும் சிரமமான காரியம் என்பதை நடைமுறையில் தெரிந்து கொண்டேன். ரசிகர்களின் திருப்திக்காகவும் எனது மகிழ்ச்சிக்காகவும் மறுபடி படங்களில் நடிக்கின்றேன்.

கே: உங்கள் மகன் பிரேம் ஆனந்தையும் நடிப்புத்துறையில் ஈடுபடுத்தப் போகிறீர்களா?

ப: அந்த எண்ணம் எனக்கோ என் கணவருக்கோ கிடையாது. ஓர் இந்தியப் பிரஜை என்ற முறையில் அவனை வளர்த்து வருகிறேன். எதிர் காலம் எப்படி அமையும் என்று யாரால் சொல்ல முடியும்?

கே: உங்கள் சினிமா வாழ்க்கை பற்றி கொஞ்சம் சொல்லுங்கள்.

ப: நான் எனக்கென்று தனியாக எந்த வாழ்க்கையையும் அமைத்துக் கொள்ளவில்லை. மேக் அப் செய்யாத வேளைகளில் ஒரு குடும்பப் பெண் எப்படி இருக்கவேண்டுமோ அப்படி என் மகன் மீது முழுக்கவனத்தையும் செலுத்து வேன். லண்டனில் அவன் தந்தை டாக்டர் மேல் படிப்பு படித்துக் கொண்டிருப்பதால் தந்தையின் ஏக்கம் வந்து விடாமல் இருக்க அதிக அக்கறை எடுக்கிறேன். சென்ற வருடம் நானும் மகளும் ஒரு மாதம் லண்டனில் அவருடன் இருந்தோம்.

கே: நீங்கள் லண்டனில் இருந்தபோது உங்கள் வாழ்க்கை எப்படி இருந்தது?

ப: மிகவும் மகிழ்ச்சியுடைய தாயும் மறக்க முடியாததாகவும் இருந்தது. இன்னும் இரண்டாண்டுகளில் என் கணவர் மேல் படிப்பு முடித்து விட்டு சென்னைக்கு வருவார்.

கே: உங்கள் லட்சியம் என்ன?

ப: நல்லவள் என்ற பெயர் எப்பொழுதும் நிலைத்து நிற்க வேண்டும். தேசத்தின் முன்னேற்றத்திற்கும் நாட்டு மக்களின் நல்வாழ்வுக்கும் இயன்றதை செய்ய வேண்டும்.

கே: காங்கிரஸில் முக்கிய அங்கம் வகிக்கும் நீங்கள் எதனால் எம். ஜி. ஆர். போட்டியிட்ட பரங்கிமலைத் தொகுதியில் அவரை எதிர்த்து பிரசாரம் செய்யவில்லை?

ப: எம். ஜி. ஆர் அவர்கள் மாற்றுக் கட்சியில் இருந்தாலும் அவர் ஒரு கலைஞர் என்பதால்.

படங்கள்தான் ரசிகர்களின் வரவேற்பைபெற்றிருக்கின்றன என நான் நினைக்கிறேன். உங்கள் கருத்து என்ன?

ப: நீங்கள் சொல்வது உண்மை தான்.

கே: இந்தியில் தயாராகும் சித்தியில் நீங்கள் நடிக்கிறீர்களா?

ப: ஆமாம், இந்தப் படம் திரையிட்டதும் இன்னும்புதிய திருப்பம்ஏற்படும் என்று நான் நம்புகிறேன்.

கே: எம். ஜி. ஆருக்கும் உங்களுக்கும் கருத்து வேற்றுமை என்று சொல்லுகிறார்களே, அது



உண்மையா?

ப: வேணுமென்று கட்டி விட்ட பொய். இதுபோன்ற வதந்திகளைப் பொது மக்கள் நம்பவேண்டாம்.

கே: நீங்கள் ஏன் கவர்ச்சி உடைகளை நம்புவதில்லை?

ப: அந்தகைய கவர்ச்சி தேவையில்லை என்று நினைக்கிறேன்.

கே: நீங்கள் நடித்த படங்களில் உங்களுக்கு பிடித்தமான படம் எது?

ப. ஒரு தாய்க்கு எல்லாக் குழந்தைகளையும் பிடிக்கும்.

கே: இன்றைய பட உலகைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ப: பட உலகம நன்றாகவே இருக்கிறது, நான் அதிக படங்களில் நடிக்க விரும்பவில்லை.

கே: நீங்கள் எப்படி சினிமாவில் சேர்ந்தீர்கள்? அதைச் சொல்ல முடியுமா?

ப: முதன் முதலில் நாங்கள் நடனம் ஆடிவந்தோம். கலைவாணர் என். எஸ். கே., ஸ்ரீ ராமுலு நாயுடு ஆகியோர் எங்களுக்கு வாய்ப்பு கொடுத்தார்கள். பணம் படத்தில் தான் நானும் நடிகர் திலகமும் ஒன்றாகஇணைந்தோம். அதன் பின் பல படங்களில் நடிக்கும் வாய்ப்பு கிடைத்தது.

கே: நீங்கள் சிவாஜிகணேசனைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்? அவர் பத்மஸ்ரீ பட்டம்பெற்றதைப் பற்றி உங்கள் கருத்து என்ன?

ப: முற்றிலும்தகுதிவாய்ந்த அவருக்கு பொருத்தமான பட்டம் கிடைத்திருக்கிறது. நடிகர் திலகம் அவர்கள் உயர்வானவர். பண்பானவர். உலகத்திலேயே சிறந்த நடிகர்.

கே: மற்றப் படங்களை விட சிவாஜியும் நீங்களும் நடித்த

கே: நீங்கள் நடித்து அடுத்து வெளிவரும் படம் எது?

ப: ரவி புரடக்ஷன்ஸ் 'பேசும் தெய்வம்' கமலா பிக்சர்ஸ் 'பாலாடை' ஆகியவற்றில் ஒன்று வரலாம்.

---

திரை விமர்சனம்

## இரு வல்லவர்கள்

'வல்லவன்' வரிசையில் இலங்கையில் திரையிடப்பட்டுள்ள இரண்டாவது படம் இது. சந்தர்ப்பமும், சமுதாயக் குறைகளுமே ஒரு மனிதனை கெட்டவனாக்குகறது என்பதை விளக்கும் படம்தான் சினிமாஸ் திரைகளில் இப்பொழுது காட்சி தரும் 'இரு வல்லவர்கள்'

அண்ணன், தம்பி, இருவர், சுந்தரமூர்த்தி என்ற சமுதாயத்திலுள்ள நச்சுப்பாம்பு ஒன்றின் தவறான திசை திருப்புதலினால் திருடர்களாகின்றனர். ஆனால் ஒரு பெண்ணின் சந்திப்பு தம்பியை திருட்டுத்தொழிலிலிருந்து திருத்தி விடுகிறது. அண்ணனும் காலகட்டத்தில் பாச உணர்வுக்கு கட்டுப்பட்டு நல்லவனாகிறான். இதுதான் கதை.

மனோகர், ஜெய்சங்கர் இருவரும் அண்ணன் தம்பிகளாக நடித்திருக்கிறார்கள். சுந்தரமூர்த்தியாக வருகிறார் அசோகன்.

விஜயலட்சுமி ஜெய்சங்கரின் காதலியாக நடித்துள்ளார். அவர் தோன்றும் சில கட்டங்கள் வரும்போதெல்லாம் நாம் பார்ப்பது தமிழ் படம் தானா என்ற சந்தேகம் வருகிறது. சில இடங்களில் கண்களை மூடிக்கொள்ளவும் வேண்டியிருக்கிறது. இவ்வளவு தூரம் உடலின் மேடுபள்ளங்களை காட்டத்தான் வேண்டுமா?

பண்புள்ள குடும்பப் பெண்ணாக வசந்தா நடித்திருக்கிறார். தங்கவேலு பெண்வேடம் போட்டும், சாமியாராக வந்தும், வயிறு குலுங்கச் சிரிக்கவைக்கிறார். அவருக்கு துணையாக மனோரமா. சிரிப்புக்குகுறைவில்லை.

சிறந்த பொழுதுபோக்குப் படம் 'இருவல்லவர்கள்'

—மகேஸ்.



கொழும்பு கிரௌன் படமாளிகையில் திரையிடக் காத்திருக்கும் இந்திப்படமான ''அலடின்சின்பாத்'' இந்தி படத்தில் இந்த அழகியைக் காணலாம்.

---

## சோசலிச...

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

மைந்த மாநிலங்களுக்கு எவ்வித பாரபட்சமும் காட்டப் படமாட்டாது என்று இந்தியப் பிரதமர் இந்திரா காந்தியும் அண்மையில் கூறியிருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

ஜனதிபதி டாக்டர் இராதாகிருஷ்ணன் பாராளுமன்றத்தில் தமது அரியவுரை உரையில் உணவுப் பொருள் உற்பத்தியில் 1971ல் நாடு தன்னிறைவு பெறும் என்று கூறியுள்ளார். இது மத்திய அரசாங்கத்தின் திட்டம். ஆகவே உணவு உற்பத்திப் பெருக்கத்திற்கு தி.மு.க. அரசாங்கத்துக்கு மத்திய அரசாங்கத்தின் முழு ஒத்துழைப்பும் கிடைக்கும் என்று நம்பலாம்.

### திராவிட அரசுகள் ஒத்துழைப்பு

உணவுற்பத்தி, உணவு வழங்கல் முதலிய பலதுறைகளில் தென் மண்டல அரசுகளிடையே நெருக்கமான பிணைப்பும், தொடர்பும் இருக்க முயற்சி செய்யவும் தி. மு.க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. நான்கு திராவிட அரசுகளான கர்நாடகமும், ஆந்திரமும், தமிழகமும், கேரளமும். ஒரே பண்பாட்டை, ஒரே கலாசாரத்தை அடிப்படையாகக் கொண்டவை. இந்த நான்கு அரசுகளும், தமக்குள் இருக்கும் இயற்கை வளங்களை ஒன்றுடன் ஒன்று இணைப்பதன் மூலம் பல பயன்களைப்பெற முடியும். தென்னாட்டின் முன்னேற்றத்திற்கும் இந்தியாவின் நன்மைக்கும் இந்த நான்கு மாநிலங்களும் தமக்குள்ள பிணைப்பையும்தொடர்பையும் வலுப்படுத்திக் கொள்வது வரவேற்கக் கூடியதாகும்.

நிர்வாக இயந்திரம் சீராக இயங்க இன்றியமையாத சீர்திருத்தங்களைச் செய்வதென்றும் கவர்னர் உரையில் கூறப்பட்டுள்ளது. நிர்வாக சீராக அமைவதை தடுப்பவர்கள் அரசாங்கக் கொள்கைகளுக்கு முட்டுக்கட்டை போடுபவர்கள். அவர்கள்தயவு தாட்சண்யமின்றி அகற்றப்பட [illegible]டும். நிர்வாகத்துக்கு [illegible] உள்ள யாவும் பிடுங்கி எறியப்பட வேண்டியதவசியம். அப்

## இந்திய...

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

ஞட்டவர்—மலையாளி— என்ற காரணத்துக்காக, அவரை எதிர்த்து இவ்வியக்கம் தீவிர பிரசாரத்திலீடுபட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

### தென்னிந்தியரை பழிக்கும் சுவரொட்டி

அண்மையில் பம்பாய் நகரத்தின் மத்திய பகுதியெங்கும் இந்த இயக்கம் ஒட்டியிருநத, ஒரு கேலிச் சித்திரம் அங்கேயுள்ள தென்னிந்திய மக்களின் வெறுப்புக்கும் கண்டனத்துக்கும் உள்ளாகியிருக்கிறது.

மேலே சட்டை எதுவும் போடாமல், லுங்கி உடுத்த ஒரு தென்னிந்தயன் 'அய்யக்கா' என்று கூவிக்கொண்டு நிற்பது போல படம் போட்டு அதற்குக்கீழ் 'லுங்கி ராச்சியம்' என்று எழுதப்பட்டிருந்தது.

### முளையிலேயே கிள்ளப்படவேண்டும்

சுதந்திர பாரதத்தின் ஒரு பகுதி மக்களான தென்னிந்தியர்களை அவமதிக்கும் முறையில் இந்த அமைப்பு செயல்படுவதோடு அவர்களது அன்றாட வாழ்வுக்கும் பாதுகாப்பற்ற நிலையை தோற்றுவித்து விடுமோ என்று அச்சம் தெரிவிக்குமளவிற்கு பம்பாயில் நிலைமைகள் வளர்ந்து வருவதாகச் செய்திகள் கூறுகின்றன.

புதிய பாரத அரசாங்கம், இத்தகைய இனத்துவேஷ இயக்கங்களை முளையிலேயே கிள்ளி எறிய முன்வரத் தவறினால், காலப்போக்கில் இந்திய ஒருமைப்பாடு என்பது வெறும் கேலிக்கூத்தாகிவிடுமென்று அரசியல் அவதானிகள்கருத்து வெளியிட்டுள்ளனர்.

—எஸ். ஆர். எம்.

[illegible] உனது சோஷலிசப்பாதையில் முன்னேற முடியும்.

## "புரோக்கர் கந்தையா"

'நாட்டின் நாடகக் கலை நல்ல முறையில் வளர வேண்டுமாயின் அரசாங்க கலாச்சாரப் பிரிவினர் நாடகக் கலைஞர்களுக்கு சகல விதமான ஆதரவும் தர முன்வர வேண்டும் ஈழத்து நாடக கலை வளர்ச்சிக்கு அரசாங்கத்தின் உதவி மிகவும் அவசியம்'

மேற்கண்ட வாறு ஹோட்டல் ரப்பேலில் நடைபெற்ற 'புரோக்கர் கந்தையா' என்ற நாடக ஆரம்ப விழாவில் பங்கு பற்றிய அத்தனை கலைஞர்களும் ஏகோபித்த குரலில் கூறினார்கள். விழாவிற்கு கலைச்சங்கத் தலைவர் வி. என். பெரியசாமி தலைமை வகித்தார். ரொசாரியோபீரிஸ், திருமதி போகா பாலச்சந்திரன், அ.ந.கந்தசாமி எஸ். ராமதாஸ் ஆகியோர் பேசினார்கள்.

கே. எம். வாசகர் கதை வசனம் எழுத கே. பாலச்சந்திரன் இந்நாடகத்தை தயாரித்தளிக்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரைவாணன் பதில்கள்

எஸ். பி. துரைராஜா
பிட்றைடன்

கே: எம். ஜி. ஆர். கலாசார மந்திரியாவாரா?

ப: நீர் இந்த உலகில் தான் இருக்கிறீரா?

கே: மக்கள் திலகம் தேர்தலில் வெற்றியடைந்த செய்தியை நடிகர்திலகம் கேள்விப்பட்டதும் என்ன நினைத்திருப்பார்?

ப: அண்ணனுக்கு மக்கள் திலகம் என்றபட்டம் நூற்றுக்கு நூறு சரியானதென்று நினைத்திருப்பார்.

கே: இன்று தமிழ் சினிமா பின்தங்கிய நிலையில் இருப்பதற்கு நடிகர்களா? அல்லது தயாரிப்பாளர்களா காரணம்?

ப: இவர்கள் அல்ல, ரசிகர்கள் தான் காரணம்.

ந. மாணிக்கவாசகர்
கோபாலபுரம்

கே: எம். ஜி. ஆரும் சிவாஜியும் ஏன் இணைந்து படம் நடிப்பதில்லை?



ப: அவர்களை இணைத்து வைக்க எந்தப் படாதிபதிக்கும் துணிவு வராததால்.

வி. கே. லிங்கம்
கல்முனை

கே: சின்ன எம். ஜி. ஆர் ஜெய்சங்கர் குட்டி எம். ஜி. ஆர். ரவிச்சந்திரன் ஆகியோரது நடிப்பு தற்போது எப்படி உள்ளது?

ப: நடிப்பில் இன்னும் சின்ன எம். ஜி. ஆராகவும் குட்டி எம். ஜி. ஆராகவுமே இருக்கிறார்கள்.

தா. சிவசுப்பிரமணியம்
லிந்துலை

கே: தமிழ் நாட்டிலுள்ள சினிமா கொட்டகைகளை அரசாங்கம் ஏற்று நடத்துமென தி. மு. க. அரசாங்கம் கூறியுள்ளது. அப்படி செய்வது நல்லதா? கூடாதா?

ப: நாட்டுக்கும், சினிமா பார்ப்போருக்கும் அதனால் நன்மையேற்படும் என்பது எனது கருத்து.

புரட்சிலிங்கம்
பாண்டியூர்.

கே: எவரெஸ்ட் புகழ் அண்ணன் மக்கள் திலகம் எம். ஜி. ஆர். படுத்துக் கொண்டே ஜெயித்த பின் எப்படி இருக்கிறது மார்க்கெட்?



ப: எவரெஸ்ட் போல உயர்ந்திருக்கிறது.

எஸ். ஏ. மக்கள்தாசன்
உருத்திரபுரம்

கே: மக்கள் திலகம் எம்.ஜி. ஆர். இதுவரை நடித்து வெளிவந்த படங்களில் என்னபடத்திலாவது வில்லன் பாத்திரம் ஏற்று நடித்துள்ளாரா?

ப: ஆசைமுகத்தில் எம். ஜி. ஆர். ஏற்று நடித்த 'வஜ்ஜிர வேலு' பாகம் என்னவென்று நினைக்கிறீர்கள்?

க. நவரத்தினம்
நெடுங்கேணி

கே: கலை உலகத்திற் காண முடியாதது எது?

ப: நன்றி!

இ. நாகராஜா
தாழங்குடா

கே: எம். ஆர். ராதாவின் எதிர்காலம் எப்படி இருக்கும்?

ப: எதிர்காலம்என்று ஒன்று இருந்தாலல்லவா அது எப்படியிருக்கும் என்று கூறமுடியும்?

செல்வி. எஸ். எம். மகேஸ்
கொஸ்லந்தை.

கே: குழந்தை நட்சத்திரம் பேபி சகிலாவின் எதிர்காலம் எப்படி இருக்கும்?

ப: வளர்பிறை போல் இருக்கும்!

'முத்துராமன் பிரியை'
பதுளை.

கே: நடிகர் முத்துராமனின் முகவரி என்ன?

ப: 9, பாலூர் கன்னியப்ப கிராமணியார் தெரு' மைலாப்பூர், சென்னை-4.

சி. மரியநாயகம்,
மருதானை.

கே: பங்குனித்திங்கள் முதற் தேதியன்று இல்லறம் பூண்ட திருமதி சரோஜாதேவியின் முகவரி என்ன?

ப: 26, இரண்டாவது மெயின் ரோடு, காந்தி நகர், சென்னை-26.

எம். அசீஸ்,
ஏறுவூர்-3.

கே: எம். ஜி. ஆர். மீண்டும் படங்களில் நடிப்பாரா?

ப: ஏன் நடிக்கக் கூடாதா?

கே: எஸ். எஸ். ஆரும் விஜயகுமாரியும் ஜோடி சேர்ந்து நடித்த முதற்படம் எது?

ப: குலதெய்வம்.

ஆர். கண்ணதாசன்,
நீர்கொழும்பு.

கே: தடபுடலாக பெயர் அடிபட்ட 'வெண்ணிற ஆடை' நிர்மலா 'என்ன தான் முடிவு' நிர்மலா விஜயநிர்மலா இவர்களது பேச்சை யெல்லாம் இப்பொழுது அதிகமாக காணோமே?

ப: ஒவ்வொருவரும் இரண்டொரு படங்களில் நடித்து வருகின்றனர்.

சு. மனோகரன்,
இறத்தோட்டை.

கே: முன்பொரு முறை தம் மீது நச்சுத்திராவகம் வீச முயன்ற ஒருவரை அடையாளங் கண்டிருந்தும் அதை வெளியிட எம். ஜி. ஆர். மறுத்து விட்டாராமே?

ப: ஆம், உண்மைதான்.

கே: 'பெற்றால்தான் பிள்ளையா' சென்னையில் தற்போது எந்த நிலையில் ஓடிக்கொண்டிருக்கிறது?

ப: நூறுநாட்களைத் தாண்டி விட்டது.

திரைவாணன்,
சுதந்திரன் கலைப்பூஞ்சோலை
த. பெ. இல. 1183.
கொழும்பு.



சிலோன் தியேட்டர்ஸ் திரைகளுக்கு விரைவில் வரவிருக்கும் ''கல்யாண மண்டபம்'' படத்தில் ஆதித்தன், கே. ஆர். விஜயா

அடுத்த வாரம்
'கந்தன் கருணை'
விமர்சனம்
இடம் பெறும்

# விஜயா பேசுகிறார்

"ஒரு படத்தில் தான் நடித்திருக்கிறாள்! அதற்குள் பளபளப்பான கார் வாங்கி விட்டாளே, இந்த நடிகை" என்று சிலர் கூற நான் கேட்டிருக்கிறேன்! காரும் பங்களாவும் நடிகைக்கு தேவைதானா? என்று சிலர் கேட்கிறார்கள்!

எப்பொழுது பார்த்தாலும், சிரித்துக் கொண்டும், மகிழ்ச்சியோடும் இருக்கும் நடிகைகளை பார்த்ததும், "நடிகையின் சொர்க்க வாழ்வை பார்த்தாயா? ஒரே ஆட்டமும் பாட்டும்தான்" என்றுசிலர் நினைத்து விடுவார்கள்! ஆனால் உண்மையிலேயே நடிகையின் வாழ்வு எப்படிப்பட்டது என்று சிறிது நினைத்துப் பார்க்க வேண்டும்.

ரசிகர்களுக்கு ஒரு காட்சிப் பொருள் போலவே தோன்றும் நடிகை சொந்த வாழ்க்கையிலும் மிகவும் எச்சரிக்கையுடன் காட்சிதரவேண்டியிருக்கிறது!

குடும்பத்திலுள்ள நாலு பெண்களைப் போல இந்த நடிகை வாழமுடிவதில்லை. ஒரு சாதாரண குடும்பப் பெண்ணைப் பார்த்து அவளுடைய உடல் அழகையோ, உடை அலங்காரத்தையோ பற்றி யாரும் கவலைப்படுவதில்லை. ஆனால் குறிப்பிட்ட நடிகை என்ன மாதிரி பேசுகிறாள்? அவள்நடத்தைஎப்படி? ஆடை அலங்காரம் என்ன? உடற்கட்டை எப்படி பார்த்துக் கொள்கிறாள் என்று கவனிக்கிறார்கள்! இது பற்றி சிலர் பொழுது போக்காக விவாதமும் செய்து கொள்கிறார்கள்.

இதனால் நடிகை தன் உடற்கட்டை கவர்ச்சிகுறையாமல் பாதுகாத்துக்கொள்ளவேண்டியிருக்கிறது! அதற்காக எனக்கு தெரிந்த எத்தனையோ நடிகைகள் பட்டினி கிடக்கிறார்கள்! கைநிறைய சம்பாதித்தும் வயிறாரஉண்ணமுடியாதவாழ்க்கை நடத்தும் நட்சத்திரங்களும் இருக்கிறார்கள்.

சாப்பாடு விஷயத்தில் நான் குறைவைப்பதில்லை! இறைச்சி, முட்டை, காய் கறிகள் என்று தினமும் தவறாமல் சாப்பிட்டு விடுவேன்! என் உடல் உப்பாமல் இன்றும் கட்டோடுதானே [illegible] உடற்கட்டைப் பார்த்துதானே பெருமிதம் கொள்கிறேன்! இதைப் போல என்றும்



மெலிந்து போகாமலும் பருத்துப் போகாமலும் இருக்க விரும்புகிறேன்!

தினசரி மூன்று படப்பிடிப்புகளில் கலந்து கொள்கிறேன்! சரியான தூக்கம் கூட கிடையாது! அப்படியிருந்தும்நான் படப்பிடிப்புக்கு போகாமல் ஓய்வு எடுக்க விரும்புவதில்லை!

கிடைக்கும் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி, டைரக்டர்கள் சொல்லிக் கொடுப்பது போல நடித்து வருகிறேன்! குறிப்பிட்ட வயது வரைதான் ரசிகர்களின் உள்ளத்தை கிளுகிளுப்பு அடையச் செய்யும் காதல் ராணி வேடங்களில் நடிக்க முடியும் என்பதை நான் உணர்ந்தே இருக்கிறேன்.

19வயது ஆகியுள்ள எனக்கு இன்னும் எத்தனை ஆண்டு காலம் கதாநாயகியாக நடிக்க முடியும் என்பதை ரசிகர்களுக்கே விட்டு விடுகிறேன்! காலமெல்லாம் நானே நடிக்க வேண்டுமென்ற ஆக்கிரமிப்பு எண்ணம் எனக்கு கிடையாது!

தொடக்க காலத்தில் சொல்ல முடியாத அளவுக்கு வாழ்க்கையில் கஷ்டப்பட்டு நடிக்க வாய்ப்பு வாங்கியவள் நான்!


அதனுடைய அருமையும் பெருமையும் எனக்கு தெரிகிறது! ரசிகர்களுடைய ஆதரவால் எனக்கு பல படங்களில் நடிக்க சான்ஸ்தர இன்று படத் தயாரிப்பாளர்கள் முன் வந்து இருக்கிறார்கள்!

என்னுடைய நடிப்புத் திறமைக்கு ஏற்ற வேடம் இருந்தால் என்னைத் தேடி வந்து, நடிக்க வாய்ப்புத் தருகிறார்கள்! இப்போதெல்லாம் நான் யாரிடமும் சென்று நடிக்க வாய்ப்புத் தாருங்கள் என்று கேட்பதில்லை! அப்படி கேட்பதற்கு நேரமும் இல்லையே!

புதுப் பெண்கள் நடிக்க வருவதை நான் முழுமனதுடன் ஆதரிக்கிறேன்! அவர்களுக்கு நான் எதிரியல்ல! சினிமா உலக வாழ்வுதான் எப்படிப் பட்டது என்று கூறிவிட்டேனே! இதை புரிந்துகொண்டால் சரிதான்!



சிலோன் தியேட்டர்ஸ் திரைகளில் இவ்வாண்டு திரையிடப்படவிருக்கும் ''மகாகவி காளிதாஸ்'' படத்தில் பத்மினி கணேசனும், கே. பி. சுந்தராம்பாளும்.



இந்துப் புது வருடத்தை யொட்டி சிலோன்தியேட்டர்ஸ் நிறுவனத்தினர் அளிக்கவிருக்கும் குடும்பச் சித்திரமான ''இதய கமலம்'' படத்தில் வரும் ஒரு காட்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த் தாயின் மானம் காக்க தன்னுயிரைத் தந்தவர் அமரர் ஏகாம்பரம்

## இனத்தின் வரலாற்றில் அழியா இடம் பெறுவார்



இற்றைக்கு ஆறு வருடங்களுக்கு முன்னர்—1961ம் ஆண்டு—வந்த பெப்ரவரி, மார்ச் மாதங்கள் ஈழத் தமிழ் பேசும் இனத்தின் வரலாற்றிலே என்றுமே மறந்திட முடியாத மாதங்கள். சூது மதி கொண்ட சிங்கள ஆட்சி இலங்கையிலே ஆண்டாண்டுகாலமாக வாழ்ந்து வந்த தமிழ் பேசும் இனத்தை நசுக்க முனைந்தபோது அதை எதிர்த்து தமிழ்பேசும் மக்கள் ஒரே உருவினராய்—ஒரே குரல் குரலினராய் ஒரே கொள்கையினராய் பொங்கி எழுந்து போரின் குதித்த நாட்கள் அவை. இலங்கையின் வடக்கிலும் கிழக்கிலும் போர்க்குரல் கேட்டது. வெள்ளம் போல் தமிழர் கூட்டம் வீரங்கொள்கூட்டம்—உள்ளத்தால் ஒன்றுபட்டு—தமிழரசுக்கட்சியின் தலைமையிலே—தந்தை செல்வநாயகத்தின் தியாக வழியிலே அறப்போரில் குதித்தது.

வடக்கிலும் கிழக்கிலும் உள்ள அரசாங்க அலுவலகங்கள் செயலிழந்தன. இரண்டு மாதங்களாக வடக்கிலும் கிழக்கிலும் அரசாங்க இயந்திரம் இயங்க முடியாமற் போகச் செய்த மகத்தான போராட்டம் அது.

### திருமலை கச்சேரி முன்பு.

அப்போராட்டத்தின்போது திருமலைக் கச்சேரி முன்பு நடைபெற்ற மறியலிலே ஒரு முன்னேடும் தளபதியாய் விளங்கினார் அந்த முதியவர். அவர் முதியவர்போல் தோன்றினாலும் அவர் முகத்திலே வீர உணர்வு பளிச்சிட்டது. வேங்கையின் வீரம் தென்பட்டது. கச்சேரி முன்பு மறியலில் ஈடுபட்டோர்க்கு தலைமை தாங்கி போரை நடத்திக் கொண்டிருக்கிறார் அவர். அப்போது.........

எங்கிருந்தோ வந்து குவிகிறார்கள் காக்கிச்சட்டை அணிந்த பொலிஸ் வீரர்கள். அவர்களின் கைகளிலோ குண்டாந்தடிகள். சத்தியாக்கிரக வீரர்களை சுற்றி வளைக்கிறார்கள். ஏ. எஸ். பி, சத்தியாக்கிரகத்துக்குத் தலைமை வகித்து அறப்போரை நடாத்திக் கொண்டிருக்கும் அந்த முதிய தலைவரிடம் வந்து என்னவோ சொல்கிறார். அதற்கு அந்த முதியவரும் தலையை அசைத்தபடியே உறுதியுடன் பதில் சொல்வது தெரிகிறது.

### மூக்குடைந்தது!

அடுத்த கணம் சுற்றி வளைத்து நின்ற பொலிசாரின் கைகளில் இருந்த குண்டாந்தடிகள் அறப்போராட்டவீரர்களை பதம் பார்க்கிறது. ஓங்கி ஓங்கி குண்டாந்தடிகளால் சத்தியாக்கிரக வீரர்கள் நையப் புடைக்கப்படுகிறார்கள். ஆனால் ஒருவராவது இருந்த இடத்தைவிட்டு அசையவேண்டுமே! அதுதான் இல்லை. 'தமிழ் வாழ்க' என்ற தாரக மந்திரத்துடன் அவர்கள் அசையாமல் உட்கார்ந்திருக்கிறார்கள். அதோ, போராட்டத் தளபதியாக விளங்கிய அந்த முதியவரின் மூக்கு உடைபட்டு இரத்தம் சொட்டுகிறது. அப்பொழுது ஒரு தொண்டர் அவரிடம் சென்று காயத்துக்கு மருந்து போட்டுவரும்படி கூறுகிறார். அதற்கு அந்த முதியவர்—ஆம் அவர்தான் மூதூர் தந்த முத்து — திரு. ஏகாம்பரம் அவர்கள் என்ன சொன்னார் தெரியுமா? 'தமிழ்த் தாய் இன்று மூக்குடைபட்டு இரத்தம் சொட்டச்சொட்ட நிற்கிறாள். அவள் இரத்தத்தைத் துடைத்து அந்தக் காயத்தை ஆற்ற வேண்டும். அதுவே என் முதல் வேலை. அந்தத் தமிழ் தாயின் மூக்கிலிருந்து கொட்டப்படும் இரத்தத்தை நிறுத்தவே எனது மூக்கிலிருந்து இரத்தத்தை கொட்டுகிறேன். மூக்கு மட்டுமா? தமிழ்த்தாய் இந்நாட்டில் தலைநிமிர்ந்து வாழ்வதற்காக என் உயிரையும் தரச் சித்தமாக இருக்கிறேன்'' இப்படிக் கூறிய திரு ஏகாம்பரம் அவர்கள் தான் சொன்னபடியே தமிழ்த் தாயின் நல்வாழ்வுக்காக, போர்க்களத்திலேயே தன்னுடைய உயிரை தத்தம் செய்து அமரரானார்.

### பொதுப்பணி

அமரர் திரு. ஏகாம்பரனார் தனது வாழ்நாள் முழுவதும் பொதுப்பணி ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு உழைத்துவந்தவர். திருமலை நகராண்மைக்கழக உறுப்பினராக தனது பணியைத் துவக்கிய திரு. ஏகாம்பரனார் படிப்படியாக முன்னேறி நகராண்மைக் கழகத் தலைவராகவும் விளங்கினார். நகராண்மைக் கழகத் தலைவராக பணிபுரியும் போது, ஈழத்தில் தமிழ்ப் பேசும்இனம், ஒற்றுமையின்றி சின்னபின்னப்பட்டு, உரிமை இழந்து தவிப்பதையும, தமிழ் பேசும் இனத்தின் வாழ்விடத்

**"திருமலையான்"**

தை அபகரிக்கவும் மொழியை அழிக்கவும் வகுப்புவாத இனவெறிபிடித்த சிங்கள அரசாங்கங்கள் நடவடிக்கைகள் மேற்கொண்டுவருவதைக் கண்டார்.

### மூதூர் முதல்வர்

தமிழ்ப் பேசும் இனத்தையும், தமிழ்ப்பேசும் பிரதேசத்தையும் பாதுகாக்கக்கூடிய கட்சி எது, தமிழ் மக்களுக்கு நல்வழி காட்டும் தலைவன் யார் என்று, தீர்க்க தரிசனத்துடன் ஆராய்ந்தார். அவரது ஆராய்ச்சியின் பயனாக தான் அங்கத்துவம் வகித்துவந்த ஐ. தே. கட்சியை உதறி எறிந்தார். திரு செல்வநாயகம் காட்டும் நல்வழியில் நடைபோடும் தமிழரசுக் கட்சியில் சேர்ந்த அமரர் ஏகாம்பரனார் அக்கட்சியின் கொள்கைகளிலும் கோட்பாடுகளிலும் உண்மையான நம்பிக்கையும் விசுவாசமும் கொண்டு தொண்டர்க்குத் தொண்டராக உழைத்தார். இதனால் தலைவர்களின் நம்பிக்கையைப்பெற்று மூதூர் தொகுதியின் முதல் வருமானார்.

மூதூர் முதல்வராக விளங்கிய திரு ஏகாம்பரனார் தமிழரசுக் கட்சியின் ஒரு தீவிர உறுப்பினராகப் பணிபுரிந்த போதிலும், தொகுதிப்பணி ஆற்றும்போது கட்சிப்பேதம், இனபேதம்,இன்றி சகல மக்களுக்கும் தொண்டாற்றி வந்தார். மூதூர்த் தொகுதியிலுள்ள தமிழ் மக்களும் இஸ்லாமிய மக்களும் சிங்கள மக்களும் கூட ஏகாம்பரனாரிடம் அளப்பரிய அன்பும், பாசமும் கொண்டிருந்தனர்.

### அவரது கொள்கைகள்

வடக்கு, கிழக்கு மாகாண தமிழ் பேசும் மக்களின் ஒற்றுமையில் அதிக நம்பிக்கை கொண்டிருந்தவர் திரு ஏகாம்பரனார். இந்து கிறிஸ்தவ, இஸ்லாமியர் என்று தமிழ்ப் பேசும் மக்களை பிரிக்கும் சக்திகளை அவர் அடியோடு வெறுத்தார். கிழக்கு மாகாணத் தமிழ் பேசும் மக்களை ஒரே கட்சி ஒரே தலைவன் என்ற கோட்பாட்டின்கீழ் கொண்டுவர அயராது உழைத்து அதில் வெற்றியும் பெற்றார். குடியேற்றத் திட்டங்களினால் திருமலை, மூதூர் பகுதிகள் சிங்களப் பிரதேசமாக மாறுவதின் ஆபத்தை உணர்ந்து அதை தடுத்துநிறுத்த முழுமூச்சுடன் போராடிய பெருமையும் திரு ஏகாம்பரத்துக்கு உண்டு.

### சரித்திரத்தில் இடம்

அரசியலில் அமரர் ஏகாம்பரம் தீவிரமாகப் பணிபுரிந்தது சொற்பகாலம்தான் என்றாலும் அவர் ஆற்றிய பணி மலையளவு என்று கூறினால் மிகையல்ல. இலங்கைத் தமிழ் பேசும் இனத்தின் விடுதலைச் சரித்திரத்தை எதிர்கால சரித்திர ஆசிரியர்கள் எழுதும் போது, அதில் அமரர் ஏகாம்பரனுருக்கு மதிப்புள்ள இடத்தை நிச்சயம் கொடுப்பார்கள் என்பதில் எள்ளளத்தனையும் சந்தேகம் இல்லை.

> மூதூர் முதல்வராக விளங்கி தமிழுரிமைப் போராட்டத்தில் களக்காவு ஏற்ற அமரர் ஏகாம்பரம் அவர்களின் 6-வது சிரார்த்த தினம் இம் மாதம் 22ந் திகதி நினைவு கூரப்பட்டது. அதையொட்டி இக்கட்டுரை இங்கு இடம் பெற்றுள்ளது.

### "எல்லாளன் ...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

[illegible] விரைவில் ஒரு நிறுவகமாக ஆக்கப்படும். எல்லாம் தமிழியக்கத் தொண்டர்களாக முன்னர் சேர்ந்தவர்களையும் இப்பொழுது சேர விரும்புவர்களையும். என்னுடன் விரைவில் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்!

### வைராக்கியம்

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

முள்ளுக்குத்து மலையே மூச்சற்று அடங்கியது. எங்கும் திகைப்பு! நான் ஓடி கதிர்மலையைத் தூக்கினேன். கூட்டம் கூடிவிட்டது. ஆஸ்பத்திரிக்குத் தூக்கிப் போக முயன்றோம். கதிர்மலையின் கைகள் தடுத்தன. தண்ணீர் அள்ளி வாயில் ஊற்றினேன்.

கதிர்மலையின் கைகள் என் கரத்தை நடுக்கத்துடன் தட்டுண்டு பற்றியது. எனக்கு அழுகை எல்லை மீறிவந்தது! அடக்கமுடியவில்லை.

'இறைவா ... கதிர்மலையையும் பறித்துக் கொள்ளப் போகிறாயா?' அமைதி. பயங்கர சாக்காட்டு அமைதி;

கதிர்மலையின் வாயிலிருந்து உதிர்ந்த கடைசி வார்த்தைகள். 'என் அண்ணன் மகனை எனக்குக் கொள்ளிவைக்கச் சொல்லு...' கதிர்மலையின் உடலுக்கு இப்போது 'பிணம்' பெயராகி விட்டது. சோதனைகளுக்கும். வேதனைகளுக்கும் விளையாட்டுக்களமாக அமைந்த கதிர்மலையின் ஆவி-வாழ்வு முடிவை நோக்கிப் பயணம் சென்றதோ காலதேவனே உனக்கு கருணை கூடுகளவு கூட இல்லையா? எல்லோரும் இறைவனை நொந்து கொண்டார்கள்.

என் கண்களில் பனித்த நீர்த்திவலைகளை, விரல்களால் துடைத்தேன். எனது மனைவி அண்ணனை இழந்து விட்ட சோகத்தில் மூலையிலே சுருண்டு கிடந்தாள். ஒன்றன் பின் ஒன்றாக இரு அண்ணன்மார்களையும் இழந்துவிட்ட என் மனைவிக்கு இனி 'அண்ணை' என்று கூப்பிட ஒரு சகோதரன்...இல்லையே...? கொடுமை!

இன்று கதிர்மலைக்கு 'எட்டுக் கும்பிடல்' அதற்குப் போக வேண்டுமே...'

'அப்பா! அம்மா!' அதோ எனது மகன் தொட்டிலில் கிடந்தபடியே அழுகின்றதே.

ஆமாம் அவனைத் தூக்கப் போக வேண்டும். அதற்குள்...

கதிர்மலையை நான் 'தியாகி' என்றால் நீங்கள் கோபிக்க மாட்டீர்கள். ஆனால், அவனை 'ஒட்டிய மட்டில்' வைராக்கியத்தின் வரம்பிற்கும்; விளிம்பிற்கும்தான் அவன் செய்கைகள் ஆட்பட்டதாம்.

நீங்கள் எப்படி நினைக்கிறீர்களோ...?

(யாவும் கற்பனை)

### மக்கள் குரல்

(6-ம் பக்கத்தொடர்ச்சி)

கல்வி அமைச்சர் அவர்கள் தமிழ்ப்பேசும் மக்களின் தன்மானப் போராட்டத்தையும் தமிழ்ப் பிரதேசப் பாதுகாப்பு வேட்கையையும் கண்டிகளிக்க விரும்பினால் மனத்தாலும் நினைக்கமுடியாத மறைந்து சென்ற சம்பவங்களைப் பார்த்துப் பரவசமடைய விரும்பினால், பொறுப்பற்ற மேற்படி கருத்துக்களைத் தொடர்ந்து சொல்லிலும் செயலிலும் உறுதிப்படுத்தட்டும். இன்றேல் அமைச்சர் தான் கூறிய கருத்தை உடன் வாபஸ் வாங்க வேண்டும் எனவும் உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவதை உடன் மறந்துவிட வேண்டுமெனவும், தேசிய ஐக்கியத்தை விரும்பும் காரணத்தால் பொதுநலத் தமிழ் பேசும் வாலிப முன்னணி வலியுறுத்துவதோடு இது விடயத்தில் தமிழப்பேசும் தலைவர்கள் என்ன செய்யக் காத்திருக்கிறார்கள் என்பதையும் எமது முன்னணி பார்த்துப் பொறுமையோடு இருக்கின்றது.

செ. ப. ஈழத்துநாதன்.
செயலாளர். பொ.ந.த.வா.மு.
திருமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவில்லாதவன்

மனிதன் செய்கின்ற தவறுகளில் மிகப் பெரிய தவறு — தன்னை 'அறிவில்லாதவன்' என்று நினைப்பது. அதைவிடப் பெரிய தவறு தன்னைப் போன்ற மற்றொருவனை 'அறிவில்லாதவன்' எனக் கருதுவது. எல்லாவற்றிலும் மிகப் பெரிய தவறு ஒருவனை நோக்கி ''நீ அறிவில்லாதவன்'' எனக் கூறுவது.

'நீ அறிவில்லாதவன்' என்ற இச் சொற்றொடரை—அறிவில்—ஆதவன் என்றும், அறிவு—இல்லாதவன் என்றும் பிரித்துப் பொருள் கூறலாம். ஆதவன் என்பது சூரியனை. முன்னது உயர்வு; பின்னது தாழ்வு.

நான் கண்ட மக்களில் எவரையும் அறிவில்லாதவராகக் கண்டதில்லை. எல்லோரிடத்தும் அறிவு இருந்துகொண்டு தான் இருக்கிறது. மக்கள் என்ன? நடப்பன, பறப்பன, ஊர்வன, நீர் வாழ்வன ஆகிய அனைத்துமே அறிவுடையனவாகக் காணப்படுகின்றன. நமது முன்னோர்களுங்கூட இவற்றை ஓரறிவு உயிர்; ஈரறிவு உயிர் எனக் குறிப்பிட்டுக் கூறினரேயன்றி அறிவில்லாதவை எனக் கூறியதே இல்லை!

தம்பி! ஒவ்வொருவருக்கும் அறிவு இருக்கிறது என்பதை நீ முதலில் ஒத்துக்கொள்! அந்த அறிவை பட்டை தீட்டப்படும் ஒரு வைரக்கல்லுக்கு ஒப்பிடு! அதை அவரவர் தம் தம் முயற்சியால் உலகமாகிய சாணைக்கல்லில் தீட்டி வருகிறார்கள் என்றும் நினை. எந்தப் பக்கத்தில் தீட்டுகிறார்களோ, எவ்வளவுக்குத் தீட்டுகிறார்களோ, எத்தனை பட்டை போடுகிறார்களோ, அத்தனை பட்டைகளிலும் அவ்வளவுக்கவ்வளவு ஒளி வீசும் என்று கருது!

ஒருவன் தன் அறிவை வர்த்தகச் சாணையில் தீட்டிக்கொண்டு வியாபாரியாக உட்கார்ந்திருப்பான். மற்றொருவன் தன் அறிவைப் புலமைச் சாணையில் தீட்டிக்கொண்டு குடியானவனாகத் தோன்றுவான். இன்னொருவன் வைத்தியச் சாணையில் அறிவைத் தீட்டிக்கொண்டு மருத்துவனாகக் காட்சி அளிப்பான். இன்னும் ஒருவன் தனது அறிவைத் திருட்டுச் சாணையில் தீட்டிக் கொண்டு திருடனாக இருந்து வருவான். ஒருவன் பத்திரிகை நிலையத்தில் தீட்டுகிறான். ஒருவன் பலகாரக் கடையில் தீட்டுகிறான். ஒருவன் கன்னம் வைக்கத் தீட்டுகிறான். எவனெவன் தனது அறிவை எந்தெந்தப் பக்கத்தில் எந்தெந்தச் சாணையில் தீட்டுகிறானோ அவனவன் அந்தந்தத் துறையிலே ஒளிவீசி நிற்பான்.

இந்தியாவுக்கு வந்திருந்த மேல்நாட்டுத் தொழிலறிஞர் ஒருவர் தமிழ் நாட்டு பட்டு—ஜரிகை நெசவுக் கைத்தொழிலைக் கண்டு வியப்படைந்து சென்றார். ஒரு மாகாணத்தின் பிரதம மந்திரி தமிழ் நாட்டிற்கு வந்திருந்தபோது ஒரு மண் ஒட்டன் ஆயுதம் எதுவுமின்றித் தன் கையாலேயே சுவர் வைக்கும் கலையைக் கண்டு மலைத்துப்போனார். நம் சென்னை மாகாணத்தின் முந்திய கவர்னர் ஒருவர்...... குயவன் சுற்றுகிற திரிகையையும் அவன் கை கோகிற போக்கையும், பானை உருவாகிற தோற்றத்தையும் கண்டு அப்படியே வாயைப் பிளந்து நின்று விட்டார். தம்பி! இதில் யார் அறிவுடையவர்? யார் அறிவில்லாதவர்?

கூறவேண்டுமானால் — மந்திரிக்கு இருக்கும் அறிவு மண் ஒட்டனுக்கு இல்லை; ஒட்டனுக்கு இருக்கும் அறிவு மந்திரிக்கு இல்லை; கவர்னருக்கு இருக்கும் அறிவு குயவனுக்கு இல்லை; குயவனுக்கு இருக்கும் அறிவு கவர்னருக்கு இல்லை என்றுதான் கூறியாக வேண்டும்.

சுருக்கமாகக் கூறவேண்டுமானால் படிப்பில்லாத பெண்களிடம் உள்ள ஒப்பாரி வைக்கும் அறிவு தொல்காப்பியத்துக்குப் பொருள்கூறும் புலவனிடம் இல்லை என்று கூறி விடலாம்!

ஒருவன் தன் அறிவுக் கல்லை...... வேளாண்மை, மேடைப்பேச்சு, மருத்துவம், வியாபாரம், எழுத்து, இல்வாழ்வு, நிர்வாகம், அரசியல் ஆகிய சாதனைகளில் தீட்டி பல பக்கமும் பட்டைபோட்டு பல துறைகளிலும் ஒளிவீசி நிற்பான்; மற்றொருவன் ஒன்றிரண்டு பக்கங்கள் மட்டும் தீட்டி, அத்துறையில் ஒளிவீசி நிற்பான். இது உண்மையே யாயினும், இவர்களைக்கூட அதிகமாக அறிவுக்குப் பட்டை போட்டுக் கொண்டார்கள் என்று கூற வேண்டுமேதவிர, அறிவே இல்லாதவர்கள் என்று கூறி விடமுடியாது!

ஆகவே, தம்பி இதுகாறும் கூறியவற்றுள் மக்கட் பிறவியில் ''அறிவில்லாதவன்'' என்று எவரும் இல்லையென்பதை ஒருவாறு உணர்ந்திருப்பாய் என்று நம்புகிறேன்.

இனிமேலாவது பிறர் எவரையும் 'அறிவில்லாதவன்' என்று கருதாதே, கூறாதே! உன்னையும் அறிவில்லாதவன் என்று நினையாதே! பிறர் அவ்வாறு கூறினாலும் நம்பாதே. நீ யென்றால் உன்னிடம் இயல்பாகவே அமைந்துள்ள அறிவுக் கல்லுக்குப் பல பக்கங்களிலும் பட்டைபோட்டு பல துறைகளிலும்கூட ஒளிவீசச் செய்ய உன்னால் முடியும்.

இவ்வளவும், படித்துவிட்டு சாணைக்கூடம் எங்கே இருக்கிறது? சாணை எங்கிருக்கிறது! என்று தேடி அலைந்து திரியாதே! உலகமே சாணைக்கூடம்தான்! பள்ளிக்கூடம் தான்! பள்ளிக்கூடமே வடிக்கும் சாணை! கேள்வியே கயிறு! உணர்ச்சியே கைக்கோல்! முயற்சியே உருளை! முயற்சியே உருளை! ஆராய்ச்சியே உழைப்பு! அனுபவமே பட்டை! இத்தனையும் ஆன பிறகு எடு திருக்குறளை! ஏற்று மெருகை! எவரை மறந்தாலும் திருவள்ளுவரை மறந்து விடாதே! இவ்வுலகிலேயே முழு அறிவுபெற்ற ஒரு முழு மனிதர் அவர் ஒருவரேயாவர்! தமது அறிவுக் கல்லுக்கு எல்லாப் பக்கங்களிலும் பட்டை போட்டுக்கொண்டவர் அவர் ஒருவரே! அவர் தந்த மாணிக்கமே 133 பட்டையோடு எல்லாத் துறைகளிலும் சுடர் ஒளி வீசிக்கொண்டிருக்கும் திருக்குறள்!

அறிவு ஒளி எங்கும் வீசட்டும்!

அறிவுலகம் நன்கு வாழட்டும்!!



முத்தமிழ்க் காவலர்

## கி. ஆ. பெ. விசுவநாதம்

# பத்திரிகை

அறிவை வளர்க்கும் பத்திரிகை — இது
அற்புதமான பத்திரிகை! மனச்
செறிவுக் குகந்த கருத்துக்களை — தரும்
சிறப்பு மிக்க பத்திரிகை!

நாட்டில் நடக்கும் நிகழ்ச்சிகளை — நமக்
கழகாய் அறியத் தந்திடுமே! தேன்
சொட்டும் கவிதை நெஞ்சையள்ளும் — நற்
கட்டுரை கதைகள் தந்திடுமே!

உலகச் செய்திகள் சுடச்சுடவே — தரும்
உன்னதமான பத்திரிகை! இது,
'கலக' — 'கழக'ச் செய்திகள் நல்கும் — மிகு
அருமையான பத்திரிகை!

உலகத் தறிஞர் வரலாறுகளை — சுவை
மேலிடக் கூறும் பத்திரிகை! கலை,
இலக்கிய அறிவியல் பத்திரிகை! — இது.
உள்ளங் கவர்நல் பத்திரிகை!

நோ. மணிவாசகன்.

# தெரிந்தவைதான் ஆனால் மறந்து விட்டிருப்பீர்கள்

—: :—

உலகிலேயே பெரிய மலைத் தொடர்—ஹிமாலய மலைத் தொடர்.
,, நீளமான மலை—ஆண்டஸ்.
,, பீடபூமி - திபேத்.
,, நீளமான ஆறு—மிஸிஸிபி—மிசூரி (4202 மைல் நீளம்)
,, அகலத்தில் பெரிய ஆறு—அமெஸன்.
,, ஆழமான கடல்—பசுபிக் மகாசமுத்திரம்.
,, பெரிய சாலை—மௌண்ட் ஈவன்ஸ். ஹைவே கொலேரேடா (அமெரிக்கா)
,, பெரிய தீவு—கிரீன்லாந்து. (8,46,740 சதுர மைல்)
,, ஜனநெருக்கமுள்ள இடம்—மெனகோ (சதுர மைலுக்கு 33,898 பேர்)
,, வெப்பமான இடம்—வடமேற்குச் சஹாராவும், இந்தியாவின் வடமேற்கிலுள்ள தார் பாலைவனமும்.
,, பெரிய கண்டம்—ஆசியா.
,, தீபகற்பம்—இந்தியா.
,, பாலைவனம்—சஹாரா (ஆபிரிக்கா)
,, சிகரம்—எவரெஸ்ட் (29,002 அடி)
,, ஜனநெருக்கமான நாடு—சீனா
,, மழை அதிகமாகப் பெய்யுமிடம்—அஸ்ஸாமிலுள்ள சிரபுஞ்சி.
,, பெரிய மலை—தென் அமெரிக்காவிலுள்ள கிம்பரோஜா (20702 அடி)
,, பெரிய நாடு—ரஷ்யா.
,, நீளமான ஒரே நேரான வழி—பிராட்வே நியூயார்க் (14300 அடி)

# கதை சொல்லும் கணக்கு

ஒரு ஊரில் ஏழைக் குடியானவன் வாழ்ந்து வந்தான். அவன் பெயர் அலிமத். அவன் முட்டைகள் விற்பவன். அம்முட்டையில் வரும் ஆதாயமே அவன் வாழ்க்கைச் செலவு. ஒருபொழுது அந்த ஏழைக் குடியானவன் சொற்பதொகைமுட்டைகளைக் கொண்டு சென்றான். வழியில் ஒரு கள்வர் கூட்டம் எதிர்த்தது. அவர்களில் சாலிது, காமிது, மம்முகா, நாகராசா என்ற பேர்களையுடைய நால்வர் முட்டை வியாபாரியை நிறுத்தி பயமுறுத்தினர். அப்போது அக் கள்வர்கள் அவன் கூடையில் வைத்திருந்த முட்டைகளைத் தட்டிப் பறித்துச் சென்றனர். இக் காட்சியை பக்கத்திலே நடந்து தண்ணீர் அள்ளச் சென்ற ஹம்தூன், மசூதா, மீனாட்சி, புவனம் எனும் நான்கு பெண்களும் பார்த்தனர். துக்கத்தில் ஆழ்ந்திருந்த வியாபாரியிடம் வந்து ஆறுதல்கூறி நீதிமன்றத்துக்கு அழைத்துச் சென்றனர். நீதிபதியாக ''வித்தகர்'' அண்ணா வீற்றிருந்தார். பக்கத்திலே கோபு அண்ணாவும் இருந்தார். மேற்படி சம்பவம் விசாரிக்கப்பட்டபோது நீதியரசர் வியாபாரியிடம் ''நீ வைத்திருந்த முட்டைகள் எத்தனை'' என்று கேட்க அதற்கு வியாபாரி ஐயா, ஒரு தானம் உண்டு, அதை 2, 3, 4, 5, 6 ஆகிய எண்களால் தனித்தனியே பிரித்தால் ஒன்று மிச்சம் வரும். ஆனால் அதை 7 என்ற எண்ணால் பிரித்தால் மிச்சம் வராது. அத் தொகையே எனது முட்டை என்றான் வியாபாரி. விழித்தனர் சபையோர். கோபு அண்ணா இதை எழுதிக்கொண்டார். ஆனால் அவருக்கும் விடை தெரியாது. எங்கே நீங்கள் சொல்லுங்கள் பார்க்கலாம்? விடை அடுத்த வாரம்.

—இக்பால்

விடத்தல்தீவு.

# உங்களுக்குத் தெரியுமா?

நைலோனில் கலந்துள்ள மூலப் பொருட்கள் எவை?

●

யூகலிப்டஸ் என்னும் மரம் அதிக பட்சம் எத்தனை அடி உயரம் வளரும்?

●

கலஉபி தின்றால் ஓர் அவல் கிடைக்காதா? இச் சூத்திரம் காலஞ் சென்ற ஓர் தமிழ் ஆராய்ச்சியாளர் தம் வாழ்நாளில் கூறி வந்தார். அவர் யார்?

●

உலகிலேயே மிகப் பெரிய சூதாடும் நகரம் எது?

●

தேனீக்கு எத்தனை வயிறுகளுண்டு?

●

மேனாட்டவர் 6வது திருமண விழாவை என்ன விழாவென்று கொண்டாடுவர்?

●

டிஸ்ஸி (Dizzy) என்ற செல்லப் பெயரால் அழைக்கப்பட்ட பிரிட்டிஷ் சரித்திரப் புருஷர் யார்?

## பதில்கள்

(அ) கரி (ஆ) பிராணவாயு (இ) நைட்ரஜன் (ஈ) ஹைட்ரஜன்.

★

500 அடி வளர்ந்த மரமொன்று ஆஸ்திரேலியாவிலிருந்ததுண்டு.

★

உ. வே. சாமிநாத ஐயர்

★

லாஸ் வாக்ஸ் (Lasvages) அமெரிக்காவிலுள்ளது.

★

இரண்டு.

★

சர்க்கரை விழா.

★

பெஞ்சமின் டிஸ்ரேலி.



ஆசிரியர்: உன்னிடம் உள்ள ஐம்பது சதத்தில் முப்பது சதத்தை கோபுவுக்குக் கொடுத்தால் எவ்வளவு மீதி இருக்கும்?

மாணவர்: அதெப்படி சார் ஏன் பணத்தை அவனுக்குக் கொடுப்பது, வேண்டுமானால் அவனைத் தரச் சொல்லுங்கள் எண்ணிப் பார்த்துச் சொல்கிறேன்.

''இளமதி''

எட்டியாந்தோட்டை.

# மாணவர் அரங்கு

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# 3வது வெற்றி வாரம்!

செல்லமகால் (கொழும்பு)

முத்துராமன், விஜயகுமாரி, காஞ்சனு, ஏ. வி. எம். ராசன்
நாகேஷ், எம்.வி. இராசம்மா நடிக்கும்



# கொடி மலர்

# தமிழ்ப் புத்தாண்டைக் கொண்டாட

சிலோன் தியேட்டர்ஸ் திரைகளில் திரையிடப்பட விருக்கிறது

விச்சந்திரன், கே. ஆர். விஜயா, ஷீலாதேவி, டி. எஸ். பாலையா
பாலாஜி ஸ்ரீராம் நடிக்கும்




# இதயகமலம் (ஈஸ்ட்மன்கலர்)

# இப்பொழுது வெற்றி முரசு கொட்டுகிறது!

எழில்கொண்டு கலேகண்டு தமிழ்கண்டு சுவைகொண்டு அமிழ்தென்று பெயர் கொண்ட வெற்றிவேலின் வீர வரலாறு!

ஈரோஸ் (பாமன்கடை)

சென்ட்ரல் (மருதானை)

ஜெஸீமா (கிருண்பாஸ்)

ராஜேஸ்வரா (மட்டுநகர்)

லிபர்ட்டி (அட்டன்)

ராணி (யாழ்ப்பாணம்)

ஆகிய திரைகளில்!



நடிகர் திலகம்
சிவாஜி கணேஷன்
ஜெமினி கணேஷன்
சிவகுமார்
அசோகன்
பாலாஜி
ஈ. ஆர். சகாதேவன்
முத்துராமன்
ஏ. வி. எம். ராஜன்
நாகேஷ்

நடிகையர் திலகம்
சாவித்திரி
ஜெயலலிதா
கே. ஆர். விஜயா
கே. பி. சுந்தராம்பாள்
எஸ். வரலக்ஷ்மி
ஜி. சகுந்தலா
அம்பிகா
மனேரமா

மற்றும் பலர் நடித்த

ஏ. எல். எஸ். புரொடக்ஷன்ஸ்

# கந்தன் கருணை

(ஈஸ்ட்மென் கலர்)

இசை: திரை இசைத்திலகம் கே. வி. மகாதேவன்   திரைக்கதை வசனம் டைரெக்ஷன்: ஏ, பி. நாகராஜன்   பாடல்கள்: கவியரசு கண்ணதாசன்

# 4-வது வெற்றி வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு)   வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

எம். ஜி. ஆர்., சரோஜாதேவி
ராதா அசோகன் நடிக்கும்



# தாயின் மடியில்

# இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

கெப்பிட்டல் (கொழும்பு)   பிளாசா (வெள்ளவத்தை)

நவா (கும்பனித்தெரு)   விஜயா (மட்டுநகர்)   ஸ்ரீகிருஷ்ணு (திருமலே)

மோடேன் (பண்டாரவளை)   நியூசினிமா (குருநாகல்)   பிறின்ஸ் (காலி)

சந்தியா (கம்பளை)

ஜெய்சங்கர், எல். விஜயட்சுமி, அசோகன்
வசந்தா, மனேகர், தங்கவேலு நடிக்கும்

மொடேன் தியேட்டர்சாரின்



# இரு வல்லவர்கள்


இப்பத்திரிகைத் சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டாரால் [illegible] பண்டாரநாயக்கா விதி, 194, ஏ, இலக்கத்தில்
1967-ம் வருடம் மார்ச் மாதம் 25-ம் திகதி சனிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org